www.padippakam.com

விலை ரூ.7-

# சிந்தனையாளன்

திருவள்ளுவராண்டு 2032 பெரியாராண்டு 122 செப்டம்பர் 2001

## பெரியார் பிறந்தநாள் சிறப்பிதழ்



- தமிழ்நாட்டு அரசு வரவு-செலவுத் திட்டம்
- பெரியார் பிறந்தநாள் : சுயமரியாதைக் கொள்கையை வென்றெடுக்க, வாரீர் !
- தமிழ்நாடு தமிழருக்கே ! நாம் பலியாகித்தான் பெறமுடியும் !

படிப்பகம்

www.padippakam.com

## உள்ளே...

### தலையங்கம்


* தமிழ்நாட்டு அரசு வரவு செலவுத் திட்டம் 1
  - வே.ஆனைமுத்து


### கட்டுரைகள்


* தமிழ்நாடு தமிழருக்கே! நாம் பலியாகித்தான் பெற முடியும்!
  - ஈ.வெ.இரா. 5
* காரைக்குடியில் மார்க்சியச் சிந்தனையாளர்கள் மாநாடு 15
* தந்தை பெரியார் பிறந்த நாள்
  - வே.ஆனைமுத்து 16
* இந்திராகாந்தி கோழிக்குஞ்சு திருடினார்
  - ஓலைப்பட்டி கந்தையா 22
* உழு தொழிலா? அழு தொழிலா?
  - து.தில்லைவனம் 26


### கவிதை


* செப்டம்பர் பதினேழு
  - தமிழேந்தி


### மலேசியத்தமிழறிஞர்பரிதிதாசன்பிறந்தநாள்விழா



மலேசியத் தமிழறிஞர் பரிதிதாசன் - (பி.எஸ். வெங்கடேசன்) தம் 67 ஆம் பிறந்த நாள் விழாவினை, 24.8.2001 மாலை, சென்னை அண்ணாநகர் அபூர்வா உணவு விடுதியில், நண்பர்கள் புடை சூழச் சிறப்புறக் கொண்டாடினார். இவர் தமிழில் நான்கு சிறந்த நூல்களைப் படைத்துள்ளார்.


## சிந்தனையாளன்

(தமிழ் மாத இதழ்)

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ.7 |
| ஓர் ஆண்டுக் கட்டணம் | ரூ.80 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ.1000 |

*வாழ்நாள் கட்டணமாகப் பகுதித் தொகை செலுத்தியவர்கள், மீதித் தொகையை அனுப்புங்கள்*

பணம், டி.டி. அனுப்பிட

'சிந்தனையாளன்'

SINTHANAIYALAN

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம்

சென்னை - 600 005.

தொலைபேசி: 852 28 62.


## பெரும்புலவர் அ நக்கீரன் பவழவிழா



பெரும்புலவர் அ நக்கீரன் அவர்களின் பவழவிழா 3.7.2001 அன்று மாலை 5.30 மணிக்கு தேவநேயப் பாவாணர் நூலகக் கட்டடத்தில் வே.ஆனைமுத்து தலைமையில் சிறப்புற நடைபெற்றது. விழாவில் முனைவர் பொற்கோ அவர்கள் அடிப்படைத் தமிழ்ப் பயிற்சி பற்றி தொடக்கவிழா ஆற்ற, புலவர் அ. நக்கீரர் மக்கள் நல அறக்கட்டளை தொடக்கவிழா உரையை பேரா. இராம. சுப்பிரமணியன் அவர்கள் ஆற்றினார். பா. இறையெழிலன் வரவேற்புரை ஆற்றினார். முனைவர் இரா. மதிவாணன், து. தங்கவேல் கோபாலர், பெ.சு.வெற்றிவேல், இ. திருவள்ளுவன், தி. ரோமசுந்தரத்தேவர், ஆ. வீராசாமி, டாக்டர். கு. வெற்றியழகன், புலவர். அ. சித்திரவேலன், கவிஞர்.மு. கருணாநிதி ஆகியோர் வாழ்த்துரை வழங்கிட, பெரும்புலவர் அ. நக்கீரன் ஏற்புரை ஆற்றினார். முனைவர் க. கந்தசாமி நன்றியுரை நவில விழா இனிதே நிறைவுற்றது. விழாவில் நக்கீரன் அவர்கள் 'பெரியார் ஈ.வெ.இரா. சிந்தனைகள்' நூல் வெளியீட்டுக்காக ரூ.5000 வே.ஆனைமுத்துவிடம் வழங்கினார்.

செய்தி: கோ. அருண்மொழி

## இனி ஆங்கிலம் ஒன்றே!

இன்றுதமிழ் நாட்டினிலே இருக்கின்ற கட்சிகளில்
எதுவுமே நல்லதில்லை!
எரிகின்ற கொள்ளிகளில் எதுநல்ல தென்பதாம்!
எல்லாமிங் கொன்றுதானே!
கொன்றன்ன இன்னாசெய் தாலுமதை யிந்நாட்டில்
குற்றமெனக் கருதுவோர் யார்?
கொள்ளையிடப் பொதுச்சொத்து! கூடவரக் குண்டர் படை!
கொண்டாட்டங் கொண்டாட்டமே!
ஒன்றன்று! நூறன்று! ஓராயி ரங்கோடி!
ஊரறியக் கொள்ளையிட்டாள்!
ஒழிந்துவிடு வாளென்று நம்பியிருந் தோம் மீண்டும்
உரம் பெற்று வந்துவிட்டாள்!
நன்றொன்று செய்தாலும் நாம்பழைய தைமறப்போம்!
நல்லசெயல் ஒன்றுமில்லை!
நல்லவரை வல்லவரை நாடாள விடுவதில்லை!
நம்மக்கள் உணர்வ தெந்நாள்?
எங்கெங்குந் தமிழென்றும் சங்கேமு ழங்கென்றும்
இங்கொருவர் முரசுகொட்ட,
இனியென்ன தமிழுக்கு மேன்மேலும் ஏற்றமென
எண்ணியிறு மாந்தி ருந்தோம்!
இங்கெங்குந் தமிழில்லை! இனியாங்கிலம் ஒன்றே!
என்றநிலை வந்துற்றதே!
எந்தமிழைப் புறக்கணித்துத் தோற்றவருஞ் சாய்க்கடையில்
எடுத்தெறியப் பட்டுவிட்டார்!
அங்கிங்கெனாதபடி எங்கெங்கு மாங்கிலத்தை
இனிமீண்டும் ஏற்றிவைப்பாள்!
அழுதாலும் புரண்டாலும் பயனில்லை! அவரழிவை
அவராகத் தேடிக் கொண்டார்!
சங்கம்வ ளர்த்தெடுத்த தமிழின்று நலிவுற்றுச்
சாகுமென வஞ்சுகின்றோம்!
தமிழென்று முழங்கியவர் தன்னலத்தை முன்வைத்த
தால்தமிழும் தாழ்ந்ததன்றோ?

— பொறிஞர் கு.ம. சுப்பிரமணியன்

### தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் 500 பேர் கைது

26.8.2001 அன்று சென்னை இராயப்பேட்டையில் தந்தை பெரியார் திராவிடர் கழகத்தினர் கோவை இராமகிருஷ்ணன் தலைமையில் பிள்ளையார் ஊர்வலத்திற்கு எதிராக மதவெறி எதிர்ப்பு ஊர்வலம் நடத்திய பொழுது காவல் துறையினரால் 500 பேர் கைது செய்யப்பட்டு சிறை சென்றனர்.

படிப்பகம்

www.padippakam.com

**சமதர்மக் காவலர்கள்**



மார்க்சு  லெனின்  சிங்காரவேலர்  பெரியார்

**சமூகநீதிக் காவலர்கள்**



புலே  பெரியார்  அம்பேத்கர்  லோகியா

# சிந்தனையாளன்

சுவடி : 24  மாத இதழ்  ஏடு:1

இந்தியாவில் பொதுவுடைமை மலர மார்க்சிய - பெரியாரிய நெறியில் தேசிய இனவழிப்பட்ட சம உரிமை உடைய சமதர்மக் குடிஅரசுகள் ஒருங்கிணைந்த உண்மையான கூட்டாட்சி அமைய ஆவன செய்தல்

### கொள்கை முழக்கம்

உலகத் தொழிலாளர்களே
ஒன்று சேருங்கள்

- மார்க்ஸ்- எங்கெல்ஸ்

ஒடுக்கப்பட்ட தேசிய இன மக்களே
ஒன்று சேருங்கள்!

- லெனின்

ஒடுக்கப்பட்ட வகுப்பு மக்களே
ஒன்று சேருங்கள்!

- பெரியார்

ஆசிரியர்
**வே.ஆனைமுத்து**

**ஆசிரியர் குழு**
வே.ஆனைமுத்து
சங்கமித்ரா
க.முகிலன்
து.தில்லைவனம்
தமிழேந்தி
க.நாகராசன்
வாலாசா வல்லவன்
மங்கலம் அரசன்

*இதழ் வடிவமைப்பு:*
**கோ. அருண்மொழி**

சென்னை செப்டம்பர் 2001
விலை ரூ.7/-

# தமிழ்நாட்டு அரசு வரவு செலவுத் திட்டம்

*2001 - 2002* ஆம் நிதி ஆண்டுக்கான தமிழ் நாட்டு அரசின் வரவு செலவுத்திட்டம் ரூ.*24,000* கோடியைத் தாண்டிவிட்டது. இந்த ஆண்டுக்கான திருத்தப்பட்ட ஒட்டு மொத்தப்பற்றாக்குறை ரூ.*827* கோடி எனக் கூறப்பட்டுள்ளது. இதில் ஒருபகுதியையாவது ஈடுகட்ட வேண்டும் என்பதற்காக ரூ *135* கோடிக்குப் புதிய வரிகள் விதிக்கப்பட்டுள்ளன. புதிய வரிகள் விதிக்கப்படுவது தவிர்க்க முடியாதது.

ஆனால் கோடிக்கணக்கான மக்களுக்குப் பயன்தரும் கைப்பம்புகள், மண்ணெண்ணெய் அடுப்புகளின் பாகங்கள் மற்றும் 12 அடிச்சரக்கு இனங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்குக் கொடுத்திருக்கிற அரசு, அதே நேரத்தில், இருசக்கர மோட்டார் சைக்கிள், 3 சக்கர வண்டிகள், எவர் சில்வர் பொருள்கள், கையால் தயாரிக்கப்படும் சோப்புகள் மீது 12% சமச்சீர் வரி விதித்திருப்பது வேண்டத்தகாத ஒன்று.

தமிழ்நாட்டு அரசு மொத்த வருவாயில் 70% அரசு ஊழியர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் ஊதியம் தரவும்; 24% ஓய்வு பெற்ற இவர்களுக்கு ஊதியம் தரவும் செலவாகி விடுவதாகக் கூறிவிட்டு, மொத்தத் தொகையில் மக்கள் நலப்பணிகளுக்கு 6% தொகை மட்டுமே செலவிட வேண்டியுள்ளது என்பது பொருந்தாது.

ஒரு மக்கள் நல அரசு கல்வி தருவதற்குச் செலவிடும் தொகையையும், மக்களுக்கு வைத்தியம் செய்வதற்குச் செலவிடும் தொகையையும், பொருள் உற்பத்தி சாராத தொழில்களில் செலவிடப்படும் வீண் முதலீடு என்று கருதுவது கொஞ்சமும் பொருந்தாது. இது மக்கள் நலனுக்கு எதிரான நோக்கமும் கொள்கையும் ஆகும். அதற்கு மாறாகச், செலவாகும் தொகைக்கு ஏற்ப, கல்வி வளர்ச்சி, வைத்திய வசதி திறமையாகப் பெருக்கப்படுகிறதா என்பதைத் தான் அரசு கவனிக்க வேண்டும்.

www.padippakam.com



உண்மையில் இந்தியா முழுவதிலும் கல்வித் துறையும் மருத்துவத் துறையும் மிகவும் சீரழிக்கப்பட்டு விட்டன. இதற்கு இத்துறைகளில் அரசியல் கட்சிகளின் - ஆளுங் கட்சிகளின் தலையீடும், வேலைக்கு அமர்த்தம் - இடம் மாற்றம் இவற்றில் ஊடாடிவிட்ட இலஞ்சமும், அரசு அலுவலரிடையே சாதி அடிப்படையிலான உணர்ச்சியும் பொறுப்பற்ற தன்மையும் தலைதூக்கி விட்டமையும் பொதுவான காரணங்கள் ஆகும்.

மேலும் இந்திய அரசு கல்விக்கும் - குறிப்பாகத் தொடக்கக் கல்விக்கும், ஊர்ப்புற வைத்திய வசதிக்கும் ஒதுக்கீடு செய்கிற திட்டத் தொகை மிகவும் குறைவானது. இது 1980க்குப் பிறகு கடந்த இருபது ஆண்டுகளில் படுவேகமாகக் குறைந்து விட்டது.



போர்க்கருவிகளை ஆக்கவும், இறக்குமதி செய்யவும், படைவலிமை யைக் கூட்டவும் ஓர் ஆண்டின் திட்டச் செலவில் 15% புதிதாக உயர்த்துகிற இந்திய அரசு - ஒட்டுமொத்தக் கல்விக்கு 3% தொகை மட்டுமே இப்போது ஒதுக்கீடு செய்வதைக் கண்டிக்க எந்த அமைப்பும் துணியவில்லை. கல்வித் துறையில் பணியாற்றும் ஆசிரியர்களோ, பேராசிரியர்களோ அறிவாளிகளோ மற்றும் பத்திரிக்கையாளர்களோ, அரசியல் வாதிகளோ இதுபற்றிக் கிஞ்சித்தும் கவலைப்படுவதில்லை. கல்வியில் இன்னமும் பின்தங்கியுள்ள இந்தியாவில் மொத்தத் திட்டத் தொகையில் 8% தொகையாவது கல்விக்கு ஒதுக்கப்பட வேண்டும். இதிலும் பெரும்பகுதி தொடக்கக் கல்விக்கு மட்டுமே ஒதுக்கப்பட வேண்டும். இது தான் மக்கள் நல அரசின் தலையாய கடமை என்பதை வெகு மக்களுக்கு அரசியல் கட்சியினரோ ஏடுகளை நடத்துபவர்களோ கல்வியாளர்களோ உணர்த்த முன்வரவில்லை. மக்கள் நலம் சார்ந்த முதலீடு **(Human Capital)** என்பது இதுவே ஆகும். இதற்குப், பண்ட உற்பத்திக் கண்ணோட்டம் கற்பிப்பது தவறு. இது முதலாளித்துவ அரசுக் கண்ணோட்டம் ஆகும். அதனால்தான், அரசுச் செலவில் தொடக்கப் பள்ளிகளைத் தொடங்குவது, வகுப்புக்கு ஓர் ஆசிரியரை அமர்த்துவது, கல்வித்துறைச் சீர்கேட்டைச் சீரமைப்பதற்கான கண்காணிப்புக்கு வழிகாண்பது என்கிற திட்டங்களுக்குத் தமிழ்நாட்டு அரசு கடந்த 20 ஆண்டுகளாகவே முதன்மை தரவில்லை. இது மிகவும் தவறானது.

இந்த நிலையில் நலிவுற்ற தாழ்த்தப்பட்ட வகுப்பு மகளிர் பட்டமேற்படிப்பில் அரசுக்கல்லூரிகளில் இலவசமாகப் படிப்புப் பெறவும்; 80 ஆயிரம் இவ்வகுப்பு மகளிர் +1, +2 வகுப்பில்படிப்போர் படிக்க வசதியாக 20 கோடி ரூபாய் செலவில் இலவசமாக மிதிவண்டிகள் தரவும்; பிற்படுத்தப் பட்டோர் - தாழ்த்தப்பட்டோர் மாணவர் விடுதிகளுக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய முன்வந்திருப்பதும்; சிற்றூர்ப்புறங்களிலுள்ள 810 மேல்நிலைப் பள்ளிகளில் படித்தவர்களுக்குத் தொழிற்படிப்பில் சேருவதற்கான இட ஒதுக்கீட்டை 15% என்பதிலிருந்து 25% ஆக உயர்த்தியதும் வரவேற்கத் தக்கவை.

அதே நேரத்தில், மாநில அரசுகளுக்கு முழு உரிமையும் இருந்த கல்வித்துறை, இந்திய அரசின் பொது அதிகாரப் பட்டியலுக்கு மாற்றப்பட்டு 24 ஆண்டுகளுக்கு மேல் ஆகியும் இது பற்றித் தமிழ்நாட்டு அரசோ, அரசியல் கட்சிகளோ கொஞ்சமும் வெட்கப்படாததும், இதை மாநில அரசு அதிகாரப்பட்டியலுக்கு மீட்டெடுக்காததும் மிகவும் இழிந்த நிலையாகும்.

மாநில அரசு, மாநிலத் தொழிற் படிப்பில் ஒற்றைச் சாளர முறையில் மாணவரைச் சேர்க்கவும், மாநில அரசு தாய்த்தமிழ் மொழியில் தொழிற் கல்வி தரவும் இந்திய அரசின் அனைத்திந்தியத் தொழில் நுட்பக் கல்வி ஆய்வுக்குழுமம் (AICTE) முட்டுக்கட்டை போடுவது தெரிந்த பிறகும் - நீதி மன்றங்களுக்குப் போவதிலேயே அரசு நாட்டம் கொள்ளுவது தவறு. மாநில அரசுக் கல்வி உரிமையை மய்ய அரசு பறித்துக் கொண்டு சட்டம் செய்தபிறகு, அந்தச் சட்டத்தையே மாற்றுவதற்குத் தான் மாநில அரசுகள் முயல வேண்டும்; தமிழ்நாட்டு அரசும் அதைத்தான் செய்ய வேண்டும். அது நடைபெறாத வரையில் உயர்கல்வியில் இன்று உள்ள குளறுபடி நீங்காது. இந்தக் குளறுபடி உடனடியாக நீக்கப்பட வேண்டும். தமிழ் மாநிலத்தில் தொடக்கக் கல்வி முதல் உயர் தொழிற்கல்வி வரையில் எல்லாக் கல்வியும் தமிழில் தான் பயிற்றப்பட வேண்டும் என்கிற கொள்கைக்கு இன்றைய அ.இ.அ.தி.மு.க அரசு எதிராகவே இருப்பதும், இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட அறிக்கையில் இக் கொள்கை பற்றி எதுவுமே கூறாததும் மிகமிக வருந்தத்தக்க தாகும்.

படிப்பகம்

www.padippakam.com



கல்வி இப்படிப்பாழடிக்கப்படுவதை ஒரே மூச்சில் தடுத்து நிறுத்திட ஆசிரியர்களும், பேராசிரியர்களும், மாணவர்களும் இளைஞர் களும், தங்களை மறந்து தெருவுக்கு வந்து போராடிடவும், சிறைபுகவும், அடிபடவும், அடி கொடுக்கவும் துணிந்து முன் வரவேண்டும். ஒரு கோடி எண்ணிக்கையுள்ள இன்றைய மாணவர்களில் ஓரிலக்கம் பேரும்; நான்கு இலக்கம் ஆசிரியர்கள், பேராசிரியர்களில் ஒரு நாலாயிரம் பேரும் இத்தகைய நேரடி நடவடிக்கைக்கு என்றைக்கு ஆயத்தம் ஆகிறார்களோ அன்றைக்குத்தான் ஆங்கில மொழிக் கல்வி வணிகக் காதகர்களும், அவர்களை அரவணைக்கும் அரசு உயர் அதிகாரிகளும், அரசியல்வாதிகளும், ஏடு நடத்து வோரும் வழிக்கு வருவார்கள். அடியாத மாடு படியாது என்பது ஓர் உண்மை. நிற்க

இன்றைய முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சென்னைக் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்குவதற்கென, இந்த ஒரு பருவத்துக்கு ரூ. 75 கோடி ஒதுக்கிச் செயல்படுவது பாராட்டத்தக்கது.

சென்னைக்கும் மற்ற ஊர்களுக்கும் உள்ள குடிநீர்ப் பஞ்சத்தைப் போக்கிட நீண்ட காலத் திட்டங்கள் என்கிற பேரால், வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொணரும் திட்டம் ஒகேனக்கல் அல்லது ஈரோடு பள்ளி பாளையம் அல்லது கல்லணைப் பகுதி ஆகிய இடங்களிலிருந்து திறந்த கால்வாய் வழியிலோ நிலத்தடிக் குழாய் வழியிலோ, சென்னைக்குத் தண்ணீர் கொண்டு வரத் திட்டமிடுவது கொஞ்சமும் பொருத்தம் ஆகாது.

இந்தத் திட்டங்கள் அடிப்படையில் காவிரி ஆற்றையும், கொள்ளிடம் ஆற்றையும் நீர் தரும் ஆதாரங்களாகக் கொண்டவை.

காவிரியில் ஓராண்டில் 365 நாளும் தண்ணீர் ஓடியது ஒரு காலம். கடந்த 30 - 40 ஆண்டுகளில் இது அடியோடு மாறிவிட்டது. இன்று எந்த ஊரிலும் காவிரியும் கொள்ளிடமும் கோடையில் வெறும் மணற்பரப்பாகவே காணப்படுகிறது. ஆண்டில் சில நாள்கள் மட்டுமே - நவம்பர், திசம்பரில் காவிரியில் இருகரைகளும் புரளும் வெள்ளம் வருகிறது. இந்த இரண்டு ஆறுகளிலும் மாசி, பங்குனி, சித்திரை, வைகாசியில் கருநீர் ஓடுவது என்பதே பல ஆண்டுகளாக இல்லை. இப்படிப்பட்ட ஆறுகளை மூல ஆதாரமாகக் கொண்டும்; மற்றும் வெட்டாறு, வெண்ணாறு, வெள்ளாறு இவற்றைத் துணையாகக் கொண்டும் உள்ள வீராணம் ஏரியிலிருந்தும் மற்ற இடங்களி லிருந்தும் சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரவும்; வரும் வழியில் உள்ள ஊர்களுக்குக் குடிநீர் தரவும் திட்டமிடுவதும்; இவற்றுக்காக ரூ500 கோடி, ரூ.1200 கோடி எனச் செலவு செய்ய அரசு முயற்சிப்பதும் அறிவுடைமை ஆகாது.

முதலமைச்சர் அவர்களும், மற்றும் உள்ள அமைச்சர் களும்; பொதுப்பணித்துறை, குடிநீர் வடிகால் வாரியத்துறை, ஊரக வளர்ச்சித் துறை, உள்ளாட்சித் துறை, உயர்தொழில் நுட்ப மற்றும் நிர்வாக அதிகாரிகளும் இத்திட்டங்கள் பற்றித் துல்லியமாகக் கணக்கீடும் மதிப்பீடும் செய்து நீரின் பயனீட்டு அளவைக் கணக்கெடுத்து அதன் பின்னரே இவை பற்றி இறுதி முடிவெடுக்க வேண்டும். இதற்கு மாறாக: சென்னை மாநகரிலும் சுற்றுப்புற ஊர்களிலும் உள்ள குளங்கள், குட்டைகள், ஏரிகள் இவற்றை அடையாளம் கண்டு - போர்க்கால வேகத்தில் இவற்றை முழுவது மாகச் செப்பனிட்டு, அந்தந்த ஊராட்சி, நகராட்சி, மாநகராட்சியினர் - நீர்வரத்து வழி, நீர்ப்போக்குவழி, நீர் பயன்பாடு இவற்றைப் பாதுகாத்திட உரிய கண்காணிப்புக்கு ஆவன செய்து அறிவிக்க வழிகாண வேண்டும்.

தமிழ்நாட்டு அரசு இப்போது அறிவித்துள்ளபடி செங்குன்றம், மாதவரம், கொரட்டூர், அம்பத்தூர் மற்றும் இரட்டை ஏரிகளை முழுவதுமாக உடனே தூர்வாரி, நீர்வரத்துவழி - போக்குவழி ஆக்கிரமிப்புகளை அகற்றி, இவை முழுக் கொள்ளவுக்கும் நீரைத் தேக்கிக் கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும்.

கொறட்டலை ஆறு, கூவம் ஆறு, அடையாறு, பாலாறு, தென்பெண்ணை ஆறு, வெள்ளாறு இவற்றில் ஒவ்வொரு 20 கிலோமீட்டர் தொலைவிலும் ஆற்றின் குறுக்கே மணல் போக்கித் தடுப்பு அணைகளைக் கட்டி ஆங்காங்கே நீர் மடுக்களும் தேக்கங்களும் உண்டாகி, அக்கம்பக்கத்து நிலத்தடிநீர் மட்டம் உயருவதற்கு உடனே வழிகாண வேண்டும்.

100 ஏக்கருக்கு மேல் பாசன ஆயக்கட்டு உள்ள எல்லா ஏரிகளிலும் நீர் வரத்து வழியிலும் ஏரிப்பரப்பிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, ஆண்டுக்கு 2000, 3000ஏரிகளைத் தூர்வாரிச் செப்பனிட்டு இன்னும் பத்தே ஆண்டுகளில் 35000 சிற்றேரிகள், பேரேரிகளை வளமான நீர்நிலைகளாக அரசு மாற்ற வேண்டும்.

படிப்பகம்

www.padippakam.com



இவற்றுக்கு அடுத்தே புதிய நீர்த் தேக்கங்களை அமைப்பதில் அரசு நாட்டம் கொள்ள வேண்டும்

இருக்கிற நீர்நிலைகளைக் கவலையோடும் கரிசனத்தோடும் சீர் செய்வது, எதற்கும் அஞ்சாமல் எல்லா ஆக்கிரமிப்புகளையும் அகற்றி ஏரிகள் எல்லாவற்றையும், முழுக் கொள்ளளவு உள்ளவையாக ஆக்குவது; மழை நீரைப் பெருமளவில் சேமிப்பது என்பவை மட்டுமே நீர்த்தட்டுப்பாடு தீர வழியாகும்.

இப்பணித் திட்டங்கள் மூலமே குடிநீர்த் தட்டுப்பாடு, வேளாண்மைப் பாசனநீர்த் தட்டுப்பாடு குறைய முடியும்.

அடுத்து, வேளாண் விளைபொருள்களான நெல், கரும்பு, முந்திரிக் கொட்டை, மரவள்ளிக் கிழங்கு, நிலக்கடலை, பருத்தி இவற்றுக்குக் கட்டுபடியான விலை தருவது பற்றி அரசு இந்த வரவு செலவுத் திட்டத்தில் எந்த அறிவிப்பும் செய்யவில்லை.

அரிசி, சோளம், இவற்றை உண்ணும் பண்டங்களாக உருவாக்கி அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யவும்; கைத்தறி, விசைத்தறிகள் நெய்யும் கைலி, சட்டைத்துணி, கைக்குட்டை மற்றும் ஆயத்த ஆடைகள் முதலானவை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவும் தமிழ் நாட்டு அரசு இந்திய அரசுக்கு நெருக்குதல் தந்து உரிய ஏற்பாடு செய்யவேண்டும்.

சிறுதொழில், குறுந் தொழில் நிறுவனங்களில் (SSI s) பெரும்பாலானவை அரசின் மூலமும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலும் கடன் பெற்றுப் பல பொருள்களைச் சிறிய அளவில் உற்பத்தி செய்பவை. இவர்கள் உற்பத்தி செய்த பொருள்கள் விற்கப்பட உறுதியான சந்தை இருந்தால்தான் தொழில்களை நடத்தவும், கடன்களை அடைக்கவும் முடியும். அரசுத் துறைகளும் பொதுத் துறை நிறுவனங்களும் *1996* வரையில் இவர்களின் உற்பத்திப் பொருள்களையே வாங்கிப் பயன்படுத்தின. அந்த ஏற்பாடு *1997* இல் ஆணை எண் 75 என்பதன் மூலம் இரத்துச் செய்யப்பட்டது. வெளி மாநிலங் களிலிருந்து இவ்வகையான பொருள்களை அரசுத் துறைகள், பொதுத்துறை நிறுவனங்கள் வாங்கியதால், தமிழ் நாட்டில் சிறு தொழில்கள் நசித்து விட்டன. இப்போதைய அரசு, ஆணை எண் 75 என்பதை இரத்துச் செய்து விட்டது. இதனால் தமிழகத்தில் சிறு தொழில்கள் இனி வளர்ச்சி பெற அதிக வாய்ப்பு உண்டாகியுள்ளது.

பெரிய பெரிய பன்னாட்டு நிறுவனங்கள் படையெடுத்து உள்நாட்டுப் பெரிய முதலாளிகளைத் தரகர்களாக ஆக்கிக் கொண்டு பெரிய கருவிகளையும் பொறிகளையும் இயந்திரங்களையும் உருவாக்குவதுடன் அவற்றுக்குத் தேவையான உதிரி உறுப்புகளையும் அவர்களே உற்பத்தி செய்கின்றனர். எனவே சிறு - குறு தொழில்களான பட்டறைத் தொழில்கள் நசித்து விட்டன. இவற்றைக் காப்பாற்றிட இன்றைய அரசு முனைவது பாராட்டுக்கு உரியது.

கைத்தறி, விசைத்தறி, சிறுபட்டறைகள் இவற்றில் உருவாக்கப்படும் பொருள்களில் அரசுத்துறைகளுக்குப் பயன்படும் எல்லாப் பொருள்களையும் இவர்களிடமிருந்தே அரசுத் துறைகள் வாங்க வேண்டும் என்பதை ஒரு நிரந்தரக் கொள்கையாக ஏற்று அதற்கேற்ற தெளிவான ஆணைகளைப் பிறப்பிக்க வேண்டும்.

மேலும், ஆசிரியப் பயிற்சி பெற்று முதலாம் ஆண்டுத்தேர்வு எழுதித் தேர்ச்சி பெற்றும், இரண்டாண்டுகள் தேர்வு எழுதியும் ஆசிரியர் பயிற்சிச் சான்றிதழ் பெற முடியாமல் *1993* முதல் தவித்து வருகிற *28,500* பயிற்சி ஆசிரியர்கள் - வயது வரம்பு இன்றி, ஒரே மூச்சில், இரண்டு ஆண்டுகள் பயிற்சி பெற்றுத் தேர்வு எழுதி, ஆசிரியர் ஆகும் தகுதியைப் பெற்றுக் கொள்ள இன்றைய அரசு ஏற்ற வழி அமைத்துள்ளது மிகவும் பாராட்டத் தக்கது.

வாக்குவாங்கும் கவர்ச்சியான திட்டங்களான இலவச வேட்டி, இலவசசேலை வழங்குவது முதலானவற்றில் நிரம்ப ஊழல் நடைபெறுகிறது. இதைக் களைந்திடவும் அரசு திட்டமிடுவது வரவேற்கத் தக்கது.

வணிகவரி, பத்திரப் பதிவுக் கட்டணம் முதலான வருவாய் இனங்களில் ஒழுக்கு இல்லாமல் அடைத்து வருவாயைப் பெருக்கிக் கொண்டு - 1. கட்டாயத் தொடக்கக் கல்வி 2. இலவச வைத்திய வசதி 3. புதிய புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல் இவற்றை அரசுச் செலவிலேயே செய்திட இன்றையத் தமிழ்நாட்டு ஆட்சியாளர் முன்வர வேண்டும். இது மக்கள் நலம் காக்கும் அரசின் தலையாய கடமையாகும்.

*1.9.2001* வே. ஆனைமுத்து

படிப்பகம்

www.padippakam.com



# தமிழ்நாடு தமிழருக்கே! நாம் பலியாகித்தான் பெற முடியும்!

— ஈ.வெ.இராமசாமி

## 1. இந்தியா ஒரு நேஷனா?

அக்கிராசனரவர்களே! சகோதரர்களே!

இந்தியா ஒரு நாடு என்று ஆனால்தானே, இந்தியா முழுமையும் பற்றிப் பேச நமக்கு உரிமை உண்டு. இப்போது இந்தியா ஒரு நாடாயிருக்கின்றதா?

இந்தியா—சாதிகள் காட்சி சாலையாக, மதக் கண்காட்சி சாலையாக, பாஷைகள் கண்காட்சி சாலையாக, சாமிகள் காட்சி சாலையாக இருக்கின்றதே ஒழிய வேறு என்னமாயிருக்கின்றது? இந்த நிலையிலுள்ள இந்தியா, விடுதலையோ முன்னேற்றமோ அடைவது என்பது சாத்தியமானதாகுமா? மற்ற நாட்டார்கள், தங்கள் நாட்டை ஒரு நாடாக்கி நம் நாட்டையும் அதோடு சேர்க்கப் பார்க்கின்றார்கள். யார் எந்த நாட்டோடு சேர்த்துக் கொள்ளுவதென்று போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

(சேலத்தில் சொற்பொழிவு —'குடி அரசு' 1-6-1930)

## 2. திராவிட நாடு பிரிவினை நாள்

தலைவரவர்களே! தோழர்களே!

இது திராவிட நாடு பிரிவினை நாள். இன்று 50,000 பேர் இங்குக் கூடியிருக்கிறீர்கள். இதுபோல ஆண்டு தோறும் கூட்டம் கூடி நமது விருப்பத்தை அரசியலாருக்குத் தெரிவித்து வருகிறோம்.

திராவிடநாடு பிரிவினை வேண்டுமென்று நாம் விரும்புவது, இன்று நேற்றல்ல. இன்றைக்கு 10 ஆண்டுகளுக்கு முன்பிருந்து— அதாவது, பிரிட்டிஷ் ஆட்சி இந்நாட்டில் இருந்து வந்த காலமாகிய 1938-ம் ஆண்டிலிருந்து திராவிட நாடு பிரிந்து தனிச் சுதந்தர ஆட்சி நாடாக இருக்க வேண்டுமென்று கேட்டு வருகிறோம். இதற்கு இன்றைக்கு 5,6 ஆண்டுகளுக்கு முன்பே, எனது நண்பரும், இன்றைய இந்திய கவர்னர் ஜெனரலுமான இராஜகோபாலாச் சாரியார் அவர்களது ஆசியும், சம்மதமும் கிடைத்திருக்கிறது. ஜின்னா சாயபு பாகிஸ்தானுக்காகக் கிளர்ச்சி செய்த காலத்தில் அதற்கு ஆதரவாக ஆச்சாரியார் அவர்கள் பிரச்சாரம் செய்து வந்தபோதே—திராவிட நாடு பிரிந்து கிடைக்க வேண்டும் என்று கேட்டதும் நியாயம்தான் என்றும், அந்தந்த நாடு பிரிந்து தனிச் சுதந்தர நாடாய் இருக்க வேண்டுமென்று கேட்க ஒவ்வொரு நாட்டாருக்கும் உரிமை உண்டென்றும் பேசி



இருப்பதோடு, என்னிடம் நேரிலும், 'நீ கேட்பது சரி' என்றும் தெரிவித்திருக்கிறார்.

அதற்கப்புறம் இந்த 5,6 வருட காலத்தில் திராவிட நாடு பிரிவினைக்கு அதிகமான தேவையும் ஆதரவும்ஏற்பட்டிருக்கிறது. அய்ரோப்பாவைப் பாருங்கள்! அய்ரோப்பாக் கண்டம்

படிப்பகம்

www.padippakam.com



இந்தியாவைப் போன்ற விஸ்தீரணமும், ஜனத்தொகையும் கொண்டது. அது இன்று சுமார் 30 தனித்தனிச் சுதந்தர நாடுகளாக இருக்கின்றது. அவர்களின் முன்னேற்றம் எந்த வகையிலும் தடைப்பட்டு விடவில்லை. அதுமட்டுமல்லாமல், அய்ரோப்பாவில் ஏற்படும் மகா யுத்தங்களின் பலனாக மேலும் நாடுகள் பிரிந்து தனித்தனி நாடுகளாக— ஒவ்வொரு சிறு நாட்டாரும் விரும்பிப் புது இராஜ்யங்களை ஏற்படுத்திக் கொண்டார்களே தவிர, 'பிரித்தால் கெட்டுப் போவோமே; பாதுகாப்பு இல்லாமல் போகுமே; வியாபாரம் கெடுமே; தொழில் கெடுமே!' என்று ஒரு சிறு நாட்டார் கூடக் கவலைப்பட்டதோ, எண்ணியதோ கிடையாது. உலக அரசியல் ஞானமற்றவர்களும், சுரண்டல் கூட்டத்தாரும், ஒரு நாட்டை ஒரு நாட்டார் அடக்கிச் சுரண்டி ஆதிக்கம் செலுத்தி வருகிறவர்களும் தாம் பிரிவினையை ஆட்சேபிப்பார்கள்; அல்லது இப்படிப்பட்டவர்களுடைய கூலிகள், கருங்காலிகள் தாம் ஆட்சேபிப்பார்கள்.

(சென்னை பீப்பிள்ஸ் பார்க்கில், 1-7-1948-ல் சொற்பொழிவு— 'விடுதலை' 2-7-1948)

பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்!

மத்திய அரசாங்கப் பிடியில் இருந்து திராவிட நாடு தனி நாடாகப் பிரியாவிடில், சுதந்தரம் இல்லை, —சோறு இல்லை, — மான வாழ்வு இல்லை.

இது உறுதி! உறுதி! உறுதி!

பந்தயம் வேண்டுமானாலும் கட்டுவேன்.

('விடுதலை'-அறிக்கை— 25-2-1949)

தோழர்களே!

இதே போலத்தான் *1915* வரை அகில இந்தியா என்று பேசிவந்த நான், வடநாட்டார் ஆதிக்கத்தை உணர ஆரம்பித்ததும் *1938*-ல் திராவிட நாடு பிரிவினைக் கொள்கையை முக்கியக் கொள்கையாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்தேன்.

*1950* ஜனவரி *26*-ம் தேதிய பலம், *1947* ஆகஸ்டு *15*-ம் தேதியைப் போல் ஒரு விலாசம் மாற்றும் தினமேயாகும். அதே முதலாளிதான்; அதே பணப்பெட்டிதான்; அதே தராசுதான்; அதே படிக் கல் தான்; அதே சரக்குத் தான்; அதே பித்தலாட்டம்தான். ஆனால், விலாசம் அதாவது 'டிரான்ஸ்பர்' செய்யப்பட்டது மட்டும் மாற்றம் அடைகிறது. குடி அரசு ஆட்சி என்கிற புதுப் பெயரால் பழைய கொடுங்கோல் ஆட்சியே மேலும் அதிகப் பலத்துடனும், மேலும் அதிகப் பாதுகாப்புடனும் 26-ந் தேதி முதற்கொண்டு நடைபெறப் போகிறது.

இந்த உண்மையைத் தெளிவாக உணரும் நாம்இதை ஏன் புரட்டு என்று எடுத்துச் *சொல்லக்கூடாது?* உண்மையை எடுத்துச் சொல்ல நாம் ஏன் பயப்பட வேண்டும்? அக்கிரமத்தை எடுத்துச் சொல்ல

நமக்கேன் அச்சம்?

(சேலம், மாயூரம் ஆகிய ஊர்களில் 14-1-1950 முதல் 18-1-1950 முடிய சொற்பொழிவு— 'விடுதலை' 20-1-1950)

பெரியோர்களே! தோழர்களே! எந்தெந்த நாடுகளில் தங்களுக்கு ஓர் அளவுக்குச் சுதந்தரம் வந்தது என்று கூறினார்களோ— அன்றைய தினத்திலிருந்தே தங்கள் எல்லையைக் காவல் காக்கும் பணியில் ஈடுபட்டார்கள். 'எங்களுடைய நாட்டிலேயிருந்து வெளியே பணம் கொண்டு செல்லக் கூடாது; வேறு நாட்டானாகிய நீ வெளியே போ' என்று, இலங்கை சர்க்கார் சொல்லி விட்டது. அங்கே கூலி வேலை செய்து வாழ்ந்து கொண்டிருந்த அன்னியர்களையும் வெளியே போகச் சொல்லி விட்டார்கள். 'ஏன் அப்படி?' என்று கேட்டால், 'எங்களவர்களுக்கே இங்கு வேலை இல்லை; நீ வாழுவதற்காக உழைப்பின் பெயரைச்

**பார்ப்பனரைப் பாருங்கள்!**

**தாம்ப்ராஸ் ஹெரிடேஜ் பிராஜக்ட்**

பல்வேறு துறைகளில் பிராமணர்கள் ஆற்றிய சேவைகள், சாதனைகள் அடங்கிய ஒரு தொகுப்பை வெளியிட தமிழ்நாடு பிராமணர் சங்க (தாம்ப்ராஸ்) அறக்கட்டளை திட்டமிட்டுள்ளது. பிராமணர் சமூகத்தைச் சேர்ந்தவர்களைப் பற்றிய ஆதார நூலாக இது விளங்கும். 'தாம்ப்ராஸ் ஹெரிடேஜ் பிராஜக்ட்' என்று இத் திட்டத்துக்குப் பெயரிடப் பட்டுள்ளது.

இதற்காக அமைக்கப்பட்டுள்ள குழுவின் முக்கியப் புள்ளிகள், நரம்பியல் நிபுணர் டாக்டர் பி.ராமமூர்த்தி - தலைவர்; முன்னாள் தலைமைத் தேர்தல் ஆணையர் டி.என்.சேஷன் - தலைமைப் புரவலர், பத்திரிகையாளர் கே.சி.லட்சுமி நாராயணன் - இணைத் தலைவர் மற்றும் ஆசிரியர்; தாம்ப்ராஸ் அறக்கட்டளைத் தலைவர் என்.நாராயணன் - செயலர். ('தினமணி', 5.8.2001)

படிப்பகம்

www.padippakam.com



சொல்லிக் கொண்டு இங்கே இருக்கிறாய்' என்று கூறுகிறார்கள். அங்கிருந்து ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மேல் பணத்தை யாரும் எங்கேயும் கொண்டு போக முடியாது. சாதாரணமாக ஒருவனுக்கு 10,000 ரூபாய் சொத்து இருக்கிறது என்று வைத்துக் கொள்ளுங்கள். அந்த 10,000 ரூபாய் சொத்தை எதற்காக, ஏன் விற்க வேண்டும் என்று காரணம் காட்டி 7500 ரூபாய்க்குத்தான் விற்க முடியும். அப்படி விற்று வந்த பணத்தை இங்குக் கொண்டுவர வேண்டுமென்றால் அதற்கென்று இருக்கும்சிலரிடம் பேரம் பேசி, அதில் பாதியை 3750 ரூபாயை அவனுக்குக் கொடுப்பதாக ஒத்துக் கொள்ள வேண்டும். அதன் பிறகு பரிபாஷை மூலம் செய்தி அனுப்பி, தங்கள் ஆட்கள் உதவியால் தன்னுடைய பங்கு 3750 போக,மீதி ரூ. 3750 கொண்டுவந்து சேர்ப்பான். இவ்வளவு கஷ்டப்பட்டும் வழியில் சிக்கிவிட்டால் ரூ. 10,000-த்தில்—தனக்கு வரவிருந்த 3750 ரூபாயும் போய்விடும். எவ்வளவு எவ்வளவு கஷ்டப்பட வேண்டியிருக்கிறது? அங்கே இருந்து கொண்டு சம்பாதிப்பதும் முடியாது; நாம் சம்பாதித்ததைக் கொண்டு வருவதென்றாலும் முடியாது. ஏன்? அந்த நாட்டில் பிறர் கொள்ளையடிக்கக் கூடாது; அடிக்க அவர்கள் விடுவதில்லை.

அதுபோலவே, பர்மாவில் பட்டப்பகலில் கொலை, கொள்ளை, குத்து வெட்டு நடக்கின்றன. சர்க்காரும் அதைப் பற்றிக் கவலை எடுக்காமல் விட்டு விடுகிறது. கேட்டால், 'அன்னியருக்கு இங்கென்ன வேலை?' என்கிறார்கள். ஆகவே, அங்கு யாரும் போக முடியவில்லை. இன்று இங்கே உள்ள சர்க்கார் பேச்சு வார்த்தை நடத்தி வருகின்றது—அந்த நாட்டுச் சர்க்காருடன். அதுபோலவே மலேயாவிலிருந்து பணம் வரவழைக்க முடியாது. 'கொச்சின் சைனா'விலிருந்து நம்மவனுக்கு மாதம் ரூ.1000, 2000 வரும்படி வரக்கூடிய சொத்து இருக்கிறது. 200 ரூபாய்க்கு மேல் அங்கிருந்து கொண்டுவரக் கூடாது என்று சொல்லிவிட்டான்.

சுதந்தரம் பெற்ற மற்ற நாடுகளிலெல்லாம் அப்படியிருக்கும்போது, நமது நாட்டில் என்னவென்றால் மார்வாரி, குஜராத்தி, மூல்தானி, பனியாக் கூட்டத்தார்கள்—அவர்கள் நாட்டிலேயிருந்து வந்து, இங்கே கோடிக்கணக்காய்க் கொள்ளையடித்துக் கொண்டு போகிறார்கள். இன்று அவர்கள் இராஜ்யம்! தங்கள் நாட்டுக்காரர்களை இங்கே அனுப்புகிறார்கள். பலப்பல சலுகைகளோடு அவர்கள் இங்கே வந்து கொள்ளையடித்துக் கொண்டு, பெரிய பெரிய கட்டடங்களைக் கட்டிக் கொண்டு கவலையற்ற வாழ்வு வாழ்கிறார்கள். சென்னை மவுண்ட் ரோட்டில் முன்பிருந்த வெள்ளைக்காரன் போல்—பனியாக்கள், மார்வாரிகள் முதலியோர் வாழ்கிறார்கள். ஒவ்வொருவனும் கோடிக்கணக்காய், இலட்சக்கணக்காய்ச் சம்பாதிக்கிறான். பல இனங்கள்—நாடுகள் கொண்ட இவ்வளவு பெரிய நாட்டை ஒன்றாக்கி, 'எவன் வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் சென்று, எப்படி வேண்டுமானாலும் சம்பாதித்து அதை எப்படி வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்' என்ற சட்டம் செய்துவிட்டு, இங்கே வந்து கொள்ளையடிக்கிறார்கள். இந்தத் தன்மையை மாற்றா விட்டால் நம்முடைய அத்தனைச் செல்வங்களும் அவர்களுக்கே போய்விடும். நாம் என்றைக்கும்அவர்களுக்கு—வட நாட்டாருக்கு மீளாத அடிமைகளாய், வேலைக்காரர்களாய்த்தான் இருக்க நேரிடும். இரும்பு அவனுக்கு, சிமெண்ட் அவனுக்கு, கப்பல் கட்டும் தொழில் அவனுக்கு; இப்படி 'எல்லாம் அவனுக்கு!' என்றே ஆகிவிட்டது. 1000 ரூபாய் 2000 ரூபாய்க்குத்தான் நம்மவன் லேவாதேவி செய்ய முடியும்.

எவ்வளவு மூலதனத்தையும் நம்மாலேயே உண்டாக்க முடியும். ஆகவே, இந்த வடநாட்டானுடைய மூலதனம், பொருள் இல்லாமல் நாம் வியாபாரம் செய்ய முடியாது என்பது ஒழுங்கான நியாயம் அல்ல. இந்த நாட்டில் உள்ள எல்லாத் தொழில்களையும் வட நாட்டார் கைப்பற்றிக் கொண்டார்கள். 10,000, 20,000 ரூபாய் லேவாதேவியெல்லாம் அவனாலேயே செய்ய முடியும். நம்மவர்களுக்குப் பாதுகாப்பில்லை. கொடுத்த கடனை வசூலிக்க கோர்ட்டுச் செலவு அதிகமாகும். ஆனால், ஒரு காசு செலவில்லாமல் வியாபாரம் நடத்த அவனுக்கு அனுமதி பாதுகாப்பு!

அவை மட்டுமல்ல; இருக்க இருக்க அவர்கள் வெள்ளம் போல் வந்து உப்புகிறார்கள். அகதிகள் என்ற பேரால் நம்முடைய நாட்டிற்குச் சுமார் 10 இலட்சம் பேர்கள் அனுப்பப்பட்டிருக்கிறார்கள். வெறுங்கையுடன், குடும்பத்தோடு வந்தவர்களுக்கு இந்த மாகாண சர்க்கார் சலுகை காட்டி அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து தருவதில் தீவிரமாக ஈடுபட்டு இருக்கிறார்கள். மேலே இருக்கிற டெல்லி—'இந்த அகதிகளுக்கு வீடு, வாசல், வியாபார வசதி செய்துகொடு' என்று உத்தரவு இட்டதின் காரணமாக, சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, திருப்பூர், திருச்சி, மதுரை, பெங்களூர், கள்ளிக்கோட்டை, கொச்சி ஆகிய இடங்களில் எல்லா வியாபாரங்களையும் அவர்களே கைப்பற்றி விட்டார்கள். நம்மவர்கள் அவர்களுக்கு மூட்டை தூக்குகிறார்கள்.

படிப்பகம்

www.padippakam.com



பெரிய பெரிய கடைகளிலிருந்து திண்ணை, ரோடு, வண்டி முதலிய கடை வியாபாரம் வரையில் அவர்களே கைப்பற்றிக் கொண்டார்கள்.

வசதிகள் பல உள்ள இந்தப் பெரும் நாட்டில் அவன் இப்படிப் புகுந்து கொள்ளையடிப்பதைப் பார்த்துக் கொண்டு சும்மா இருப்பதா? இதைப் பற்றிப் பார்ப்பனர்களுக்குக் கவலையே இல்லை; காட்டிக் கொடுத்துப் பங்கு வாங்குகிறார்கள். இந்தக் கொள்ளையை - கொடுமையை எடுத்துக்காட்டி, 'இத்தகைய தன்மைகள் ஒழிய வேண்டும்; எங்கள் நாட்டை நாங்களே ஆள எங்களிடத்தில் விட்டுவிடு' என்று கேட்பது தேசத் துரோகமா? இது தவறா?

'வெள்ளைக்காரன், ஜப்பான்காரன் வரவேண்டும்' என்று கூறினால், அது தேசத் துரோகக் குற்றமாக இருக்கலாம். ஆனால், இருக்கிற அன்னியனையும், 'வெளியே போ!' என்று கூறுவது எப்படிக் குற்றமாகும்? அது 'மாபெரும் தேசாபிமானம்' ஆகும்.

வெள்ளைக்காரன் நம்மவர்களிடத்திலேயிருந்துதானே நாட்டை வாங்கினான்? அப்படி வாங்கிய நாட்டை—நம் நாட்டானிடம் கொடுத்துவிட்டுப் போனான் என்றால், எல்லாவற்றையும் வடநாட்டானே எடுத்துக் கொண்டால் என்ன நியாயம்?

('விடுதலை' 8-4-1950)

### தமிழனென்று சொல்லாதே!

தமிழனென்று சொல்லாதே
தலைகுனிந்து நில்லாதே
உன்னைப் போல் ஏமாளி
உலகிலெங்கும் உண்டோ சொல்?
வீதியெல்லாம் தமிழ் பேசி
வீட்டில் போய் வேறு பேசி
தமிழனென்றே உனையேய்ப்பான்
தமிழுக்குக் குழி பறிப்பான்
முகமூடி போடாதே
முழுச் சோற்று எத்தனெல்லாம்
மூச்செல்லாம் தமிழென்பான்
முடிந்த பின்னும் அதற்கென்பான்
வாய் பிளந்து ஆ வென்பாய்
வாய்ப்பிற்கு நன்றியென்பான்
உயர்பதவி தட்டிப் போவான்
ஊமையனாய் நீ கிடப்பாய்
எம் எல் ஏ ஆனபின்னே
எனது மொழி தெலுங்கென்பான்
உறுதி மொழி அதிலென்பான்
உடம்பெல்லாம் தெலுங்கு ரத்தம்
ஓடுபவன் சொன்னானே
உனக்கந்த சொரணையுண்டா?
தமிழனென்று சொல்லாதே
தலைகுனிந்து நில்லாதே!

ஓவியப் பாவலர் - த.மருதமுத்து
அரியலூர்

பெரியோர்களே! தோழர்களே!

நம்முடைய நாட்டில் வளம் இல்லையா? ஆளும் வாய்ப்புகள் இல்லையா? நம்முடைய நாட்டில் நல்ல வியாபார நுணுக்கங்கள் கொண்டவர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கெல்லாம் வசதியும் வாய்ப்பும் கொடுக்கப்பட வில்லை. வடநாட்டாருக்கே நல்ல வாய்ப்புகள் கொடுத்து, அவர்களையே விளம்பரப்படுத்தி, சகலத்தையும் அவர்களே கொள்ளையடித்துக் கொண்டு போகும் நிலையில் வடநாட்டு ஆட்சி உண்டாக்கிவிட்டது.

நம்முடைய நாட்டில் வீரர்கள் இல்லையா? உலகமே வியக்கத்தகுந்த முறையில் சென்ற யுத்தத்தில் வீரமாய்ப் போர் புரிந்தவர்கள் சென்னைச் சிப்பாய்கள்தாம்! இன்றுகூட காஷ்மீர் யுத்தத்தில் தீவிரமாய்ப் போரிடும் வீரர்கள் நம் நாட்டவர்கள்தாம். அவர்களைக் கொண்டு நம் நாட்டில் நல்ல பலமான இராணுவத்தை வைத்துக் கொள்ளலாம்.

நம்மிடத்தில் அறிவாளிகள் இல்லையா? நம்மைவிட அறிவாளிகள் வடநாட்டில் ஏது? அய்ந்து பண்டித நேருக்கள் சேர்ந்தால்தானே நம்முடைய ஒரு ஆச்சாரியாரின் அறிவுக்குச் சமமாக முடியும்? அதுபோலவே அய்ந்து பட்டேல்கள் சேர்ந்தால்தான் நம்முடைய (ஆர்.கே) சண்முகஞ் செட்டியார், (சர்.ஏ) இராமசாமி முதலியார் ஆகியோர்களின் அறிவுக்குச் சமமாக முடியும்?

நான் அஸ்ஸாம், அய்க்கிய மாகாணம், பஞ்சாப், பீகார் மற்றும் எல்லா இராஜ்யங்களுக்கும் போயிருக்கிறேன். வடநாட்டின் பல பகுதிகளிலும் சுற்றியிருக்கிறேன். அங்கு இருக்கிற கோவில்களில் கலைத் தன்மையே கிடையாது. அவர்களுடைய சாமிகள்கூட வெந்த பிணங்கள் போலத்தான் காட்சியளிக்கும். சமீபத்தில்தான் ஏதோ காசி விஸ்வநாதர் கோயிலைக் கொஞ்சம் சீர்திருத்தியிருக்கிறார்கள். ஏன்இவைகளையெல்லாம் கூறினேன் என்றால், அவர்கள் நாகரிகம் அற்றவர்கள்—தம்மை விட எல்லா விதங்களிலும் மட்டமானவர்கள், குறைந்தவர்கள், மூட நம்பிக்கைக்காரர்கள் என்பதற்காகத்தான். அப்படியிருந்தும் இன்று அவர்கள் ஆதிக்கம்தான் தலை விரித்தாடுகிறது.

www.padippakam.com



'சுதந்தர ஜனநாயகக் குடிஅரசு வந்துவிட்டது' என்று கூறுகிறார்கள்! யாரைக் கேட்டுஅங்குப் போய் உட்கார்ந்து, இந்த நாட்டை ஜனநாயகச் சுதந்தரக் குடிஅரசு ஆகச் செய்தார்கள்? ஆகஸ்ட் 15-ந் தேதி முதல், 'இந்த நாட்டை நீ வைத்துக்கொள்!' என்று, வெள்ளையன் தன்னுடைய சவுகரியத்திற்காகக் காங்கிரஸ்காரர்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றான். அவனுடைய பிரதிநிதிகளாகத் தானே அதற்கு முன் இவர்கள் ஆண்டார்கள்?

அந்தப்படியிருக்க, அவனிடத்தில்இருந்து (Made Over) 'மேடோவர்' செய்து ஆட்சி(யை) வாங்கிக் கொண்டு இவர்கள் ஆளுவதென்றால், எப்படி இவர்கள் மக்கள் பிரதிநிதிகளாய் இருக்க முடியும்? வெள்ளைக்காரன் வெளியே போனபிறகு தேர்தல் வைத்து,அந்தத் தேர்தலில் வெற்றி பெற்று இவர்கள் ஆளுவார்களானால், 'மக்கள் ஆட்சி' என்று வேண்டுமானால் சொல்லலாம். அப்படியில்லாமல், அவன் இவர்களிடத்தில் கொடுத்துவிட்டுப் போனான் என்பதால்—இவர்களே ஆளுவது என்பது என்ன நியாயம்? இந்த ஒரு கட்சிக்காரர்களே கூடிக்கொண்டு, 'சுதந்தரம் வந்துவிட்டது, பார்' என்று கத்தினால் ஒப்புக் கொள்ள முடியுமா? இது வெள்ளையனுடைய பிரதிநிதிகள் ஆட்சிதானே?

200 ஆண்டுகளாக வெள்ளைக்காரனுக்கு வரியைக் கொட்டிக் கொடுத்தோம். நம்மவர்கள் படிக்கவில்லை. பார்ப்பனர்கள் 100-க்கு 100 பேர்கள் படித்தார்கள். ஏனென்றால், வெள்ளைக்காரன் கல்வி இலாக்காவைப் பார்ப்பானிடம் ஒப்படைத்தான். அவர்கள் தங்கள் படிப்பிற்கு ஏற்ற முறையில் எல்லாச் சவுகரியங்களையும் செய்து கொண்டார்கள். நம்மவர்களில் 10 பேர் தானே படித்தோம்? பெரும்பாலான மக்களை இப்படித் தற்குறிகளாய் வைத்துக் கொண்டு, அவர்களுக்கு அரசியல் என்றால் என்ன என்றே தெரியாத நிலையில் வைத்துக் கொண்டு—ஏதோ பார்ப்பனர்கள் கூடிச் சுதந்தரம் வந்துவிட்டது என்று கூப்பாடு போட்டு இன்று அவர்களே ஆள உட்கார்ந்து கொண்டு காரியங்களை நடத்துவதென்றால் என்ன அர்த்தம்?

ஆகவேதான், 'இது குடிஅரசு ஆட்சியல்ல; கொடுமைக்கார, கொள்ளைக்கார ஆட்சி' என்று கூறுகிறோம். இந்தச் சுரண்டல் ஆட்சியிலிருந்து விலக வேண்டும் என்று சொல்லுகிறோம்.

இன்னும், நம் நாட்டில் இவ்வளவு பணக்காரன், சாதி இருக்கக் கூடாது. இந்த இரண்டு வருடமாகத் தயாரித்த அரசியல் திட்டத்தில் இவைகளை ஒழிக்க ஏதாவது ஒரு வரி எழுதினார்களா? இல்லை. ஒருவனுக்குச் சம்பளம் ரூ. 10,000, 8000, 5000; மற்றவனுக்கு ரூ. 30. இந்த வித்தியாசம் ஏன் இன்னமும் இருக்க வேண்டும்? வெள்ளைக்காரன்தான் அவனது 'டாம்பீகச்' செலவுகளுக்காக வைத்துக் கொண்டான் என்றால் பார்ப்பனர்களும் அப்படி வைத்துக் கொண்டு இருக்கலாமா? இந்தப் பேதங்களையெல்லாம் நம்மால் ஒழிக்க முடியும்.

ஒருவனிடத்தில் ஏராளமாய்ச் சொத்துக்கள் முடங்கியும், மற்றவனுக்குச் சோற்றுக்கு இல்லாத நிலைமையும் இருப்பதனால் தானே நாட்டில் பஞ்சம், பித்தலாட்டம், நாணயமின்மை வளருகின்றன! இது மாறி 'எல்லோருக்கும் ஒரே நிலை' என்று ஆக்கிவிட்டால் இந்தப் பித்தலாட்டங்கள் நடைபெற வாய்ப்பு இருக்குமா? கல்வித் துறையிலும் அப்படியே சீர்திருத்தம் செய்ய நம்மால் முடியும். உதாரணமாக '6 மாதத்திற்குள் கையெழுத்துப் போடத் தெரிந்து கொள்ளாதவர்களுக்கெல்லாம் 3 மாதம் தண்டனை விதிக்கப்படும்' என்று சட்டம் போட்டால், அவரவர்கள் விழுந்து விழுந்து படிக்க மாட்டார்களா?

இந்தப்படி அனேக சங்கதிகளை நம்மால் செய்ய முடியும். இந்தப்படி, இங்கு எல்லோரும் சமம், எல்லோருக்கும் ஒரே நிலை என்று ஏற்பட்டுவிடுமோ என்றுதான் பார்ப்பனர்களும் வடவர்களும் சேர்ந்து கூட்டுச்சதிசெய்கிறார்கள்.

(குன்னத்தில், 2-4-1950-ல் சொற்பொழிவு—'விடுதலை' 9-4-1950)

("பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள், "பக் 712-716)

## 3. தட்சணப் பிரதேச அமைப்பு

இன்று தமிழ் நாட்டின் முக்கியமான பிரச்சினைகளில் முக்கியத்துவம் பெற்றிருப்பது தட்சணப்பிரதேசம் அமைப்பது என்பதே ஆகும். இது தமிழ்நாட்டைப் பொறுத்த விஷயம் என்பதாக மாத்திரம் இருக்குமானால் இதற்கு எவ்விதத்திலும் முக்கியத்துவம் இருக்காது என்பதோடு, எல்லைப் பிரச்சினைக்குப் பிற்பட்டதாகவே ஆகியிருக்கும்.

எல்லைப் பிரச்சினை தமிழர்களுக்கும் மலையாளிகளுக்கும் மாத்திரம், நிலப்பரப்பு இன உணர்ச்சி ஆகியவைகளை முக்கியமாகக் கொண்ட பிரச்சினையாக

www.padippakam.com



இருப்பது போல் இருக்கலாம். ஆனால், தட்சணப் பிரதேசம் அப்படிக்கு இல்லாமல்—மலையாளம், தமிழ் நாடு என்பதாக மாத்திரம் இல்லாமல், இந்தியப் பொது அரசியல் தத்துவத்தையும் சேர்த்து அரசியல் ஆதிக்கத்தில் இருக்கும் சிலரின் சுயநலத்தையும், பொதுவாகப் பார்ப்பனர்களின் அடிப்படை நலத்தையும் சேர்த்துப் பிணைத்துக் கொண்டிருப்பதாக இருப்பதால் தட்சணப் பிரதேசப் பிரச்சினை மிகமிக முக்கியத்துவம் கொண்டதாக இருந்து வருகிறது. இந்தப் பிரச்சினைக்கு, அதாவது தட்சணப் பிரதேச அமைப்புக்குத் தமிழ் நாட்டு மக்கள் 100-க்கு 90 பேர் இஷ்டப்படாதவர்களாகவும் எதிர்ப்பாளர்களாகவும் இருந்தாலும் தமிழர்களுக்கு நாட்டுப்பற்று, இனப்பற்று என்பது தங்கள் தங்கள் சுயநலத்தைவிடப் பிற்பட்டதாயிருப்பதாலும், தங்களில் ஒற்றுமை உணர்ச்சி இல்லாமல் இருப்பதாலும் மெஜாரிட்டி பலம் சரியானபடி பயன்படுவதற்கு இல்லாமல் போயிருக்கிறது.

உதாரணமாக, சென்ற 20-ந் தேதி தமிழ்நாட்டில் நடந்த கடை அடைப்பு ஆகிய காரியங்கள் எந்த அளவுக்கு நடந்திருந்தாலும், அதை நடத்த முற்பட்டவர்கள் என்பவர்கள் கட்டுப்பாடாகவோ, அந்தரங்க ஒற்றுமையாகவோ இல்லாமல் அவரவர் தன்னலத்திற்கு, கட்சி நலத்திற்கு ஏற்றபடி நடந்து கொண்டதன் மூலம் தட்சணப் பிரதேச அமைப்பு முக்கியத்துவம் பெற முடியாமல் போய்விட்டது. ஏனெனில், ஒவ்வொருவர் ஒவ்வொரு பிரச்சினையை முக்கியமாகக் கொண்டு பேசியதன் பயனாய், இந்தக் கடையடைப்பு எதற்காக—எதை முக்கியமாகக் கொண்டது என்பதை மக்களோ, அரசாங்கமோ உணர முடியாமல் போய்விட்டது. பத்திரிகைக்காரர்களும் அந்தப்படியே பிரச்சாரம் செய்து விட்டார்கள்.

இவை எப்படி இருந்தபோதிலும் இப்போது ஒரு விஷயம் நாம் கவலைப்படத்தக்கதாகக் காணப்படுகிறது. அதாவது, காங்கிரஸ் தவிர்த்து வெளியிலுள்ள கட்சிகளும், கோஷ்டிகளும் தங்களுக்குள் தலைவிரி கோலமாய் இருந்தாலும், காங்கிரஸிலும் மந்திரிகளிலுங் கூடக் கட்டுப்பாடில்லாமல்—ஒற்றுமையில்லாமல் தலைவிரி கோலமாய்த் தமிழ் நாட்டுக்கு ஆபத்தைக் கொண்டு வந்து விட்டு விடுவார்கள்.

நமது அரசாங்க முதல் மந்திரி, நேரிடையாக எதிர்ப்பு உணர்ச்சியைக் காட்டிக் கொள்ளாவிட்டாலும் அந்தரங்கத்தில் முழு எதிர்ப்புணர்ச்சி உள்ளவராக இருந்து வருகிறார். மற்றும், அவர் எந்தச் சந்தர்ப்பத்திலும் அமைப்பை ஆதரித்ததாகச் சாடை கூடக் காட்டவில்லை.

ஆனால், அடுத்த மந்திரியாய் இருப்பவர் கட்டுப்பாட்டையோ ஒழுங்கு முறையையோ கூட இலட்சியம் செய்யாமல், தட்சணப் பிரதேச அமைப்பைத் தான் முழுபலத்தோடு ஆதரிப்பதாகக் கூறிக்கொண்டு, பிரச்சாரமும் செய்து கொண்டு, அதற்கு ஆதரவாகக் கட்சி சேர்த்துக் கொண்டும் வருவதாகத் தெரிகிறது.

இது காங்கிரஸின் பிளவைக் காட்டுவதாக இருப்பது மாத்திரமல்லாமல், அரசாங்க மந்திரி சபையின் ஒழுங்கு முறையற்ற தன்மையையும் காட்டுகிறது.

அமைப்புக்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்துவரும் மந்திரிக்கு மெஜாரிட்டி இல்லையானாலும், பலம் அதிகமாக இருக்கிறது. எப்படியெனில், (1) மத்தியஅரசாங்க ஆதரவு; (2) பிரதமமந்திரி பண்டித நேருவின் பலம்; (3) பார்ப்பனர்களின் ஆதரவு; (4) பார்ப்பனப் பத்திரிகைகளின் ஆதரவு; (5) தன் கட்சி (சி. ஆர். கட்சி) ஆதரவு ஆகிய இவை தவிர; (6) சென்னை முதல் மந்திரி காமராஜரின் எதிரிகளின் ஆதரவு; (7) இவ்வளவுடன் சமய சஞ்சீவிகளின் ஆதரவு-ஆகியவைகள் இருக்கின்றன. காமராஜருக்கு இருக்கும் ஆதரவெல்லாம் பொது ஜனங்களின் ஆதரவுதான் முக்கியமான ஆதரவென்னலாம்.

இந்த நிலையில், காமராஜர் சும்மா இருப்பது ஆபத்தென்பதாக நமக்குத் தோன்றுகிறது. காமராஜர் மவுனமாக இருந்தாலும் காங்கிரஸ் தட்சணப் பிரதேச அமைப்புக்கு எதிராயிருப்பவர்களில் யாராவது தைரியமாய் முன்வந்து அமைப்பு எதிர்ப்பை நல்ல வண்ணம் நாட்டி, ஒழுங்கு முறைக்கு விரோதமாக ஆதரிப்பவர்களைக் கண்டித்து அறிக்கைகள் விட வேண்டியதும், தட்சணப் பிரதேசத்தை எதிர்த்தும் காங்கிரஸ் பிரமுகர்கள், காங்கிரஸ் சட்ட சபை அங்கத்தினர்கள், காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள், காரியக் கமிட்டி அங்கத்தினர்கள் முதலானவர்களுடைய கையொப்பங்களையும் உடனடியாகப் பெற முயற்சிக்க வேண்டுமென விரும்புகிறேன். இவர்களில் யாராவது ஏதாவது தாட்சண்யத்திற்குக் கட்டுப்பட்டு ஆதரிப்புக்கு வாக்குக் கொடுத்து விட்டால், பிறகு அவர்களைத்

படிப்பகம்

www.padippakam.com



திருப்புவது கடினமான காரியமாகிவிடும் என்று கருதுகின்றேன்.

தட்சணப் பிரதேச அமைப்பைத் தமிழ் நாட்டவர்கள் முழு மூச்சுடன்—உயிரைக் கொடுத்து எதிர்ப்பார்கள் என்பதையும், அதனால் அண்மையில் வரும் தேர்தலில் தலைகீழ் மாற்றம் ஏற்பட நேரலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

('விடுதலை'-அறிக்கை—1-3-1955)

தட்சணப் பிரதேசம் தற்கொலையானது. இன்றும் நாளையும் பெங்களூரில் தங்குகின்ற தமிழ்நாடு முதலமைச்சர் திரு. காமராசர் அவர்கட்குத் தலைவர் பெரியார் அவர்கள் பின்வரும் அவசரத் தந்திச் செய்தியை அனுப்பியுள்ளார்;

'தட்சணப் பிரதேசம் ஏற்படுவதென்பது தமிழர்களுக்கு வாழ்வா? சாவா? என்பது போன்ற உயிர்ப் பிரச்சினையாகும். உங்களுக்கும்மற்றெல்லோருக்கும் இது தற்கொலையானதும் ஆகும். தட்சணப் பிரதேசம் ஏற்படுமானால் முன்பின் நடந்திராத கிளர்ச்சி செய்வதற்குத் தமிழ் மக்களை நெருக்குவதாகிவிடும். அருள்கூர்ந்து நம் எல்லோரையும் தமிழ்நாட்டையும் காப்பாற்ற வேண்டுகிறேன்.'

('விடுதலை' 1-2-1956)

*பெரியோர்களே! தோழர்களே!*

தட்சணப் பிரதேசம் வந்தால் தமிழராகிய நமக்குத்தான் ஆபத்து. தமிழ், கன்னடம், மலையாளம் மூன்று நாடுகளும் ஒன்று சேர்ந்தால், பார்ப்பனர்களால் கழித்து விடப்பட்டு நம்மவருக்குக் கிடைத்துவரும் உத்தியோகங்களெல்லாம் மலையாளிகளின் கைக்குள் போய்விடும். நாமெல்லோரும் போலீஸ், கக்கூஸ் எடுத்தல், ரெயில்வே கூலி வேலைகளைத்தான் செய்ய வேண்டிய நிலைமை வரும். முழு அதிகாரம் எல்லாம் வடநாட்டவருக்கும், மலையாளிகளுக்கும் பார்ப்பனர்களுக்கும்தான் போகும். மத்திய சர்க்கார் சுரண்டல் பெரிதாக உள்ளது. இப்பொழுதே நம்மை அடிமை போல் நடத்துகிறார்கள். கோடிக்கணக்கான ரூபாய்கள் புகையிலை வரி, போக்குவரத்து, சுங்க வரி முதலிய பெரிய வருமானங்கள் அங்கு போகின்றன. அவர்கள் இஷ்டப்படி சம்பளம் போட்டுக் கொள்கிறார்கள். மத்திய அரசாங்கத்தில் ஒரு போர்ட்டருக்குக் கொடுக்கும் சம்பளம். இங்கு ஒரு எஸ். அய்க்கும், ஒரு கிளார்க்குக்கும் கொடுக்கப்படுகிறது. காங்கிரஸ் மொழிவாரியில் பிரியவில்லையா? வெள்ளையன் ஆட்சி முறைக்காக அமைத்த அமைப்பைக், காந்தி போன்றவர்கள் குறை சொன்னார்கள். மொழிவாரியாக மாகாணங்களைப் பிரிக்க வேண்டும் என்று கூறினார்கள். அதன்படி தமிழ்நாடு போன்ற 21 மாகாணங்களாகப் பிரித்து, 21 காங்கிரஸ் கமிட்டிகளை உண்டு பண்ணினர். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு முதல் செகரட்டரியாக இருந்தது நான்தான். ஆகவே, நாட்டை அப்பொழுதே மொழிவாரியாகப் பிரிக்க ஒப்புக் கொண்டார்கள். இப்பொழுதே தமிழனுக்கு வேலை இல்லை. அன்னியரும் ஆதிக்கம் செலுத்த வந்தால் நிலைமை மிக மோசமாகிவிடும்.

(மதுரையில், 5-6-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை'-14-6-1956)

'நாடு பிரிவினைக் கமிட்டி' அறிக்கையைப் பார்த்தேன். இந்த அறிக்கை வெளியாவதற்கு முன்பே அறிக்கை பற்றிய சேதிகளின் சுருக்கம் ஒருவாறு எனக்குத் தெரிய வந்தது.

பொதுவாக, ஆந்திரா பிரிந்ததிலிருந்தே நாட்டுப் பிரிவினையில் எனக்குக் கவலை இல்லாமல் போய்விட்டது. பிறகு கன்னடமும், மலையாளமும் (கர்நாடகமும் கேரளாவும்) பிரிவதில் இரண்டு மூன்று காரணங்களால்—இவை சீக்கிரத்தில் பிரிந்தால் தேவலாம் என்கின்ற வண்ணம் தோன்றிவிட்டது. என்ன காரணம் என்றால்,

ஒன்று, கன்னடியனுக்கும், மலையாளிக்கும் இனப்பற்றோ, இனச் சுயமரியாதையோ, பகுத்தறிவுணர்ச்சியோ இல்லை என்பதாகும். எப்படியெனில், அவர்களுக்கு வருணாசிரம வெறுப்புக் கிடையாது; சூத்திரன் என்பது பற்றி இழிவோ, வெட்கமோ பெரும்பாலோருக்குக் கிடையாது; அவர்கள் மத மூடநம்பிக்கையில் ஊறிவிட்டவர்கள்.

இரண்டு, அவர்கள் இருவருக்குமே—மத்திய ஆட்சி என்னும் வடவராட்சிக்குத் தங்கள் நாடு அடிமையாய் இருப்பது பற்றியும் சிறிதும் கவலையில்லை.

ஆகவே, இவ்விரு துறைகளிலும் நமக்கு எதிர்ப்பான எண்ணங் கொண்டவர்கள்; எதிரிகள் என்றே சொல்லலாம்.

மூன்றாவது, இவர்கள்—இருநாட்டவர்களும் பெயரளவில் இருநாட்டவர்களானாலும், அளவில், எஞ்சிய சென்னை இராச்சியம் என்பதில் 14 மாவட்டங்களில் (ஜில்லாக்களில்) இரண்டே ஜில்லாக்காரர்களாவார்கள்.

1. சென்னை, 2. செங்கற்பட்டு, 3. வடஆர்க்காடு, 4. சேலம், 5. கோவை, 6. நீலகிரி, 7. திருச்சி,

படிப்பகம்

www.padippakam.com



8. மதுரை, 9. இராமநாதபுரம், 10. திருநெல்வேலி, 11. தஞ்சை, 12. தென்னார்க்காடு, 13. தென்கன்னடம், 14. மலபார்.

அப்படி 14-ல்—7-ல் ஒரு பாகஸ்தர்களாக இருந்து கொண்டு, தமிழ்நாட்டின் அரசியல், பொருளாதாரம், உத்தியோகம் முதலியவைகளில் 3-ல் 2 பாகத்தை அடைந்து கொண்டு, இவை கலந்து இருப்பதால் நம் நாட்டைத் தமிழ்நாடு என்று கூடச் சொல்வதற்கு இடமில்லாமல் தடுத்து ஆண்டு கொண்டிருக்கிறார்கள்.

இதை, நான் ஆந்திரா பிரிந்தது முதல் சொல்லிக் கொண்டே வந்திருக்கிறேன். ஆதலால், இவர்கள் சீக்கிரம் ஒழியட்டுமென்றே கருதிவந்தேன். அந்தப்படி நல்ல சம்பவமாகப் பிரிய நேர்ந்துவிட்டது. ஆதலால், நான் இந்தப் பிரிவினையை வரவேற்கிறேன்.

இந்தப் பிரிவினை நடப்பதில் சேர்க்கை சம்பந்தமாக ஏதாவது சிறு குறைபாடு இருந்தாலும், அதை மேற்கண்ட பெரும் நலத்தை முன்னிட்டு, கூடுமானவரை ஒத்துப் போகலாமென்றே எனக்குத் தோன்றிவிட்டது. மற்றும், இந்தப் பிரிவினை முடிந்து தமிழ்நாடு தனி நாடாக ஆகிவிட்டால் நமது சமய, சமுதாய, தேசிய, சுதந்தர முயற்சிக்கும் அவை சம்பந்தமான கிளர்ச்சிக்கும், புரட்சிக்கும் நமது நாட்டில் எதிர்ப்பு இருக்காதென்றும் இருந்தாலும் அதற்குப் பலமும், ஆதரவும் இருக்காதென்றும் கருதுகிறேன்.

நிற்க, இந்தப் பிரிவினை அமைப்பு ஏற்பாட்டில் எனக்கிருக்கும் சகிக்க முடியாத குறை என்ன இருக்கிறது என்றால், நாட்டினுடையவும், மொழியினுடையவும், இனத்தினுடையவும் பெயர் அடியோடு மறைக்கப்பட்டுப் போய் விடுகிறதே என்கிற குறைபாட்டு ஆத்திரந்தான்; நம் நாட்டுக்கு, சமுதாயத்திற்கு, இனத்திற்கு திராவிடம் என்று இருந்த பெயர், அது தமிழல்ல என்பதானாலும், நமக்கு அது ஒரு பொதுக் குறிப்புச் சொல்லும், ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிச் சொல்லுமாக இருக்கிறதே என்று வலியுறுத்தி வந்தேன். அதை ஆந்திர, கர்நாடக, கேரள நாட்டு மக்களல்லாமல் தமிழ் மக்களில் சிலரும்எதிர்த்தார்கள். பின்னவர்கள் என்ன எண்ணங்கொண்டு எதிர்த்தாலும், அவர்களுக்கு மற்ற மூன்று நாட்டார் ஆதரவு இருந்ததால் அதை வலியுறுத்துவதில் எனக்குச் சிறிது சங்கடமிருந்தது. அவர்கள் மூவரும் ஒழிந்த பிறகு அவர்களையும் சேர்த்துக் குறிப்பிடத்தக்க ஒரு சொல் நமக்குத் தேவை இல்லை என்றாலும், 'திராவிடன்' என்ற சொல்லை விட்டு விட்டுத் 'தமிழன்' என்று சொல்லியாவது தமிழ் இனத்தைப் பிரிக்கலாமென்றால், அது வெற்றி கரமாக முடிவதற்கு இல்லாமல் பார்ப்பான் (ஆரியன்) வந்து, 'நானும் தமிழன்தான்' என்று கூறிக் கொண்டு உள்ளே புகுந்துவிடுகிறான்.

இந்தச் சங்கடத்திற்கு, தொல்லைக்கு என்ன செய்வது என்று யோசித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்போது, இப்போது மற்றொரு மாபெருந் தொல்லை நெஞ்சில் இடி விழுந்தது போன்று வந்து தோன்றி இருக்கிறது.

அதுதான் திராவிடத்தை அல்லது தமிழ்நாட்டை விட்டு ஆந்திரர், கர்நாடகர், மலையாளிகள் பிரிந்துபோன பின்புகூட, மீதியுள்ள—யாருடைய ஆட்சேபணைக்கும் இடமில்லாத தமிழகத்திற்குத் 'தமிழ்நாடு' என்ற பெயர் கூட இருக்கக் கூடாதென்று பார்ப்பானும், வடநாட்டானும் சூழ்ச்சி செய்து, இப்போது அந்தப் பெயரையே மறைத்து ஒழித்துப் பிரிவினையில், 'சென்னை நாடு' என்று பெயர் கொடுத்திருப்பதாகத் தெரிய வருகிறது.

இது சகிக்க முடியாத மாபெரும் அக்கிரமமாகும். எந்தத் தமிழனும், அவன் எப்படிப்பட்ட தமிழனானாலும் இந்த அக்கிரமத்தைச் சகித்துக் கொண்டிருக்க மாட்டான் என்றே கருதுகிறேன். அப்படி யார் சகித்துக் கொண்டிருந்தாலும் என்னால் சகித்துக் கொண்டிருக்கமுடியாதென்று சொல்ல வேண்டியவனாக இருக்கிறேன்.

இதைத் திருத்த, தமிழ்நாட்டு மந்திரிகளையும், சென்னை, டில்லி, சட்டசபை, கீழ்மேல்சபை அங்கத்தினர்களையும் மிகமிக வணக்கத்தோடு இறைஞ்சி வேண்டிக் கொள்கிறேன்.

மற்றும், தமிழ் நாட்டிலுள்ளபுலவர்கள், பிரபுக்கள், அரசியல், சமுதாயஇயல் கட்சிக்காரர்களையும் முயற்சிக்கும்படி அதுபோலவே வேண்டிக் கொள்கிறேன்.

'தமிழ்', 'தமிழ்நாடு' என்கின்ற பெயர்கூட இந்நாட்டுக்கு, சமுதாயத்திற்கு இருக்க இடமில்லாதபடி எதிரிகள் சூழ்ச்சி செய்து வெற்றி பெற்று விட்டார்கள் என்கின்ற நிலைமை ஏற்பட்டு விடுமானால், பிறகு என்னுடையவோ, என்னுடைய கழகத்தினுடையவோ, என்னைப் பின்பற்றும் நண்பர்களுடையவோ வாழ்வு வேறு எதற்காக இருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றவில்லை.

இந்தக் காரியம் மாபெரும் அக்கிரமமான காரியம் என்பதோடு, மாபெரும்

படிப்பகம்

www.padippakam.com



சூழ்ச்சிமீது செய்யப்பட்ட காரியம் என்றே கருதுகிறேன். நம்நாடு எது? நமது மொழி எது? நமது இனம் எது? என்பதையே மறைத்து விடுவதென்றால், பிறகு தமிழன் எதற்காக உயிர் வாழ வேண்டும் என்பது எனக்குப் புரியவில்லை. ஆகவே, இக்கேடு முளையிலேயே கிள்ளப்பட்டு விடும்படி முயற்சி செய்யும்படியாக எல்லாத் தமிழர்களையும் உண்மையிலேயே வணங்கி வேண்டிக் கொள்கிறேன்.

('விடுதலை'-அறிக்கை—11-10-1955)

## 4. திராவிட நாடா? தமிழ் நாடா?

பெரியோர்களே! தோழர்களே!

திராவிட நாடு எது? இதற்கு முன்—1956-க்கு முன் இருந்த சென்னை மாகாணத்தை நான் 'திராவிடநாடு' என்று சொன்னேன். அப்பொழுது மலையாளம், கன்னடம், ஆந்திரம் பிரிந்திருக்க வில்லை. வெள்ளையன் இந்த நாட்டை விட்டுப் போய்விட்ட பிறகு வட நாட்டானும், இந்த நாட்டுப் பார்ப்பானும் சேர்ந்து கொண்டு இனிமேல் நமக்கு ஆபத்து என்று கருதி, நான்கு பிரிவுகளாக வெட்டி விட்டார்கள். இப்பொழுது நம்மோடு ஒட்டிக் கொண்டிருந்த கள்ளிக்கோட்டை, மங்களூர் மாவட்டங்களும் மலையாளம், கன்னட நாடுகளுடன் சேரப் போகின்றன. இப்பொழுது நம்முடன் மலையாள, கன்னட நாடுகளில் சம்பந்தமில்லாமல் தனித் தமிழ்நாடாக ஆகிவிட்டோம். ஆகவே இதை இப்பொழுது 'தமிழ்நாடு' என்று சொல்லலாம். முன்பு அவர்களையும் சேர்த்துக் கொள்ளலாம் என்று சொன்னோம். ஆனால், அவர்கள் பிரிந்து தனியாகப் போவதிலேயே கவனத்தைச் செலுத்திப் பிரிந்து போய் விட்டார்கள். நாம் நிபந்தனையற்ற அடிமைகளாய் உள்ளோம். வெள்ளையர் ஆண்ட காலத்தில் பார்ப்பனரின் அக்கிரமங்களைச் சொல்ல வழி இருந்தது. அவர்களும் நாம் சொல்வதைக் கேட்டுச் சிலவற்றைக் கவனித்து வந்தார்கள். இப்பொழுது நம் நாடு வடநாட்டிற்கு நிபந்தனையில்லா அடிமை நாடாகிவிட்டது. நாங்கள் வெள்ளையரை அப்பொழுதே கேட்டோம்: 'நாங்கள், உங்களை யுத்த காலத்தில் ஆதரித்தோம். பார்ப்பனரும் வடநாட்டுக்காரரும் உங்களை எதிர்த்தார்கள்; எங்கள் இனம் வேறு; அவர்கள் கலை, பழக்க வழக்கங்கள் வேறு' என்று சொன்னோம். அதற்கு வெள்ளைக்காரர்கள், 'நீங்கள் எல்லோரும் ஒன்றுதான் என்று நினைத்து இருந்தோம். இதெல்லாம் உங்கள் குடும்பச் சண்டை; நாங்கள் சீக்கிரத்தில் இந்த நாட்டை விட்டுப் போய்விடப் போகிறோம்' என்று கூறி, முஸ்லிம்களுக்கு சிறு இராஜ்யத்தைப் பிரித்துக் கொடுத்துவிட்டு, நம்மைப் பார்ப்பனருக்கும், வடநாட்டவருக்கும் காட்டிக் கொடுத்துவிட்டுப் போய்விட்டனர். இப்பொழுதும் நாம் வடநாட்டு ஆட்சியில் இருந்து பிரிந்து தனி நாடு ஆக வேண்டுமென்று கூச்சல் போடுகிறோம். தமிழ்நாடு தனியாகப் பிரிந்தால் இருக்குமா என்று கேட்கிறார்கள். இல்லாமல் காக்கை, கழுகு தூக்கிக் கொண்டா போய்விடும்? பக்கத்தில் இருக்கும் இலங்கையும், பர்மாவும் இருக்கும்பொழுது நாம் மட்டும் இருக்க முடியாதா? நமக்குப் போதுமான வசதி இங்கேயே இருக்கிறது. நமக்கு நாடு கிடைத்து வெள்ளையருடன் ஒப்பந்தம் செய்து கொண்டால் இந்த வடநாட்டான் ஓடி விடுவானே!

(திருவண்ணாமலையில், 19-8-1956-ல் சொற்பொழிவு—'விடுதலை' 29-8-1956)

## 5. தமிழ்நாடு தமிழருக்கே!

பெரியோர்களே! தோழர்களே!

நாடு சுதந்தரம் பெற வேண்டுமென்றும், திராவிட நாடே—தமிழ்நாடு தமிழருக்கே ஆக வேண்டுமென்றும் சொல்லுகிறோம்.

மலையாளம், ஆந்திரம், கர்நாடகம் பிரிந்துபோய் அவை அவைகளுக்கெனத் தனிச் சட்டசபைகள் அமைத்துக் கொண்டுவிட்டன. நமக்கும் அவைகளுக்கும் சம்பந்தமில்லை. என்றைக்காவது நம்நாடு பிரிந்தேதான் தீரும். பலரின் உயிர்த் தியாகத்தின் மூலந்தான் நாட்டைப் பிரிக்க முடியும். பாகிஸ்தானும் பல வெட்டு, கொலைகள் நடந்து பலர் செத்துத்தான் பிரிந்தது. பாகிஸ்தான் கொடுத்தால்தான் இந்துஸ்தான் நிலைக்கும் என்ற அளவில், ஆச்சாரியார் காந்தியாருக்கு உணர்த்தியே பாகிஸ்தான் தான் கேட்ட பகுதிகளைப் பெற முடிந்தது. நியாயமுறையில் பாகிஸ்தான் கொடுக்கவில்லை—பலரைப் பலியிட்டது; பல தலைகள் உருண்டன. நாம் ஏன் வடவர் காலடியிலிருக்க வேண்டும்? நம்மை ஏன் அவர்கள் கொள்ளையடிக்க வேண்டும்? ஆகவே, நம்நாடு என்றாவது தனியாகப் பிரிந்து தானாக வேண்டும்.

நம் நாட்டைப் பிரிக்கவும், பொதுவாக இந்திய நாட்டைப் பற்றியும் சென்னையிலுள்ள சட்டசபையில் பேசி ஒன்றும் செய்ய முடியாது. மக்களை ஏமாற்றுகிறார்கள்; சிலர் வரி என்று கூச்சல் போடுகிறார்கள். வரி போடுபவன் டில்லியிலிருக்க,

படிப்பகம்

www.padippakam.com



இங்கு கலகம் செய்தால் என்ன ஆகும்?

('விடுதலை' 24-7-1957)

*1938*-லேயே நாடு பிரிய வேண்டுமென்றேன். இதை அன்றிருந்த வடநாட்டார் தெரிந்துதான் இருக்கிறார்கள். பதவி ருசியைக் காட்டி நம்மவர்களை ஏய்த்து விடுகிறார்கள். பார்லிமெண்ட் மெம்பருக்கு ரூ *500* சம்பளம்; தினம் *30, 40* ரூபாய் படி— இன்னும் பல வகைகளில் வசதி வாய்ப்பு; கட்டடம் உண்டு. பல நாட்கள் சட்ட சபைக்குச் செல்லாமலேயே பணம் பெறலாம். இவ்வளவு வாய்ப்பும் வசதியும் தந்து வசியப்படுத்துகிறார்கள்— வடநாட்டார்.

கடந்த தேர்தலில் டில்லிசென்ற 'மெம்பர்'கள் என்ன சாதித்தார்கள்? யாராலும், 'பார்லிமெண்டை' அசைக்க முடியாது. பெரும்பாலும் காங்கிரசே ஜெயிக்கிறது. இப்படிப்பட்ட பாராளுமன்றத்தினால் நாம் ஒன்றும் சாதித்துக் கொள்ள முடியாது. எல்லா வசதிகளும் அவன் கையில். எல்லாச் சாமான்களும் அவனிடம் கேட்டு வாங்க வேண்டும். வட நாட்டானின் அரசாங்கத்தின் தயவில்லாமல் நாம் ஒன்றும் செய்துவிட முடியாது என்ற நிலையில் வைத்துக் கொண்டு, நம்மை அடிமைப்படுத்தி வைக்கிறான். நம்நாடு மற்ற நாடுகளைப் போல முன்னேற வேண்டுமானால் நம்நாடு பிரிந்தே ஆக வேண்டும்.

*நம் அதிகாரமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாக டில்லிக்கே போய்க் கொண்டிருக்கிறது. 'யூனிவர்சிட்டி' பூராவும் டில்லி கையில்; கல்லூரிக்கு இடம் ஒதுக்க அவர்கள் இடும் உத்தரவுக்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.*

*நம்முடைய மாகாண சர்க்காரின் சிப்பந்திகளுக்குச் சம்பளம் மிகக் குறைவு; டில்லி சர்க்கார் சிப்பந்திகளுக்குச் சம்பளம் இரண்டு மடங்கு கிடைக்கிறது. மத்திய அரசாங்கம் பூராவும் பார்ப்பான் கையில்! சுங்கம், எக்சைஸ் இலாக்காக்களில் ஒரே பார்ப்பனர் மயம். பாலம் அணைகட்டு டில்லி உத்தரவு தேவை.*

இவ்வளவு நெருக்கடியான பாதுகாப்போடே வளர்ந்து கொண்டே போகும் மத்திய ஆட்சியிலிருந்து—டில்லி தொடர்பிலிருந்து பிரிய, நாம் பலியாகித்தான் பெற முடியும். கொலை, இரத்த வெள்ளம் ஏற்பட வேண்டும். இப்படிப்பட்ட மிகப்பெரிய போராட்டங்களை நடத்த இருக்கும் இளைஞர்களுக்கு 'சினிமா'வைக் காட்டினால் எப்படி எழுச்சி, உணர்ச்சி உண்டாக முடியும்? நம் நாடு பாகிஸ்தானைப் போலப் பிரிய வேண்டாமா? பிரிந்த நாடுகள் தாம் என்ன கெட்டுப் போயின?

*நீயும் பாகிஸ்தானுக்குப் பயந்து படைச் செலவை ஏராளமாகப் பெருக்கிக் கொண்டுள்ளாய்; உன் யோக்கியதை இப்படி? நீ என்னைப்பற்றிக் கவலைப்படுகிறாய். நம் நாடு பிரிந்தால் இராணுவச் செலவு இத்தனைக் கோடியாகாதே! 4 கப்பல்கள் இருந்தாலே போதுமே! நாதியில்லாத்தனம் கொண்டது இந்திய சர்க்கார். இந்தச் சர்வாதிகார யூனியனை எங்களைத் தவிர யாரும் எதிர்ப்பதில்லை; மற்றவர்கள் அவர்களுக்குத் துதிபாடுபவர்களாகவே இருக்கின்றனர்; அவர்கள் தயவை நாடியே இருக்கின்றனர். சமுதாயத்துறையில், பிச்சை எடுத்துப் பிழைத்த பார்ப்பனர்களால் நாம் ஆளப்படுகிறோம். எண்ணிக்கையில் நாம் அதிகமிருந்தும் நாம் ஏன் இப்படி ஒரு சிறு கூட்டத்திற்கு அடிமையாய் இருக்க வேண்டும்?*

('விடுதலை' 25-7-1957)

*பாகிஸ்தான் கிடைக்கவில்லையா?*

பாகிஸ்தான் கிடைப்பதற்கு முதலில் எவ்வளவு கஷ்டப்பட்டார்கள்? பிறகு என்ன ஆனது? *'எடு கத்தியை! வெட்டு!'* என்றான்.

உடனே ஆச்சாரியார், 'பாகிஸ்தான் பிரித்துக் கொடுக்க வேண்டியதுதான்' என்று சொன்னார். காந்தியார் கூட முதலில் ஒப்புக் கொள்ளவில்லை; ஆச்சாரியார் காங்கிரசை விட்டு வெளியேறிப் பிரச்சாரம் செய்தார். என்னிடம் அச்சாரியார் அப்போது சொன்னார்: 'இராமசாமி, இந்த வடநாட்டானுக்குப் புத்தியே இல்லை' என்று.

பாகிஸ்தான் கொடுக்க வேண்டும் என்று ஊர் ஊராய் ஆச்சாரியார் பிரச்சாரம் செய்தார்.

உங்களுக்குத் தெரியாத இரகசியம் ஒன்று சொல்லுகிறேன். அந்தச் சமயத்தில் இராஜகோபாலாச்சாரியின் சட்டையை எல்லாம் கிழித்து விட்டார்கள்; சட்டை மேலெல்லாம் தார் ஊற்றிவிட்டார்கள்.

பிறகு பாகிஸ்தான் வந்தே விட்டது. அதேபோல் திராவிட நாட்டை வாங்க முடியும். என்னிடம் திட்டமெல்லாம் இருக்கிறது.

(மேட்டுப்பாளையத்தில், 6-7-1957-ல் சொற்பொழிவு— 'விடுதலை' 30-7-1957)

('பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்', பக். 712-716) ●

படிப்பகம்

www.padippakam.com



# காரைக்குடியில் மார்க்சியச் சிந்தனையாளர்கள் மாநாடு

உறவு வாசகர் வட்டம் சார்பில் ''உலக மயமாக்கலும் மார்க்சியமும்'' பற்றிய மார்க்சியர்கள் மாநாடு 12.08.2001 காலை 10.00 மணிக்குத் தொடங்கி இரவு 9.00 மணி வரை, காரைக்குடி ஆயிர வைசியர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. மாநாடு மூன்று அமர்வுகளாக நடைபெற்றது.

முதல் அமர்வுக்கும், மாநாடு தொடக்கத்திற்கும் நம்சு, (விடுதலைக் கூட்டமைப்பு) தலைமை தாங்கினார். சொக்கலிங்கம் வரவேற்புரை நிகழ்த் தினார். பழ.ராமசந்திரன் (சி.பி.ஐ. மாவட்ட செயலர்) மாநாட்டைத் தொடக்கி வைத்து உரையாற்றினார்.

கோவை ஞானி ''உலக மயமாக்கலும் மார்க்சியமும்'' எனும் தலைப்பிலும், பேரா. ராஜ முருகு பாண்டியன், ''உலக மயமாக்கலும் சாதி மதங்களும் எனும் தலைப்பிலும், செம்மலர் நடராசன் 'உலக மயமாக்கலும் கம்யூனிஸ்டுகளும்' எனும் தலைப்பிலும், பத்திரிக்கையாளர் எஸ்.வி.ராஜதுரை ''உலக மயமாக்கலும், இந்திய வளர்ச்சிப் பாதையும்'' எனும் தலைப்பிலும் கட்டுரை படித்தனர். வே.ஆனைமுத்து (மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி) ''உலக மயமாக்கலும் இந்தியாவும்'' எனும் தலைப்பில் உரையாற்றினார்.

இரண்டாம் அமர்வுக்குப் பேரா. கோச்சடை தலைமை தாங்கினார். ''உலக மயமாக்கல் சூழலில் மார்க்சியமும் இன்றைய நடைமுறைகளும்'' எனும் தலைப்பில் உரையாற்றினார். இல. கோவிந்தசாமி, 'உலக மயமாக்கல் சூழலில் பொதுவுடைமை இயக்கத்தின் பிளவும் பின்னடைவும்'' எனும் தலைப்பிலும், பேரா. ந.முத்துமோகன், ''உலக மயமாக்கல் சூழலில் மார்க்சியமா? பின் நவீனத்துவமா?'' எனும் தலைப்பிலும் உரையாற்றி னர்.

மூன்றாம் அமர்வுக்கு கா.சே. பாலசுப்பிரமணியன் (உறவு ஆசிரியர்) தலைமை தாங்கினார். தியாகு (தமிழ் தமிழர் இயக்கம்) 'உலக மயமாக்கலும் தேசிய இனப் பிரச்னையும்' எனும் தலைப்பிலும், பேரா. கல்யாணி ''உலக மயமாக்கலும், தனி மனித உரிமைகளும்'' எனும் தலைப்பிலும் கட்டுரை வாசித்தனர்.

உலக மயமாக்கலின் விளைவாக இந்தியத் துணைக் கண்டத்திலும் தமிழகத்திலும் விவசாயம், தொழில் துறையில் ஏற்பட்டு வரும் நெருக்கடிகளையும் - பாதிப்புக்களையும் ஆய்வு பூர்வமாக அனைவரும் முன் வைத்தனர்.

இம்மாநாடு இடது சாரிகளிடையே மனந்திறந்த விவாதத்தையும், கருத்து வேறுபாடுகளைக் களையவும் வருங்கால ஒற்றுமைக்கும் இதன் தொடர்ச்சியாகச் சமுதாய மாற்றத்திற்கான பயணத்தை விரைவுபடுத்தும் எனச் சொல்லலாம்.

மாநாட்டில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன.

(அ) ஜனநாயகம், ஆண்/பெண் சமத்துவம் நாட்டு விடுதலை மற்றும் சோசலிச நோக்கங்களுக்காகப் போராடி உயிர் நீத்த அனைத்துலகத் தியாகிகளுக்கும் இம்மாநாடு வீர அஞ்சலியைத் தெரிவிக் கிறது. (2 நிமிட மவுன அஞ்சலி)

(ஆ) ஜி-8 நாடுகளின் மேலாதிக்கத்திற்கான 'உலக மயமாக்கலை' இம்மாநாடு வன்மையாக எதிர்க்கிறது; கண்டிக்கிறது.

(இ) சாதிய ஒடுக்குமுறை, ஆணாதிக்க ஒடுக்குமுறை தேசிய இனச் சிறுபான்மை மற்றும் மதச் சிறுபான்மையி னருக்கு எதிரான ஒடுக்குமுறை மொழி வழித் தேசிய இன ஒடுக்குமுறை உள்ளிட்ட எல்லாவித ஒடுக்குமுறைகளையும் - ஒடுக்கப்பட்டோருக்கு எதிரான அனைத்துலக வகை அடக்குமுறைகளையும், இம்மாநாடு வன்மையாக எதிர்க்கிறது.

(ஈ) ''மார்க்சியமே வெல்லும்'' என்பதை அடிப்படை முழக்கமாகக் கொண்டு - உலகெங்குமுள்ள இடது சாரிகளின் ஒற்றுமையை முன்னெடுக்குமாறு அனைத்து நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகளுக்கும் இம்மாநாடு அறைகூவல் விடுக்கிறது.

(உ) பேராசான்கள் மார்க்சும், ஏங்கெல்சும் 'கம்யூனிஸ்டுக் கட்சி அறிக்கையில்' பிரகடனப்படுத்தியபடி, தத்தமது நாடுகளிலுமுள்ள கம்யூனிஸ்டுகளும், ஆளுகிற - ஆதிக்கப் பிரிவினரை எதிர்த்த போராட்டங்களில் அனைத்து வகை சனநாயக சக்திகளையும் நாட்டுப் பற்றாளர்களையும், முற்போக்குச் சக்திகளையும் ஒன்றிணைக்குமாறு இம்மாநாடு வேண்டுகோள் விடுக்கிறது.

மாநாட்டின் முடிவாக வெ. ராமச்சந்திரன் நன்றி கூறினார். இம் மாநாட்டில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் 250க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

— செய்தி: கா.சே.பாலசுப்பிரமணியன்

படிப்பகம்

www.padippakam.com






# தந்தை பெரியார் பிறந்த நாள்:

## 'சிலைக்கு மாலை! சமாதிக்கு மலர்வளையம்! சுயமரியாதைக் கொள்கைக்கு விடை கொடாதீர்! சுயமரியாதைக் கொள்கையை வென்றெடுக்க வாரீர்!

தந்தை பெரியார் பிறந்த நாள் 1879 செப்டம்பர் 17. அவர் சுயமரியாதை இயக்கம் கண்ட நாள் 26.12.1926.

பார்ப்பனர் அல்லாதார் சுயமரியாதை பெறவேண்டும் என்பதே அவருடைய முதலாவது நோக்கம். எனவே 'சுயமரியாதையே நமது பிறப்புரிமை!' என்கிற கோட்பாட்டை முதலாவதாக அவர் அறிவித்தார், ஏன்?

பிறவி ஒன்றை மட்டும் காரணமாகக் கொண்டு, பார்ப்பனர் அல்லாதார் எல்லோரும் கீழ்ச்சாதிக்காரர்களாக - சூத்திரர்களாக - சமூகத்தில் சம உரிமை அற்றவர்களாகக் கருதப்பட்டனர்; நடத்தப்பட்டனர். இது இழிவானது என்பதைப் பார்ப்பனர் அல்லாதார் இன்றளவும் உணரவில்லை. கல்வி கற்றோர் - கடவுள் பற்றாளர் - செல்வம் பெற்றோர் - அரசியல் தலைவர் - பெரிய நில உடைமைக்காரர் - அகவையில் முதிர்ந்தவர் என்கிற எந்தத் தகுதி பெற்றிருந்த பார்ப்பனரல்லாதாரும் இதை உணரவில்லை. இத்தகுதிகள் எல்லாவற்றையும் பெற்றிருந்த சர்.பிட்டி. தியாகராயர் பார்ப்பனரால் சம உரிமை பெற்றவராக நடத்தப்படவில்லை; தம்மோடு காங்கிரசில் இருந்த வரதராசலு நாயுடு, திரு.வி.க., வ.உ.சிதம்பரனார், என்.தண்டபாணி இவர்களில் எவருக்கும் காங்கிரசிலிருந்த பார்ப்பனர்கள் சமுதாய சம உரிமை தர மறுத்தேவந்தனர். தம் பட்டறிவினாலும், சமுதாய நடப்பைப் பார்த்துப் பார்த்துப் புரிந்த அறிவினாலும் - 'பார்ப்பனர் அல்லாதாருக்குச் சுயமரியாதையே பிறப்புரிமை' என்ற முடிவுக்கு முதலாவதாக வந்தார்,பெரியார்.



'சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு' என்பதும் அவர் தந்த இன்னொரு முழக்கம். மனிதன் சுகவாழ்வு பெறக் கல்வி, சமுதாய ஒப்புரவு, பொருளாதார உரிமை, அரசியல் உரிமை எல்லாம் பெற்றிருக்கவேண்டும். 100க்கு 97 பேராக உள்ள பார்ப்பனர் அல்லாதாருக்கு இவற்றுள் எதுவும் இல்லை. எனவேதான், 'சுயமரியாதை வாழ்வே சுகவாழ்வு' என முழங்கினார்.

'அறிவுக்கு விடுதலை - சுயமரியாதை' என்பது அவர் தந்த அடுத்த முழக்கம்.

சமயம் - சாதிப் பழக்க வழக்கம் இவற்றுக்கு அடிமைப்பட்டு, அதனால் சிந்திக்கிற- கேள்வி கேட்கிற- எதையும் ஆராய்கிற அறிவை இழந்தவன் மனிதன் என்பதும் அவர் கண்ட உண்மை. மனிதருள் பெரும்பாலோர் தம் பேரில் சுமத்தப்பட்ட சமயம், நீண்டகாலப் பழக்க வழக்கம் காரணமாக அடிமைப்பட்டவர்களே. எனவே கட்டறுத்துச் சிந்திக்கிற உரிமையை - தாராளமாகச் சிந்திக்கிற உரிமையை, 'அறிவுக்கு விடுதலை' என அவர் மொழிந்தார்.

இத்தகைய சிந்தனையை ஊட்டிய பெரியார் இன்று சிலையாக நிறுத்தப்பட்டிருக்கிறார்.

படிப்பகம்

www.padippakam.com



பெரியார் பிறந்த நாளான செப்டம்பர் 17 அன்று, பெரியாரின் சிலைக்கு மாலை அணிவிப்பது ஊர் தோறும் நடத்தப்படுகிறது. பெரியார் பெயரால் இயக்கம் நடத்துவோரும் - திராவிடர் இயக்கம் எனக் கூறிக் கொண்டு வாக்கு வேட்டைக் கட்சிகளை நடத்துவோரும் இதை முனை மழுங்காமல் முனைப்போடு செய்கிறார்கள்.

பெரியாரைச் சிலையாக - சிமெண்ட் சிலையாக வடிப்பதை கும்பகோணம், அரியலூர், சென்னை முதலான இடங்களில் 1960 களிலேயே சிலைகள் செய்யும் தொழிற்சாலைக்காரரும், பெரியாரின் உண்மைத் தொண்டர்களுள் சிலரும் மேற்கொண்டிருந்தனர்.

பெரியாருக்கு முதன் முதலாக வெண்கலச் சிலையை வடித்து, அதனை, 17.9.1967 இல் திறந்து வைத்த ஊர் திருச்சிராப்பள்ளியே ஆகும். இப்படிச் சிலை வடிக்கப்படவும் திறக்கப்படவும் அடிப்படையாக விளங்கியவன் வே.ஆனைமுத்து என்கிற நான் ஒருவனே! இதற்கு ஒரு வரலாறு உண்டு.

திருச்சியில் தனிப் பயிற்சிக் கல்லூரி - தமிழ்நாடு தனிப் பயிற்சிக் கல்லூரி (T.N.T.C) என்ற பெயரில் சொந்தமாக ஒரு பயிற்சி நிறுவனத்தை 1963 இல் நான் தொடங்கினேன். 1960 - 1962 இல் திருச்சியிலேயே வேறொரு வணிக நிறுவனம் தொடங்கினேன்; அது இழப்புக்கு உள்ளாகிட நானே காரணமாக இருந்தேன். எப்படி?

விறகு வணிகம் தொடங்கிய நான் கடையைத் திறந்து வைத்து விட்டு, ஓர் ஆளை வைத்து விட்டும், வைக்காமலும் திருச்சி புத்தூர் ''பெரியார் மாளிகை''க்குப் போய் விடுவேன். அங்கு வருகிற தி.க. தோழர்களிடமும், பெரியாரிடமும் நீண்ட கலந்துரையாடல்களில் ஈடுபடுவேன்; அப்படியே களப்பணிகளுக்கும் சென்று விடுவேன்.

தனிப் பயிற்சிக் கல்லூரி தொடங்கப்பட்ட இரண்டாவது ஆண்டில் அதிக எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்ந்து விட்டனர். எனவே மாணவர்கள் தங்கவும் படிக்கவும் பெரியதோர் இடம் வேண்டப்பட்டது. ''பெரியார் இல்லம்'' ஒரு பெரிய வீடு; சுயமரியாதை இயக்கத்துக்குச் சொந்தமாக, திருச்சி தென்னூர் பட்டாபிராமப் பிள்ளைத் தெருவில் உள்ளது. அதனைக் குறைந்த வாடகைக்கு 1964 சூலையில், பெரியாரிடம் பெற்றேன்.

1964 சூலை முதல் - தெப்பக்குளம் அருகில் இருந்த என் தனிப் பயிற்சிக் கல்லூரி, தென்னூர் ''பெரியார் இல்லம்'', புத்தூர் ''பெரியார் மாளிகை'' என்கிற மூன்று இடங்களிலேயே என் பகல் பொழுதுகளும் இரவு நேரங்களும் கழிந்தன. என் வீட்டை அறவே மறந்தேன்.

1954 ஏப்பிரல் முதல் காமராசர் ஆதரவு என்று தொடங்கி, அது 1962க்குள் காங்கிரசு ஆதரவு என மாறிவிட்ட காலக் கட்டம் அது. அதன் விளைவாகப் பார்ப்பனர் ஆதிக்க எதிர்ப்பு உணர்வு, வடநாட்டான் ஆதிக்க எதிர்ப்பு உணர்வு, காங்கிரஸ் எதிர்ப்பு உணர்வு இவை தி.க.வினரிடம் மங்கி வருவதாக உணர்ந்தேன். இதுபற்றிப் பெரியாரிடம் உரையாடுவதை அடிக்கடி நான் மேற்கொண்டேன். அதன் விளைவு என்ன?

தி.க. தொண்டர்களுக்குக் கொள்கைப் பயிற்சி வகுப்பு நடத்துவது 1949க்குப் பிறகு நடைபெறவே இல்லை. அப்படிப் பயிற்சி வகுப்பு நடத்துவதை மீண்டும் மேற்கொள்ள வேண்டும் எனப் பெரியாரிடம் வற்புறுத்தினேன். அவரும் ஒத்துக் கொண்டார்; மணியம்மையாரும் இசைவளித்தார். பயிற்சி வகுப்பை நடத்தும் பொறுப்பை என்னிடமே ஒப்படைத்து, அதுபற்றி, ''விடுதலை'' நாளேட்டில் ஓர் அறிவிப்பையும் பெரியார் வெளியிட்டார். உணவு, பயிற்சி வகுப்பு எல்லாமே ''பெரியார் இல்லத்தில்'' நடைபெற்றன. முற்பகல் முழுவதிலும் பெரியாரே வகுப்பு நடத்துவார்; பிற்பகலில் நான் வகுப்பை நடத்துவேன்; கி.வீரமணி, ஈ.வெ.கி.சம்பத், நாகை எஸ்.எஸ்.பாட்சா முதலானோர் ஒவ்வொரு நாள் பிற்பகலில் பாடம் கற்பித்தனர். அன்று தொடங்கி, 1972 முடியப், பெரியாரும் நானும் பங்கேற்று வகுப்புகளை நடத்தாத ஆண்டே இல்லை.

இதற்கிடையில் ''திருச்சி நகர மக்கள் குழு'' என்கிற ஓர் அமைப்பை உருவாக்கினோம். இதன் பொறுப்பாளர்களாக சே.மு.அ். பாலசுப்பிரமணியம், பொறிஞர் கு.ம.சுப்பிரமணியம், நோபிள் கு. கோவிந்தராசலு, வே.ஆனைமுத்து, ச.சோமு, கோ.முத்துகிருஷ்ணன், து.மா.பெரியசாமி முதலானோர் செயல்பட்டோம். பெரியார் பிறந்த நாளை முன்னிட்டு, ''சுயமரியாதைக் குடும்பங்கள் விழா'' என நடத்தி, ஆயிரக்கணக்கானோரை வரச் செய்து, அவர்களுக்கும் பெரியாருக்கும் இனிய, செழுமையான புலால் உணவு அளிப்பதையும், அவ்விழாவில் பெரியாரைப் பேசச் செய்வதையும் மேற்கொண்டோம். இதனைப் பின்பற்றிச் சிக்கல், நாகை, இலால்குடி முதலான பல இடங்களிலும் ''சுயமரியாதைக் குடும்பங்கள் விழா'' நடைபெற்றது.

படிப்பகம்

www.padippakam.com



இத்துடன் நின்றோமா? இல்லை.

'பெரியாருக்கு ஒரு சிலை வையுங்கள்' என்கிற எண்ணத்தைத் திருச்சி மாவட்டக் காவல் துறை அலுவலக முதுநிலை எழுத்தர் நா.நாராயணசாமி எனும் என் நண்பர் என் நெஞ்சில் விதைத்தார். அதுபற்றி அடிக்கடி அவர் நினைவூட்டினார். அவர் கடவுள் பற்றாளர். அவருடைய எண்ணத்தைப் பற்றிக் கொண்ட நான், அதுபற்றி, அடிக்கடி நோபிள் கு. கோவிந்தராசலு, கோ.முத்துகிருஷ்ணன் ஆகியோரிடம் கூறி வற்புறுத்தினேன். ''திருச்சி நகர மக்கள் குழு'' சார்பில் பெரியாருக்கு முழு வெண்கலச் சிலை எடுத்து, திருச்சியில் ஒரு பொது இடத்தில் அதைத் திறப்பது என முடிவு செய்தோம்.

எங்களுடைய இந்த முடிவுக்குப் பெரியாரின் ஒப்புதல் வேண்டுமே!

நானும், நோபிள் கோவிந்தராசலுவும், பெரியாரை அவர் திருச்சியில் இருந்த ஒவ்வொரு நாளும் மாலை 4 மணிக்குச் சந்திப்பது வழக்கம். அப்படிப்பட்ட ஒரு சந்திப்பில் 'திருச்சி நகர மக்கள் குழு' எடுத்துள்ள சிலை எடுப்பு முயற்சி பற்றிப் பெரியாரிடம் கூறி, அவருடைய ஒப்புதலை வேண்டினோம்.

பெரியார், எடுத்த எடுப்பில், 'ஏம்ப்பா நாம்ப சிலையை உடைக்கிறவங்க. எனக்கு நீங்க எதுக்குச் சிலை வைக்கிறீங்க? அதை நாளைக்கு ஒருத்தன் உடைப்பான்ல?' என்று திட்டவட்டமாகக் கூறி, 'சிலை வைப்பது வேண்டாம்' என உணர்த்தினார். 'பெரியார் பக்தி'க்கு ஆட்பட்டிருந்த எங்களுக்கு அது அன்று உறைக்கவில்லை; அதன் முதன்மையை நாங்கள் உணரவில்லை. எனவே பெரியாருக்குப் பெருமை சேர்ப்பதற்காகத் தவறாகக் கருதி, இக்குழுவினர் இரவு பகலாக அலைந்து, போதிய நிதி திரட்டுவதிலும், சென்னைக்குச் சென்று நாகப்பா சிலை வடிப்பகத்தில் சிலை செய்வதிலும் முனைந்து ஈடுபட்டு விட்டோம்.

சிலை வடிப்பு வேலைக்கு இடையே, சிலை நடப்பட வேண்டிய அடிக்கல் ஒரே பெரிய கல்லாக இருக்க வேண்டும் - பல துண்டுகளைப் பொருத்தக் கூடாது என்று முடிவெடுத்தோம். அப்படி ஒரே கல்லுக்கு முன் பணம் தந்து, கல் ஏற்பாடு செய்ய வேண்டி, வேலூருக்குச் சென்றனர், நோபிள் கோவிந்தராசலு, உறையூர் கோ. முத்துகிருஷ்ணன் இருவரும். அன்று அங்கே தி.க. பொதுக்கூட்டம்; பெரியார் வந்திருந்தார். மேலே கண்ட இருவரும் அங்குப் பெரியாரைச் சந்தித்தனர்; சிலை பீடத்துக்கு ஏற்ற ஒரே கல் ஏற்பாடு செய்ய வந்திருப்பதை அவரிடம் கூறினர்.

உடனே, ''உங்களுக்குப் புத்தி இல்லியா? சிலை கூடாதுங்கறேன் - அதை உடமாட்டேங்கிறீங்களே! நாசமாப் போங்க!'' என்று கூறிச் சினந்து கொண்டார், பெரியார். அதன் பிறகும் எங்களுக்கு அறிவுத் தெளிவு வரவில்லை.

சிலை நிறுவப்பட ஏற்ற ஓர் இடத்தை, நகர மன்றத் தலைவர் ஏ.எஸ்.ஜி. லூர்து சாமிப் பிள்ளை ஆதரவில், நகர மக்கள் குழுவினர், நகராட்சியிடமிருந்து விலைக்குப் பெற்றுக் கொண்டோம். அங்கே தான் 17.9.1967 இல் பெரியார் சிலை நிறுவப்பட்டது.

சிலையைக் காமராசர்தான் திறக்க வேண்டும் என்பது பெரியாரின் பெரு விருப்பம்.

காமராசர் 1967 தேர்தலில் தோல்வியுற்றார்; தி.மு.க. வெற்றி பெற்று, அறிஞர் சி.என். அண்ணாத்துரை முதல்வராகி விட்டார். அவர் முதல்வர் பொறுப்பை ஏற்கு முன் திருச்சியில் பெரியாரைச் சந்தித்தார். அச் சந்திப்பின் விளைவாக 6.3.1967 இல் அண்ணாத் துரையை ஆதரித்துப் பெரியார் தீர்மானம் நிறைவேற்றி விட்டார். சிலை திறப்பு அன்று, முதலமைச்சரும் வரவேண்டும்; காமராசரும் வரவேண்டும். எனவே, முதலமைச்சர் அண்ணா, 17.9.1967 முற்பகலில் விழாவில் உரையாற்றிச் சென்றார்.

பெரியாரும் அண்ணாவும், 1949க்குப் பிறகு, 17.9.1967இல் ஒன்றாக அமர்ந்து திருச்சி தெப்பக்குளம் அருகிலிருந்து ஊர்வலமாக வந்த காட்சியைப் பொறுக்காத கறுஞ் சட்டையினர் பலர், கடுஞ்சினங் கொண்டு முற்பகலிலேயே ஊருக்குத் திரும்பி விட்டனர். தி.மு.க. - தி.க.வினரிடையே அன்று வளர்ந்திருந்த கசப்பு அவ்வளவு கடுமையானது.

திருச்சி பெரியார் சிலை திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

அவ்விழாவிலும் பெரியார் பேசினார்: ''எனக்குச் சிலை வைக்காதீங்கண்ணு சொன்னேன். அதைக் கேட்காம வக்கிறாங்க. இதை நாளைக்கு ஒருத்தன் உடைப்பான்'' என்றார், துல்லியமாக.

அதன் பின்னரும் சிலையை நிறுவிய எங்களுக்குப் புத்தி வரவில்லை; எங்களையொத்த மற்ற பெரியார் தொண்டர்களுக்கும் அறிவு வரவில்லை.

திருச்சி சிலை திறப்பை ஒட்டி தருமபுரி, தஞ்சாவூர், சேலம் முதலான இடங்களில் பெரியார் சிலைகள் நிறுவப்பட்டன.

''பின்னாளில், இந்தச் சிலையாக

படிப்பகம்

www.padippakam.com



நிற்கிற இராமசாமிதான்- கடவுள் இல்லை என்று சொன்னவன்'' என்று மக்கள் அறிந்திட இந்தச் சிலை பயன்படும்'' என்று, பெரியாரே பிறகு பேசினார். அப்படிப்பட்ட கொடிய நிலைக்கு அவரைத் தள்ளிவிட்டோம், ஏன் அது கொடியது?

1968, 1969, 1970, 1971 ஆம் ஆண்டுகளில், நானும் சிலை வைக்கக் காரணமாக இருந்த தோழர்களும், ''செப்டம்பர் 17 அன்று, முதலாவதாகச் சிலைக்கு மாலை போடுவது நாமாக இருக்க வேண்டும்'' என்று கருதி மூடத்தனமாகச் செயல்பட்டோம்.

17.9.1971 அதிகால 5.30 மணி.

நானும், நோபிள் கோவிந்தராசலு குடும்பத்தாரும் ஓர் அம்பாசிடர் உந்து வண்டியில் ஏறிப் பெரியார் சிலைக்குப் பின் புறமாக மெதுவாகச் சென்று, வண்டியை நிறுத்தினோம். அந்த வைகறையில் குளித்து முழுகி விட்டு, நெற்றியில் திருநீறு குங்குமம் அணிந்து வந்து, கண்களை இறுக மூடிக் கொண்டு, கைகளைக் கூப்பிக் கொண்டு, பெரியார் சிலைக்கு எதிரே நின்று, ஒரு மூதாட்டி பெரியார் சிலைக்கு வணக்கம் செய்து கொண்டிருந்தார் - அவருக்கு 55 வயதிருக்கும்.

அந்தக் கண்ணராவிக் - காட்டுமிராண்டிக் காட்சியைக் கண்ட அக்கணத்தில்தான், 'சிலை வணக்கம் உள்ள நம் நாட்டில் பெரியாருக்குச் சிலை வைத்தது தவறு என்கிற புரிதல்' எங்களுக்கு உறைத்தது. ''பெரியார் சிலைக்கு மாலை போடுவது இதுவே கடைசி தடவை'' என்று கூறிவிட்டு, மாலையைப் போட்டுவிட்டு வந்த நாங்கள், அதன் பிறகு அந்த மூடச் செயலைச் செய்வதைத் தவிர்த்தே விட்டோம், பெரியார் இருந்த போதே!

*பெரியார் உயிரோடு இருக்கிறார்; அவருடைய சிலைக்குக் மாலை போட வேண்டாம்; அவருக்குப் பிறந்த நாளில் மாலை போடலாம் அல்லவா?*

இந்த எண்ணத்தில், *1972* இல் நான் ஒரு மாலை வாங்கி வரச் செய்தேன். வட்டிக்குக் கடன் பெற்று, ''பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்'', தொகுப்புப் பணியில் நான் மூழ்கிக் கிடந்த கட்டம்; கையில் காசு கட்டை. எனவே என் பள்ளி ஆசிரியரிடம் தந்த காசுக்கு ஒரு சிறிய ரோசாப்பூ மாலையே கிடைத்தது. அம்மாலையை எடுத்துக் கொண்டு, விரைந்து சென்று, ''பெரியார் மாளிகை''யில் பெரியாரைப் பார்த்து, அவருக்குச் சூட்டினேன். அவருடைய பருத்த தலை வழியாக மாலை கீழே இறங்க மறுத்தது; அவரே கீழே இழுத்துக் கழுத்தில் தொங்கப் போட்டுக் கொண்டு, என் வலது கையைப் பற்றிக் கொண்டு, ''இது என்ன வேலை? வலது கைக்கு இடது கை மாலை போட்டுக்கிறதா? போ, போ'' என்று இடித்துக் கூறினார். அதுதான் பெரியாருக்கு நான் சூட்டிய கடைசி மாலை.

பெரியாரின் சுயமரியாதைக் கொள்கையை *1944* முதல் ஏற்றுக் கொண்டு, ஊர் ஊராகச் சென்று, ''பார்ப்பானை அழைத்துத் திருமணம் செய்யாதே! திதி-திவசம் கொடுக்காதே! பார்ப்பானை சாமிக்குப் படைக்கச் சொல்லாதே! தீபாவளியைக் கொண்டாடாதே! கல்லைக் கும்பிடாதே! தேர் திருவிழா நடத்தாதே! பாரதம் பாடாதே!' என்று நானும் ஆசிரியர்கள் ந.கணபதி, மறைந்த மு.அழகப்பன் மற்றும் மறைந்த ஆ.செ.தங்கவேலு, கி.இராமசாமி முதலானோரும் எண்ணற்ற நாள்கள் மணிக்கணக்கில் பேசிப் பரப்புரை செய்திருக்கிறோம்.

'கல்லைக் கும்பிடாதே! சமாதி வைக்காதே! சமாதிக்குப் படைக்காதே!' என்று ஊர் தோறும் பேசியிருக்கிறோம்; இன்றும் பேசுகிறோம்.

பெரியார் *24.12.1973* இல் மறைந்தார். அன்றைய நாளில், காலை 9 மணிக்கு அவரும் நானும் உடையார் பாளையம் அடுத்த இரும்புலிக் குறிச்சியில், சாமி நாதன் நெல் அரவை ஆலைத் திறப்பு விழாவில் பங்கேற்றிருக்க வேண்டும். அது நடைபெறவில்லை.

பெரியார் மறைந்து விடுவார் என்பதை, *23.12.73* இரவு *12* மணிக்கே, திருச்சித் தோழர்கள் உணர்ந்தோம். வேலூரில் மருத்துவமனையில் பெரியார் படுக்கை அறையிலிருந்து இரண்டு தடவைகள் எங்களை வெளியேற்றினர், வீரமணி குழுவினர். உடனே அறைக்கு வெளியே, பெரியாரின் முகத்துக்கு எதிரே, பலகணி அருகில், நாற்காலிகளைப் போட்டு, இரவு முழுவதும் கண்ணயராது அமர்ந்திருந்தோம். பசி மயக்கம் தீர, *24* அதிகாலையில் வெளியே சென்று காப்பி அருந்தி விட்டு, மீண்டும் பெரியாரின் படுக்கை அறைக்கு வந்தோம். நான் அவருடைய தலைமாட்டில் வலப்புறம் நின்று கொண்டேன். காலை *7.20* மணி. காலை *7.40* மணி அளவில் ''அஹ்...'' என்ற ஒலியுடன் பெரியாரின் மூச்சு வெளியேறியது. பின்னும் சற்று நேரத்தில் டாக்டர்கள் ஜான்சன், பட் இருவரும் வந்து பெரியாரின் உடம்பை மேலும் கீழும் அழுத்திச் செயற்கையாக மூச்சை வரவழைக்க முயன்றனர்; பயன் இல்லை. எனவே, 'பெரியார் இறந்து விட்டார்' என அறிவித்தனர்.

பெரியாரின் உடலைப் பதப்படுத்த வேண்டி, அறுவை அறைக்கு எடுத்துச் சென்றனர். அப்போதும், பிறகு வேலூர் மருத்துவமனை வாயில் முற்றத்தில் அவருடைய உடலைப் பொதுமக்கள்

படிப்பகம்

www.padippakam.com



பார்வைக்கு வைத்தபோதும், பெரியாரின் முதன்மையான தொண்டர்கள் கூட அருகில் வரக் கூடாது என்றே தடுக்கப்பட்டனர்.

24.12.73 காலை 10 மணி வாக்கில், நா.சு. சம்பந்தம் மருத்துவமனை பெரிய நுழைவாயில் வழியாக வெளியே சென்றார். 'எங்கே போகிறீர்கள்' எனக் கேட்டேன். 'சென்னைக்குப் பேகிறேன்' என்றார். 'எதற்காகத் தனியே போகிறீர்கள்?' எனக் கேட்டேன். ''முன்னால் போய்ப், பெரியாரை அடக்கம் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்காகப் போகிறேன்'' என்றார்.

''அதென்ன அடக்கம் செய்வது?'' என்று நான் கேட்டவுடனே, ''அதை அங்கே போய்க் கேளுங்க!'' என்று கூறி விட்டு, ஓர் ஊர்தியில் ஏறிப் பறந்தார்.

''அங்கே!'' என்பது வீரமணி - மணியம்மை முதலானவர்களைக் குறிப்பது. அவர்களை யார் கேட்பது?

தந்தை பெரியாரின் உடல், பெரியாரின் கொள்கைப் பரப்புரைக்கு - கருத்துரைக்கு எதிராக - ஏதோ ஓர் உள் நோக்கத்துடன், பெரியார் திடலில் குழியில் புதைக்கப்பட்டது.

ஆண்டுதோறும் செப்டம்பர் 17 அன்று சுயமரியாதைக்காரர்கள் - கறுஞ்சட்டை அணிந்து, மலர் வளையம் சுமந்து சென்று வைத்துவிட்டு, அங்கேயே ஒரு சூளுரையை - எப்போதும் இல்லாத ஒரு மூடத்தனமான சூளுரையை - ஒருவர் முன் சொல்ல, மற்ற எல்லோரும் பின் சொல்ல, சமாதி வணக்கம் தங்குத் தடையின்றி நடைபெறுகிறது.

முன்னோர்களின் - வீரர்களின் அரசர்களின் சமாதிகள்தாம் கறுப்பய்யா, அய்யனார், செல்லியம்மன், மாரியம்மன், காடன், மாடன், வீரன் என்ற பெயர்களில் பின்னாளில் கோவில்களாக வளர்ந்தன என ஊர்தோறும் பேசியவர்கள் - பக்கம் பக்கமாக எழுதியவர்கள் சுயமரியாதைக்காரர்கள்.

இன்று சுயமரியாதைக்காரர்கள் என்று தங்களைக் கருதுவோர் அனைவரும் பெரியாருக்குச் சிலை நடுவதில் தீராத நட்டம் கொள்கின்றனர்; பெரியாரின் சிலைக்கு மாலை அணிவிப்பதை நீங்காக் கடமையாகச் செய்கின்றனர்; பெரியாரின் சமாதிக்குச் சென்று வணக்கம் செலுத்துவதில் பெருமை கொள்ளுகின்றனர்.

இவை பெரியாரை வணங்கப்பட வேண்டிய ஒரு மகானாக - கடவுளைப் போன்றவராகப் பின்னாளில் எல்லா மக்களும் கருதி, அப்படியே நம்பிச் செயல்படக் கெட்டியான ஓர் அடித்தளத்தைப் போடுவதாகும். இதில் அணுவளவும் அய்யமில்லை.

பெரியாரே 1966 இல் எங்களிடம் சொன்னது போல், பெரியாரின் சிலையை என்றோ ஒருநாள் எவனோ ஒருவன் உடைப்பான்; உடைக்க வேண்டும்.

1975 இல் முதன் முதலாக இப்படிப் பேசியவர் மறைந்த திருச்சி நோபிள் கு. கோவிந்தராசலு ஆவார். எங்கே? எப்போது?

''பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்'' என்ற நூல் 1.7.1974 இல் திருச்சியில் வெளியிடப்பட்டது. ''இந்நூல் அதிகமாக விலை போடப்பட்டிருக்கிறது. பெரியார் இருந்தால் இவ்வளவு விலை போட்டிருக்க மாட்டார்'' என்று விழா மேடையிலேயே கூறி, ''இதை வாங்காதீர்கள்!'' என்று தி.க.வினர்க்குச் சாடை காட்டினார், மணியம்மையார். 1974, 1975, 1976, 1977, 1978 ஆண்டுகளில் இதை ஒரு பரப்புரையாகவே வீரமணிக் குழுவினர் மேற்ஸ்ரீஸ்ரீண்டனர். வே.ஆனைமுத்து என்கிற என்னை - திருச்சி சிந்தனையாளர் கழகத்தைச் செயலிழக்கச் செய்திடவும் - மறைத்திடவும் அதுதான் வழி என்று கருதிய அவர்கள், உலக மானிட விடுதலை நோக்கிய பெரியாரின் அரிய கருத்துகளை ஒரு சேரக் கொண்டிருக்கிற ''பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்'' என்கிற நூலைக் கறுப்புச் சட்டைக்காரர்கள் தொடாமலே - பார்க்காமலே - படிக்காமலே - வஸ்ரீஸ்ரீகூாமலே இருக்கும்படித் திறமையாகவே செயல்பட்டனர்; கி.பி. 2000 வரை செயல்பட்டனர்.

இந்நூலைப் போன்றதாக, 'பெரியார் களஞ்சியம்' என, கி.வீரமணி தொகுத்த நூல்கள் - கடவுள், மதம், பெண்ணுரிமை என்னும் மூன்று பொருள்களைப் பற்றி மட்டுமே மிக மிக விரிவான கருத்துகளை அடக்கியுள்ளன. இவற்றை மட்டும் பயில்வோர் 'இவர்தான் பெரியார்!' என ஓர் அரை குறை வடிவத்தையே காண முடியும். இது உறுதி.

இந்தச் சூழலில், இந்த இக்கட்டையும் மீறி, இராமநாதபுரம் மாவட்ட தி.க. தலைவராக விளங்கிய அருப்புக்கோட்டை சூ.ஆ.மு. முத்து முருகன், அம் மாவட்டச் செயலாளராக விளங்கிய மறைந்த இராசபாளையம் வ.பொன்னுசாமி இருவரும் துணிந்து, என்னை இராசபாளையத்துக்கு அழைத்து ஒரு தேநீர் விருந்தும், பொதுக்கூட்டமும் நடத்தி, பெரியார் கருத்துகளை ஏறக் குறையாக முழுமையாகத் தொகுத்தளித்ததற்காக 1975 இல் எனக்குப் பாராட்டு வழங்கினர்.

''பெரியார் ஈ.வெ.ரா. சிந்தனைகள்'' நூலைப் பரப்பவும்,

படிப்பகம்

www.padippakam.com



அரசு நூலகத்துக்கு வாங்கச் செய்யவும் வேண்டி, 1975 முழுவதும், திருச்சித்தோழர்கள் சென்னைக்குப் படையெடுத்தோம்; தோற்றோம். அதுசமயம் சென்னையில், இன்று பாவாணர் நூலகம் எனப் பெயரிய கட்டடத்தில், ஓர் அறையில் ஒரு பத்துப் பேர்களைக் கூட்டி வைத்து, திருச்சி சிந்தனையாளர் கழகத்தாருக்குப் பாராட்டுரை வழங்கினார், சென்னை பெரியாரியல் அறிஞர் மாணிக்க. சண்முகன். அவரே அதை மறந்திருக்கவும் கூடும். அப்பாராட்டுரைக்கு ஏற்புரை ஆற்றிய திருச்சி நோபிள் கோவிந்தராசலு அப்போது அங்கேயே சொன்னார்: "பெரியாருக்கு முதன் முதலாக வெண்கலச் சிலை வைத்தவர்கள் நாங்கள். பெரியாரின் விருப்பத்துக்கு எதிராகவே அவருக்குச் சிலை வைத்தோம். நாங்களே முதன் முதலாகப் பெரியார் சிலையை உடைப்போம்" எனக் கணீர் குரலில் கூறினார். உடன் வந்த திருச்சித் தோழர்களுக்கே கூட, அதிர்ச்சி வைத்தியம் செய்தார், அவர்.

பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக மக்கள் எதை எதை நம்பிப் பின்பற்றி வந்தார்களோ, வருகிறார்களோ, அவற்றில் மானிடச் சமுதாய - அறிவியல் - அரசியல் - பொருளியல் விடுதலைக்கு எதிராக உள்ளவை என்று அவரால் கருதப்பட்ட அனைத்தையும் முழு மூச்சுடன் எதிர்த்துக், காட்டாற்று வெள்ளத்தில் எதிர் நீச்சல் போட்டவர், தந்தை பெரியார்.

இன்று, பெரியாரின் 123 ஆவது பிறந்தநாள்!

பெரியார் தொண்டர்கள் தந்தை பெரியாரை முழுமையாகப் படிப்போம்; கற்போம்; ஆய்வோம். அவரை நாம் முழுமையாகப் புரிந்து கொள்வோம். அப்படிப் புரிந்து கொள்ளுகிற சுயமரியாதைக்காரர்கள் - ஏறக் குறையப் பெரியாரின் கோட்பாடுகளை ஏற்கிற - மதிக்கிற எல்லாத் தோழர்களையும், தோழமை அமைப்புகளையும் நத்தி அவர்களையும் இணைத்துக் கொண்டு - பெரியாரை முழுமையாகத் தூக்கிப் பிடிப்போம்; பெரியார் கொள்கையை வென்றெடுப்போம் எனச் சூளுரை செய்வோம். பெரியாருடைய சுயமரியாதைக் கொள்கைகளை வென்றெடுப்போம்; வாரீர்!

1.9.2001 வே.ஆனைமுத்து

## சென்னையில் எழுச்சியுடன் முடிந்த தந்தை பெரியார் திராவிடர் கழகத் தொடக்க விழா மாபெரும் கருஞ்சட்டைப் பேரணி

*11.8.2001* அன்று சென்னையில் தந்தை பெரியார் திராவிடர் கழகத் தொடக்க விழா மிகுந்த எழுச்சியுடன் நடைபெற்றது. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்திருந்த பல்லாயிரக்கணக்கான கருஞ் சட்டைத் தோழர்களால் சென்னை நகரமே கருஞ்சட்டைக் கடலாகக் காட்சி தந்தது. தேனாம்பேட்டை காமராசர் அரங்கில் காலை 11 மணியளவில் மதுரை வெண்மணி கழகக் கொடியேற்றலுடன் நிகழ்ச்சி தொடங்கியது. வே.ஆனைமுத்து மாநாட்டைத் தொடங்கி வைத்து உரையாற்றினார். 'ஊடுருவும் இந்துத்துவ சக்திகள்' என்னும் தலைப்பில் நடந்த கருத்தரங்கிற்கு விடுதலை இராசேந்திரன் தலைமை ஏற்றார். முனைவர் சக்குபாய், பேராசிரியர் அ.மார்க்சு, வழக்கறிஞர் அஜிதா, பாமரன், சங்கமித்ரா, மருத்துவர் விமுனா மூர்த்தி, வழக்கறிஞர் வீ.அழகரசன் ஆகியோர் பல்வேறு தலைப்புகளில் உரையாற்றினர். தொடர்ந்து அப்துல்காதர் தலைமையில் நடைபெற்ற பாட்டரங்கில் கபிலன், குட்டி ரேவதி, தாயன்பன், தமிழமுதன், காளமேகம், குப்புராஜ், தமிழேந்தி ஆகியோர் எழுச்சிக் கவிதைகள் படைத்தனர். விடுதலைச் சிறுத்தைகள் அமைப்பாளர் இரா. திருமாவளவன் சிறப்புரை ஆற்றினார்.

மாலை 5 மணியளவில் எழுச்சியுடன் தொடங்கிய கருஞ்சட்டைப் பேரணிக்குக் கோவை கு. இராமகிருட்டிணன் தலைமை ஏற்றார். தியாகராயநகர் பெரியார் சிலை அருகில் கொளத்தூர் தா.செ.மணி தலைமையில் நடைபெற்ற இன எழுச்சி மாநாட்டில் பழநெடுமாறன், திருவாரூர் தங்கராசு, ஆனூர் செகதீசன், டாக்டர் கிருஷ்ணசாமி, வழக்கறிஞர் துரைசாமி, கவிஞர் இன்குலாப், பேராசிரியர்கள் சரசுவதி, நெடுஞ்செழியன், கல்யாணி, தஞ்சை இரத்தினகிரி உள்ளிட்ட தோழர்கள் உரையாற்றினர். இறுதியில் மு.பாலகுருவின் நன்றியுரையோடு மாநாடு சிறப்பாக நிறைவுற்றது.

படிப்பகம்

www.padippakam.com



**மன்னார்சாமியின் மரத்தடி மன்றத்தில் இந்த மாத அரசியல் 6**

# இந்திரா காந்தி கோழிக்குஞ்சு திருடினார்

- ஓலைப்பட்டி கந்தையா

(மன்னார் சாமி - மலர் ஆஸ்பத்திரி எதிரில் மரத்தடியில் செருப்புத் தைக்கிறவர். மலைக்குடி மருதமுத்து - மலர் ஆஸ்பத்திரிக்கு இதய அறுவைச் சிகிச்சைக்கு என்று 5 ஏக்கர் நிலத்தை விற்று விட்டு வந்தவர். இன்று மகள் வீடும் மரத்தடியும் என்று ஆகிவிட்டவர். ஏ.ஜி. ஆபீஸ் வெங்கடேசய்யர் - பதவி ஓய்வு பெற்ற அக்கவுண்டன்ட்)

**வெங்கடேசய்யர்:** ஓய் மருதமுத்து - அப்பா மன்னார்சாமி - இந்தாங்கோ ஸ்பெஷல் வட இந்திய இனிப்பு - எடுத்துக்குமே - இந்தாப்பா.

**மருதமுத்து:** இப்ப வட இந்தியாவுக்குக் கூட போய் கருமாதி செய்ய ஆரம்பிச்சுட்டீரா? சொல்ல முடியாது - கருமாதி பண்றவங்க - ஸ்கூட்டர்லே மட்டும் தான் போகணுமின்னு இருக்கா? ஃபிளைட்லேயும் போகலாமே.

**மன்னார்சாமி:** செருப்பு தைக்க எவனாச்சும் இனிப்போட வர்றானா? கருமாதி பண்ண - கல்யாணம் பண்ண மட்டும் ஸ்வீட். அதிலேயும் கொடுமையடா சாமி.

**வெங்கடேசய்யர்:** ஓய் மானா பூனா - அதாவது மகா புண்ணியவானே. இது கருமாதி பலகாரம் இல்லை. என் அத்திம்பேரோட ஒண்ணு விட்ட சித்தி பேரன் பூரியிலே இருக்கான். பூரி கோவில் பிரசாதம். அட, அடா! 56 பட்சணமாம் தினம். ஆறுவேளை நைவேத்யமாம். சாதாரண நாளில் 10,000 பிராமணா சாப்பிடறாளாம். பண்டிகை நாளில் ஒரு லட்சம் பேர்; பேசாம பூரிக்கு டேரா தூக்கிட்லாமானு தோணுது.

**மருதமுத்து:** ஆமாம்; இங்கே அவப் பட்டினி கிடக்கீர். பூரிக்கு ஓடணும். ஏன் ரூ. ஒரு கோடி செலவில் ஓசூர் சந்திர சூடேஸ்வரருக்கு திருப்பணி செய்யும் டி.வி.எஸ். கும்பலிடம் தினம் பிராமண போஜனம் நடத்தச் சொல்றதுதானே!

**மன்னார்சாமி:** அவ்வா! அவ்வா (வாயில் அடித்துக் கொண்டு) ஒரு கோடியா? அடபாவிகளா - காலேஜ் பீஸ் கட்ட பிச்சை போடுங்கன்னு - ஏழை எளியதுகளின் யாசகக் குரல் தினம் பேப்பரில் வரச்சேயா?

**வெங்கடேசய்யர்:** அங்கேதான் நீ தப்பு பண்றே மன்னாரு. பிச்சை எடுக்கறதுக்கு எக்ஸ்குளூசிவ் ரைட் பிராமணனுக்கு மட்டும்தான். பிச்சையின் ரூலே - பிராமணனுக்கு பிச்சை போட்டா புண்ணியம் - சூத்திரனுக்குப் பிச்சை போட்டா பாவம் -கிறது. இனாம், தர்மம் பக்ஷிஸ், பிச்சை, தட்சணை, என்று பிச்சைக்கு 56 வார்த்தை பிராமணர்களிடம் புழக்கத்தில் இருக்கு தெரியுமா?

**வந்தவர்:** அப்ப சூத்திரன் என்ன கஷ்டம் வந்தாலும் பட்டினி கிடந்து சாக வேண்டியதுதானா?

**வெங்கடேசய்யர்:** அப்படில்லாம் இல்லியே! இந்துதர்மம் யாரையும் சுலபமா சாக விட்டுடாதே! கேளும்:

**சதுர் வர்ணயம் மயா சிருஷ்டம் - பிரம்மனாம் பரிசரியாத்மகம் சூத்திரஸ்யாபி பாவனாம்-**

அதாவது - நாலு சாதிகளும் மகாவிஷ்ணு படைத்தது. பிராமணர்களுக்கு சிசுருட்சை செய்வதே சூத்திரர்களின் கடமை.

**வந்தவர்:** (பட்டென்று குனிந்து செருப்பை கையில் எடுக்க வெங்கடேசய்யர் அதிர்ச்சியுடன் மருதமுத்து பின்னால் மறைய) சீக்கிரம் - இதில் ஒரு ஆணி அடிச்சு குடுய்யா. ஏடாகூடமா ஏதாச்சும் ஆயிடப் போவுது. (மருத முத்து பின்னால் மறைந்தபடி சீக்கிரம் சீக்கிரம் என்று மன்னார்சாமிக்கு வெங்கடேசய்யர் கை அசைக்கிறார். வந்தவர் செருப்புடன் போனவுடன்)

**மன்னார்சாமி:** இம்மாம் சாஸ்திரம் கரைச்சு குடிச்ச நீங்க - அன்னிக்கு கீழே இறங்கி ஓடி வந்து என் முதுகைத் தடவினப்ப நெகிழ்ந்து போயிட்டேன் சாமி!

**மருதமுத்து:** அய்யோ பாவம், மன்னார்சாமி.

படிப்பகம்

www.padippakam.com



வெங்கடேசய்யர் - முப்பது வருஷமா - ஏ.ஜி. ஆபீஸில் முதுகு தடவின பழக்கமப்பா! அது பாசத்தினால் அல்ல, சட்டைக்குள் பூணூல் இருக்கான்னு பார்க்க, பத்ரி நாராயணன்னு பேர் படைச்ச என் மருமகனை - எல்.அய்.சி.யில் தினம் இரண்டு பிராமணன் முதுகில் தடவுறானாம். அய்யா பழக்க தோசத்தில் உன் முதுகையும் தடவி விட்டார்.

மன்னார்சாமி: அய்யர் சமாச்சாரத்தை இப்படிக் கரதலையா கரைச்சு குடிச்சிருக்கீங்களே - மருதமுத்து அய்யா - எப்படீங்க?

வெங்கடேய்யர்: வேறு எப்படி? பாம்பின் கால் பாம்பறியும். பிராமணனும் வேளாளனும் சேர்ந்துதானே கீழ் சாதிக்காரர்களான 8000 சமணர்களைக் கழுவேத்தினா! கீழ் சாதிக்காரன் - பல இடங்களில் பிராமணனை பீட் பண்றான்: இப்ப கூட என்னை விட நல்லா சாஸ்திரம் படிச்சவர் வலம்புரிஜான்தான். அன்னைக்கு சன் டி.வி. யிலே குருபகவான் பத்திபேசினார் பாரு. அசந்துட்டேன்.

வந்தவர்: ஏன் - கருணாநிதியை அடித்து இழுத்து என்ற சரக்கெல்லாம் வெளுத்துப் போச்சாமாம் சன் டி.வி.க்கு. வலம்புரிஜானை விட்டு குருபகவான் பேச்சு வர்றது.

மருதமுத்து: (வாயில் கையைப் பொத்தி பேசாமல் இரும் என்று வெங்கடேசய்யருக்கு சைகை காட்டுகிறார்) செருப்புத் தைக்கும் இடைவேளைக்குப் பிறகு உரையாடல் தொடரும் என்று எல்லாரும் அமைதி காக்கிறார்கள், வந்தவர் போகிறார்)

வெங்கடேசய்யர்: உலகத்திலேயே மகா முட்டாள்களானவர்கள் - தமிழ்நாட்டுப் போலீஸ்காரர்களாகத்தான் இருக்கணும். கருணாநிதி கைதில் படம் பிடித்த ஒரே ஒரு சன் டி.வி.யை - உள்ளே விட்டிருக்கக் கூடாது - பிலிம் சுருளை பிடுங்கியிருக்கணுமின்னு நான் ஜெயா டி.வி. - காரன்கிட்டே பேசிட்டிருந்தேன். செய்தி போலீசுக்கு போயிருக்கும் போல. இப்ப தி.மு.க. பேரணியில் - பத்தாயிரம் பேர் கண் முன்னே - பத்து சேனல் டி.வி. கேமராவை பிடுங்கி உடைத்து - படத்தை கழட்டியிருக்கிறார்கள். முன்னே செய்யாதது ஒரு முட்டாள் தனம்; இப்ப செய்தது இரட்டை முட்டாள்தனம்.

மருதமுத்து: அய்யரே! ஒவ்வொரு போலீஸ்காரனும் பத்து கிரிமினலுக்கு சமம்னு வெச்சுக்கும். வேறு எந்த காரணமும் இல்லே. ஓயாம கிரிமினல்ஸ்கிட்டே டியூஷன் எடுத்துக்கிறதாலதான். தி.மு.க. பேரணியில் 30 இடத்தில் நிலை கேமரா; கூட 8 நகரும் கேமரா ஊர்வலப் பாதையில் செருப்பு - கல் விழுந்தது - வண்டை வண்டையா - முத்துக் கருப்பன் பெண்டாட்டி - எல்லாருக்கும் ... பாட்டி என்றது எல்லாம் படமாயிடுச்சாம். வெறும் கருணாநிதி கைதுக்கு வானத்துக்கும் பூமிக்குமா குதிச்ச பிஜேபி கும்பல் - ஆறு பேர் செத்த துப்பாக்கிச் சூடு பத்தி கப்சிப்பாயிடுச்சாம். கருணாநிதி பொங்கிப் புழுங்கி குமைந்து குலுங்குகிறாராம்.

வெங்கடேசய்யர்: ஏன் தேசிய ஜனநாயக முன்னணியிலிருந்து, வெளியேறதுதானே!

மருதமுத்து: சொல்வீர் அய்யரே! ஜாதித் திமிர். ஜெயா மாமி சர்ன்னு கவர்னர் மாளிகைக்குப் போனார். தஸ்புஸ்னு ஆங்கிலத்தில் கவர்னரிடம் பேசினார். அவர் பிராமணர். தஸ்புஸ்ஸ¬ன்னு பிரதமர் கிட்டே - அவர் ஒரு பிராமணர். நூலும் நூலும் ஒட்டிக்கிட்டா- எதிரி காலை- கையை வெட்டிப் புட்ட மாதிரிதான். இருக்கிற ஒரே ஆதரவு - ஜனநாயகக் கூட்டணியையும் விட்டுட முடியுமான்னு துக்ளக் கிண்டலடிச்சிருக்காரே! அவர் ஒரு பிராமணர்!

மன்னார்சாமி: அடப்பாவிகளா! 66ம் 6ம் - 72 உசிரு; எவனாவது கவலைப்படறானா? என்ன கீழ்த்தரமான அரசியல் பாத்தீங்களா?

வெங்கடேசய்யர்: ஹா, ஹா, ஹா! கீழ்த்தரம்னு நீ கூட சொல்றே! ஆனால் முரசொலிமாறன் தி.மு.க. பொதுக் குழுவில் என்ன பேசினார் தெரியுமா - ஷோக்கு சுந்தரங்களை ஓரங் கட்டணும் - மணிப்பூர் மொழியைத்தான் (சட்டசபையை எரிப்பது) அரசு புரிஞ்சிருக்கும்; டெகல்காவுக்கு காங்கிரஸ் பாராளுமன்றத்தை நடக்காம பண்ணினாங்க. நீங்க என்ன பண்ணப் போறீங்க - இப்படில்லாம் 200 பேருக்கு முன்னால பொதுக்குழுவுல பேசினா ஒரே ஒரு தி.மு.க.காரர் சில லட்சங்களுக்கு இந்த பேச்சு வீடியோ டேப்புகளை ஜெயலலிதாவுக்கு போட்டு காட்டியிருக்க மாட்டாரா? அரசுத் தரப்பு ஆதாரங்களில் இந்த டேப்புகள்தான் முக்கிய பகுதியாம்.

மன்னார்சாமி: இருங்க சாமி. நெஞ்சை அடைக்குது. நூறு மில்லி போட்டுக்கிறேன்.

வெங்கடேசய்யர்: அய்யோ, அய்யோ, பட்டப்பகலில் அதுவும் எங்க முன்னாடியே சாராயமா?

படிப்பகம்

www.padippakam.com



**மன்னார்சாமி:** கடவுளே, கடவுளே! எனக்குக் கிடைக்கிற சம்பாத்தியத்தில் சாராயமா குடிக்க முடியும்? சென்னை மக்களுக்கு தினப்படி தேவையான குடிதண்ணீர் தேவையான 3200 மில்லிக்கு பதிலா இப்ப 800 மில்லிதான் கிடைக்குதாம். செய்தி தெரிஞ்ச உடனே தண்ணியை செருப்பு பெட்டிக்குள் வெச்சி பூட்டிட்டேன். அதைத்தான் கொஞ்சம் குடிச்சிக்கிறேன்னேன்.

**மருதமுத்து:** சத்தம் போடாம குடி. சன் டி.வி.க்கு தெரிஞ்சா - பேரணி பற்றிய உரையாடல் கேட்டு செருப்புத் தைக்கிற தொழிலாளிக்கு மாரடைப்புன்னு சொல்லிடுவாங்க.

**வெங்கடேசய்யர்:** அதானே! எங்கேயோ செத்த வன்னிய அடிகள் - கருணாநிதி கைதால் சாவுங்கிறாங்க, பெருமாள் - எம்.எல்.ஏ. - பேரணி வன்முறை பார்த்து சாவுங்கிறாங்க. ஜெயா டி.வி.யும் - சன் டி.வி.யும் டமால், டுமீல், பச்சைப் பொய் - பகாசுரப் பொய்ன்னு இறங்கிட்டாப் போல இருக்குதே, டி.வி. இல்லாத அரசியல் கட்சி - உளி முறிஞ்ச சக்கிலி கதை மாதிரி ரொம்பப் பரிதாபம்.

**மருதமுத்து:** விவரம் புரியாதவரா இருக்கீரே - அய்யரே! தமிழகத்துக்கு அய்ந்து முதலமைச்சர்கள் சினிமா உலகத்திலிருந்து வந்தவர்கள். அடுத்த பத்து முதல்வர்கள் டி.வி. உலகத்திலிருந்து வரவேண்டாமா?

**மன்னார்சாமி:** உண்மையான அரசியல் வட இந்தியாவுல்தான் சாமி. நல்ல பாராளுமன்ற உறுப்பினரா இருந்த பூலான் தேவியை ஒரே போடா போட்டுட்டாங்களே!

**மருதமுத்து:** அதுதான் உண்மையான அரசியலா! தொடர் கற்பழிப்பு வேலையில் ஈடுபட்ட டாகுர் மேல் சாதிப் பயல்களை பூலான் தேவி சுட்டுத் தள்ளியிருக்கலாம். ஆனா அதுக்குப்பின்னாடி - முறையா சரணடைந்து முறையா சிறை தண்டனை அனுபவிச்ச பிறகு கொல்றானுங்க. இந்தியா டுடே மாதிரி தரங்கெட்ட பத்திரிகை - துப்பாக்கி எடுத்தவள் கதை துப்பாக்கியால் முடிந்தது என்கிறது. உத்திரப் பிரதேச மீனவர்கள் என்ன சொல்றாங்க தெரியுமா - கதை முடிந்ததா - ங்கறாங்க. ஆக மேலும் கொலை விழலாம்.

**வெங்கடேசய்யர்:** நினைச்ச மாதிரியே டாக்டர் ராமதாஸ் நடுத் தெரு நாராயணனாயிட்டாருய்யா.

**மருதமுத்து:** பின்னே? ராமதாஸ் என்ன அஜித்சிங்கா, தமிழ்நாடு என்ன உத்திரப் பிரதேசமா? உத்திரப் பிரதேசத்தில் தேர்தல் வருது. அதனால் அஜித்சிங்குக்கு பதவியோடு கூட வரவேற்புப் பத்திரம் பிஜேபியில். வாஜ்பேயி குடுமி வீணுக்கு ஆடுமா?

**மன்னார்சாமி:** ராமதாசுக்கு வீரவன்னியர் பேரவைன்னு புது தலைவலி வேறங்க!

**வெங்கடேசய்யர்:** எத்தனை வீர வன்னியருக்கு - பாரத் இன்சினியரிங் கல்லூரியில்- ஜெரூசலம் இஞ்சினியரிங் காலேஜில் இலவச சீட் குடுத்தார்ன்னு ஜெகத்ரட்சகன்கிட்டே விசாரிக்கணும். வன்னியர் ஓட்டுக்கு மட்டும் எல்லா வன்னியத் தலைவரும் ஜொள்ளு விடறா!

**மருதமுத்து:** தலைவலி கேசு - அதிமுகவிலும் இருக்கு அய்யரே. வளர்மதி ஜெபராஜ்னு அமைச்சர் - மதுரை கலெக்டர் பஜாஜை - சாராய லைசன்ஸில் உதவலைன்னு சிவகங்கைக்கு தூக்கி அடிச்சதா பேச்சு.

**வெங்கடேசய்யர்:** சத்தமா பேசாதீரும். ஜெயா மாமி - அதுக்கு ஒரு கமிஷன் போட்டாலும் போடுவா. ராமன் கமிஷன் - பக்தவத்சலம் கமிஷன் - மூணு மாசத்தில் இரண்டு கமிஷன்னா - 5 வருடத்துக்கு 40 கமிஷன் கணக்காறது.

**மன்னார்சாமி:** ஏஞ்சாமி - கமிஷன் வாங்கிட்டு வேலை செய்யறதினாலே இதுக்கெல்லாம் கமிஷன்னு பேரா?

**வெங்கடேசய்யர்:** அப்புடிப் போடு! கமிஷன் வாங்கிட்டு வேலை செய்தவர் இன்னிக்கு நிலவரத்தில் யூ.டி.அய். சுப்பிரமணியம்தான். 1998ல் ஜெயா மாமி - கட்டாயப்படுத்தி வாஜ்பேயி கிட்ட சுப்பிரமணியத்துக்கு அந்த வேலையை வாங்கினார்ன்னு - ஜார்ஜ் பெர்னாண்டஸ் சொல்றார். எவ்வளவு கமிஷன் கொடுத்தாரோ! இப்ப சில ஆயிரம் கோடி - பொதுமக்கள் பணம் ஸ்வாகா! எவ்வளவு கமிஷன் வாங்கினாரோ! யூ.டி.அய். விவகாரம் நிதி அமைச்சர் யஸ்வந்த் சின்காவுக்கு தெரியும்கிறார். பிரதமர் அலுவலகத்துக்கும் தெரியுமாம். பிரதமரின் வளர்ப்பு மருமகன் ரஞ்சன் பட்டாச்சார்யாவுக்கும் தெரியுமாம். பிரதமர் வாஜ்பேயிதான் பெரிய ஊழல் மன்னன் - என்கிற மாதிரி ஆர்.எஸ்.எஸ். எம்.பி. நிருபம் குரல் வளையை பிடிச்சுக்கிட்டார். நல்லா பிடி ராஜான்னு குழாய் புகையர் பால் தாக்கரே குஷாலா இருக்கார்.

www.padippakam.com



மருதமுத்து: பலே பலே! தமிழ்நாட்டு நாடகத்துக்கு மேலே சூப்பர் நழாடகமா இருக்கே! சிவாஜியோடவே நடிப்புக் கலை செத்துதுன்னு மடையன்கள் விஷயம் தெரியாம புலம்பறான். இப்ப அரசியல்தான் பெரிய நடிப்பு மேடை.

**வெங்கடேசய்யர்:** உச்சக்கட்ட காட்சி - ராஜிநாமா, ராஜிநாமான்னு கத்தி கிட்டே வாஜ்பேயி மேடையில் இந்தப் பக்கமிருந்து அந்தப் பக்கம் ஓடினார். வேண்டாம் - வேண்டாம் என்று சிலர் அந்தப் பக்கமிருந்து இந்தப் பக்கம் ஓடினார்கள். உச்சியிலிருந்து ஒரு ஆகாசக் கப்பலில் இறங்கினபடியே - உங்களுக்காக - ஆமாம் உங்களுக்காக - ராஜிநாமாவைத் திரும்பப் பெற்றேன் - என்றார் வாஜ்பேயி. தபதபவென்று 60 பேர் மெஷின்கன் - சகிதம் கோபாலபுரத்தில் வந்து இறங்குகிறார்கள். கருணாநிதிக்கு 'இஸட்' பிரிவு பாதுகாப்பாம்.

**மன்னார்சாமி:** அடடா! நூறு டி.வி. - ஒரே சமயம் பாக்குறது மாதிரி இருக்கு சாமி. யாரிடமிருந்து கருணாநிதிக்கு பாதுகாப்பாம்?

**மருதமுத்து:** வேறு யாரிடமிருந்து? ஜெயலலிதாவிடமிருந்தும், தமிழ்நாட்டுப் போலீஸிடமிருந்தும்தான்.

**மன்னார்சாமி:** *(செருப்பை தரையில் படபடவென அடித்து)* கொன்னுட்டீங்க சாமி! நான் கோபாலபுரத்திலும் ஆலிவர் சாலையிலும் கொலைகாரர்களும், கொள்ளையர்களும் வந்தாங்களோன்னு பயந்தேன். போலீஸ் அவ்வளவு மோசமா?

**வெங்கடேசய்யர்:** மோசமா இல்லையான்னு எனக்குத் தெரியாது. 1977ல் இந்திரா காந்தி மீது போட்ட ஒரு வழக்கில் - ஒரு எஃப்அய்ஆர் தாக்கல் செய்தார்கள் கோர்ட்டில். அதில் இந்திரா காந்தி கோழிக் குஞ்சுகளைத் திருடினார் என்று இருந்தது. காரித்துப்பி - நீதிபதி அதைத் தள்ளுபடி செய்தார். சரி ஸ்வீட் கொடுத்தேனே - என்ன விசேஷம் என்று கேட்டீர்களா?

**மன்னார் சாமி, மருதமுத்து:** என்ன விசேஷம் கிருஷ்ணபகவானே!

**வெங்கடேசய்யர்:** எழுந்து நின்று ஜோரா கை தட்டுங்க. தமிழ்நாடு ஜென்ம சாபல்யம் அடைந்து விட்டது. தமிழ்நாட்டு எம்.பி.க்களும் பாராளுமன்றத்தை இரண்டு நாள் நடக்காமல் செய்து விட்டார்கள். அதுக்குத்தான் ஸ்வீட்.

★

## புரட்சி வணக்கம்



புரட்சிக்காரி எனும்
புகழ்ந்துரைக்கு
முற்றுமாய்ப் பொருந்தாமற்
போனாலும் என்ன?
பூலான் தேவி....!

வெடித்துச் சிதறிய
பூகம்பம் நீ
வீரத்தின் அடையாளப்
போர்ப்பறை நீ

தொண்ணூறு வயது
வாழ்க்கையின் சோகம்
பதினோரு வயதிலேயே
பதம்பார்த்தது

வெறிநாய்களின்
பாலியல் பசி
பலமுறை உன்னை
மேய்ந்தது
உன்னுள் குமைந்த
கோபமும் தவிப்பும்
தள்ளிய வாழ்க்கையால்
கொள்ளைக்காரி நீ

காயப்படுத்தியோர்
கணக்கை முடித்தாய்
களத்தில் பெண் புலியாய்
வரலாற்றில் நிலைத்தாய்!

படகோட்டும் சாதியாளுக்குப்
பாராளுமன்றமா?
சத்திரிய வம்சத்தின்
ரஜபுத்திர ரத்தம்
ஒப்புமா?

சம்பூகச் சாதிகள்
தலைகள்தான்
தப்புமா?

திருந்திய வாழ்க்கைக்குத்
திரும்பியும்
திருந்தாதவர்களால்
தீர்ந்தே போனாய்

கலக்கத்தை விளைவித்த
கலகக்காரியே
உன் போர்க்குணத்துக்குப்
புரட்சி வணக்கம்!

- தமிழேந்தி

www.padippakam.com



# உழுதொழிலா? அழுதொழிலா?

து.தில்லைவனம்



'உலகமயமாதல்' என்பது கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்திய வேளாண் விளை பொருள்கள் சந்தையைப் பெருமளவில் பாதிக்கத் தொடங்கியுள்ளது. உலக வணிக ஒப்பந்தத்தின் கோரப் பற்கள் இன்னும் முழுமையாக வெளியே தெரியவில்லை. இன்னும் ஓரிரண்டு ஆண்டுகளுக்குள் நம் நாட்டு வேளாண் விளைபொருள்கள் அனைத்திற்குமான சந்தை கற்பனைக் கெட்டாத அளவுக்குப் பாதிப்பிற்கு உள்ளாகப் போகின்றது.

தேயிலை, தானியப் பயிர்களான நெல், கோதுமை, மக்காச் சோளம், எண்ணெய் வித்துக்களான மணிலா, எள் முதலியவைகளும், தேங்காயும் (கொப்பரைத் தேங்காய் உட்பட) கடுமையான விலை குறைவைச் சந்திக்க நேர்ந்தது அனைவரும் அறிந்ததே.

பொதுவாகக் காய்கறிகள், பழங்கள், தானியங்கள் போன்றவை மிகுதியாக உற்பத்தியாகும் காலங்களிலும், இடங்களிலும் மிகக் குறைவான விலைக்கு விற்கப்படுவதும், அவை கிடைத்ததற்கரிய காலங்களில் மிக அதிக விலையில் விற்கப்படுவதும் நாமனைவரும் அறிந்தவொன்றே.

பெரும்பாலான ஆண்டுகளில் தக்காளியின் விலை அதன்

உற்பத்தி இடங்களில் - உபரி உற்பத்திக் காலங்களில் - சில நாள்களில் கிலோ 25 பைசாவுக்கு விற்பது உண்டு. அருந்தலான காலங்களில் அந்த இடங்களிலேயே கிலோ முப்பது ரூபாய்க்கு மேல் விற்பதும் உண்டு.

ஏனைய காய்கறிகள், மலர்கள், பழங்கள், வெற்றிலை முதலிய

அழுகும் பொருள்களிலும் ஏறத்தாழ இதுபோன்ற ஏற்றத் தாழ்வுகள் நிகழ்வதும் உண்டு. ஆனால் இங்கெல்லாம் விலை இறக்கம் என்பதும், விலை ஏற்றம் என்பதும் மாறி மாறி வந்து கொண்டிருந்தன.

ஆனால் கடந்த இரண்டு ஆண்டுகளாக இறங்கிய கொப்பரையின் விலை ஏறவே இல்லை. ஏறுமுகம் உண்டாவதற்கான அறிகுறிகளையே காணோம்.

மன்மோகன் சிங்குகளோ, ப.சிதம்பரங்களோ, முரசொலி மாறன்களோ - அவர்கள் வெவ்வேறு கூட்டணியில் இருந்து கொண்டு அரசியல் நடத்திக் கொண்டிருந்தாலும் இந்த நாட்டில் உள்ள 100க்கு 70 மக்களின் வாழ்க்கையை வறண்டு போகச் செய்யும் இத்தீமை பற்றி வாய் திறப்பதே இல்லை. அவர்கள் ஒவ்வொருவரும் இத்தீமை வருவதற்கு ஆற்றிய பங்கு அளவிடற்கரியது.

இவர்களுக்குக் கரையை உடைக்கத் தெரியுமே ஒழிய உடைப்பை அடைக்கத் தெரியாது.

தமிழ் நாட்டில் இப்போது புதிதாக இந்த விலைவாசி வீழ்ச்சிக்கு ஆளாகி இருப்பவர்கள் மரவள்ளிக் கிழங்கு பயிரிடும் விவசாயிகளாவார்கள்.

சேலம், ஆத்தூர், கள்ளக் குறிச்சிப் பகுதிகளில் பல்லாயிரக்கணக்கான எக்டேர் பரப்பில் மரவள்ளிக் கிழங்கு பயிரிடப்படுகின்றது. இக்கிழங்குகள் முழுவதும் சவ்வரிசி ஆலைகளுக்கே அனுப்பப்படுகின்றன.

சவ்வரிசி - ஸ்டார்ச் - சேகோ ஆலைகள் இங்கு நூற்றுக்கணக்கில் உள்ளன. இவ்வாலைகள் சென்ற ஆண்டில் 73 கிலோ மரவள்ளிக் கிழங்கு மூட்டை ஒன்றுக்கு ரூபாய் 350 விலையாகக் கொடுத்தன.

ஆனால் 2001லோ, ஒரு மூட்டையின் எடையை 75 கிலோவாக ஆக்கிக் கொண்டதுடன், மூட்டைக்கு ரூபாய் 125 மட்டும்தான் கொடுக்கின்றனர்.

ஆலையின் சொந்தக்காரர்கள் சவ்வரிசி - ஸ்டார்ச் முதலிய பொருள்களின் விலை குறைந்து விட்டதைக் காரணம் காட்டுகின்றனர். இந்தக் கிழங்குகளைப் பயிரிடுவோர் இவற்றை வேறு விதமாகப் பயன்படுத்த முடியாது.

ஆனால் மரவள்ளிக் கிழங்கு பயிரிடுபவர்களோ தங்களுடைய விளை பொருளுக்கு இவ்வளவு மோசமாக - ஏறத்தாழ மூன்றில் ஒரு பங்கு மட்டுமே கிடைக்கும் வண்ணம் - ஒரே ஆண்டில் விலை குறைக்கப்பட்டு விட்டதைக் கண்டு அதிர்ச்சி அடைந்துள்ளனர், செய்வதறியாது திகைத்துக் கொண்டுள்ளனர்.

பணப் பயிரான மரவள்ளியைப் பயிரிட்டுக் கையைச் சுட்டுக் கொண்ட விவசாயிகள் செய்வதறியாது திண்டாடுகின்றனர்.

அவர்களைக் கைதூக்கி விட மாநில அரசு

படிப்பகம்

www.padippakam.com



முன்வரவில்லை. மய்ய அரசுக்கு இது ஒரு பிரச்சனையாகவே தெரியவில்லை.

அத்துடன் வேறொரு செய்தியைக் காண்போம்.

கடந்த நான்கு ஆண்டுகளாகவே மய்ய அரசாங்கத்தில் பல கட்சிகளின் கூட்டணிகளின் ஆட்சி நிலவுகின்றது. இக் கூட்டணிகளில் பல்வேறு மாநிலக் கட்சிகள் இணைந்துள்ளன. மய்ய அரசாங்கத்தின் தனிப் பெரும்பான்மை இல்லாத தன்மையைப் பயன்படுத்திக் கொண்டு பஞ்சாப், அரியானா, ஆந்திரா முதலான மாநில ஆளுங் கட்சிகள் தத்தம் மாநில விவசாயிகள் விளைவித்த தானியங்களுக்கு நல்ல விலையைப் பெற்றுத் தந்திருக்கின்றன. ஆந்திரா தான் விளைவிக்கும் நெல் இரகங்கள் சிலவற்றின் தரத்தை உண்மைக்கு மாறாக உயர்த்தி நல்ல விலை பெற்றிருக்கின்றது.

பஞ்சாப், அதிக மழையின் காரணமாக நிறம் மாறிவிட்ட நெல்லை, உணவுக் கழகம் வாங்க மறுத்த நெல்லை, மய்ய உணவுக் கழகம் வாங்கியே ஆக வேண்டுமென்று வற்புறுத்தி - அவசியம் நேரிட்ட போது அரசியல் அடிப்படையில் அச்சுறுத்தி - தம் மாநில விவசாயிகள் விளைவித்த நெல்லுக்கு நல்ல விலை பெற்றுத் தந்தது.

மேலும் அரிசி ஆலைகள் பெறும் ஒவ்வொரு 100 கிலோ நெல்லுக்கும் 67 கிலோ அரிசி தரவேண்டும் என்றிருந்த நடைமுறையை மாற்றி, 64 கிலோ அரிசி தந்தால் போதும் என பஞ்சாப் மய்ய அரசிடம் இருந்து ஆணை பெற்றது. இந்த ஒரு நடவடிக்கையின் மூலம் மட்டுமே பஞ்சாப் 250 கோடி ரூபாய் உபரி வருமானம் பெற்றது.

உத்தரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராசஸ்தானம், ஒரிசா, மகாராட்டிரம் முதலிய மாநிலங்களும் தத்தம் மாநில விவசாயிகள் பாதிப்பிற்கு உள்ளான போது, மய்ய அரசுடன் வாதாடிப் போராடி விவசாயிகளுக்கு ஓரளவுக்காவது ஞாயமான விலைகள் கிடைக்க வழி செய்தன.

ஆனால் தேவ கவுடா காலம் முதலே மய்ய ஆட்சியில் பங்கு பெற்று, முக்கிய அமைச்சரவைப் பொறுப்புகளை வகித்து வந்த, வகித்து வருகிற தி.மு.க., அ.தி.மு.க., த.மா.கா., பா.ம.க., ம.தி.மு.க ஆகிய கட்சிகளைச் சார்ந்தவர்கள் ஒருமுறையேனும் தமிழ்நாட்டு விவசாயிகள், கிராமப்புற மக்களின் அவலம் நீங்க மய்ய அரசுடன் எதையாவது வாதாடிப் பெற்றிருக்கின்றார்களா என்பதை எண்ணிப் பாருங்கள்.

தமிழ்நாட்டு வேளாண் மக்களுக்குப் பிரச்சனைகளே இல்லையா?

உழவுத் தொழில் செய்வோரின் பிரச்சனைகளைத் தமிழ்நாட்டு அரசியல்வாதிகள் கண்டு கொள்ளவே மறுக்கின்றனர். அவர்களுடைய கவனத்தை ஈர்க்கும் வண்ணம் தமிழக உழவர்கள் எந்த அதிரடிப் போராட்டத்தையும் கடந்த பல ஆண்டுகளாகவே மேற்கொள்ளவில்லை.

அடிக்கடி வரும் தேர்தல்களின் போதுகூட, தங்களுடைய பிரச்சனைகள் பெரிதாகப் பேசப்படும் அளவுக்கு அவர்கள் அழுத்தம் தரவில்லை.

இந்த நிலை மாறியே ஆக வேண்டும்.

மய்ய அரசாங்கத்தின் புதிய பொருளாதாரக் கொள்கையின் விளைவாகவே தாங்கள் இதுபோன்ற எதிர்பாராத பொருளாதார நெருக்கடிகளுக்கு ஆளாக நேரிடுகின்றதென்ற உண்மை நிலையை அறியாதவர்களாகவே நம் நாட்டு வேளாண் மக்கள் வைக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலைமையும் மாறியே ஆக வேண்டும். விவசாயிகள் கிளர்ந்தெழுந்து போராடினால்தான் அவர்களுக்கு ஏற்பட்டுள்ள அவல நிலை மாறும்.

## நூல் வெளியீட்டு விழாக்கள்

### 'ஞானத்திலிருந்து' - கவிஞர் உலகநாதன்

*28.7.2001* அன்று திருவண்ணாமலை டி.எம். மேனிலைப் பள்ளியில் கவிஞர் உலகநாதனின் 'ஞானத்திலிருந்து' கவிதைநூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. கவிஞர் ஏ.டி.எம். பன்னீர் செல்வம் தலைமையில், புலவர். சா. அருள்வேந்தன் பாவைச் செல்வி வரவேற்றார். கவிஞரின் பெற்றோர் மங்கையம்மாள் - ஏகாம்பரம் நூலை வெளியிட; ஆகாஷ் உணவு விடுதிகள் உரிமையாளர் பொறிஞர். எஸ்.ஆர். முத்து கிருட்டிணன் நூலின் முதல் படியைப் பெற்றுக் கொண்டார். இலக்கியத் தென்றல் ப. கண்ணன், இயக்குநர். வ. கவுதமன், கவிஞர் தமிழேந்தி, பேராசிரியர் இன்குலாப் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினர். கவிஞர். உலகநாதன் ஏற்புரையாற்ற ஓவியர் சோ.ஏ. நாகராசன் நன்றி கூறினார்

### 'கவியரசர் என் காவலர்' - பழநெடுமாறன்

தமிழ் முழக்கம் நூல் வெளியீட்டகத்தின் சார்பில் *4.8.2001* அன்று சென்னை தியாகராய நகர் நடிகர் சங்கக் கட்டடத்தில் நூல் வெளியீட்டு விழா கவிஞர் அப்துல் ரகுமான் தலைமையில் நடைபெற்றது. ம.தி.மு.க பொதுச்செயலாளர் வைகோ நூலை வெளியிட, பேராசிரியர் சுபவீ உள்ளிட்டோர் நூலைப் பெற்றுக் கொண்டு உரையாற்றினர். பழ நெடுமாறன் ஏற்புரை நிகழ்த்தினார்.

### 'திருக்குறள் தென்னவன்' - பேராசிரியர் இரா சோதிவாணன்

சோராதே பதிப்பகத்தின் சார்பில் *15.8.2001* அன்று ஆர்க்காடு கம்சலாம்பாள் திருமணக் கூடத்தில் பேராசிரியர் அலிபூர் ரகீம் தலைமையில் நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாத் தலைவர் நூலை வெளியிட மருத்துவர் பெ. பாலகிருட்டிணன் நூலின் முதற்படியைப் பெற்றார். வழக்கறிஞர் தெ. சமரசம், கவிஞர் தமிழேந்தி, முனைவர் அரங்க. இராமலிங்கம் உள்ளிட்டோர் சிறப்புரையாற்றினார். பேராசிரியர் இரா. சோதிவாணன் ஏற்புரையாற்ற வேலூர் 'உதவும் உள்ளங்கள்' தலைவர் இரா. சந்திரசேகரன் நன்றி கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com



# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி புதிய வரலாறு படைக்க விரும்புகிற பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டம்

தோழர்களே!

வணக்கம். மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுக்குழு உறுப்பினர்களின் ஆய்வுக் கூட்டம், 9.9.2001 ஞாயிறு காலை சரியாக 9 மணிக்கு,

சென்னையில் திருவல்லிக்கேணியில், நீலி வீராசாமி தெருவிலுள்ள தமிழ்நாடு அரசு அலுவலர், ஒன்றியத்தில் சிவ. இளங்கோ கட்டடத்தில் நடைபெறும்.

வரலாறு படைக்கிற சீரிய செய்திகள் பற்றி நாம் கலந்துரையாடி முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

அருள் கூர்ந்து இதனையே அழைப்பு மடலாக ஏற்றுத் தவறாமல் அனைத்துப் பொதுக்குழு உறுப்பினர்களும் வருகை தர வேண்டுகிறேன்.

**ஆய்வுக்கு உரிய பொருள்கள்**

1. சிந்தனையாளன் - பெரியார் ஊழி **(PERIYAR ERA)** ஏடுகள் வெற்றியாக வெளிவர வழிவகை செய்தல்.
2. 17.9.2001இல் பெரியார் பிறந்த நாள் விழாவுக்கு ஏற்பாடு செய்தல்
3. சுயமரியாதை இயக்கப் பவழ விழா, மா.பெ.பொ.க. வெள்ளி விழா, சிந்தனையாளன் பொங்கல் மலர் வெளியீடு பற்றி முடிவு செய்தல்.
4. பெரியாரின் கொள்கைகள் நிலை பெறுவதற்கான நிரந்தர ஏற்பாடுகள்.
5. மற்றும் உறுப்பினர்கள் கொணரும் பொருள்கள்.

தோழமையுள்ள

**31.8.2001** **வே.ஆனைமுத்து**

அமைப்புக் குழுச் செயலாளர், மா.பெ.பொ.க.

# முப்பெரும் விழாச் சிறப்பு மலர்

## சுயமரியாதை இயக்கப் பவழ விழா

**(26.12.1926 - 26.12.2001)**

## மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிவெள்ளி விழா

**(8.8.1976 - 8.8.2001)**

## சிந்தனையாளன் 2002 பொங்கல் மலர் வெளியீட்டு விழா

முதலான மூன்று விழாக்களை முன் வைத்த

## முப்பெரும் விழா மலர்

புதிய செய்திகளைத் தாங்கி,

புதிய வரலாறு படைப்பதாக வெளியிடப் பெறும்.

முழு விவரம் 2001 அக்டோபர் இதழில் வெளிவரும்

ஆசிரியர் குழு,

**'சிந்தனையாளன்'**

படிப்பகம்

www.padippakam.com



# கர்நாடகத்தில் பெரியார் புகழைப் பாடி வந்த குயில் பறந்து விட்டது!



15, ஆகஸ்டு, 1948ல் பிறந்த வி.என். சம்பத், மிதம் மீறிய சர்க்கரை நோய் காரணமாக, 26, சூலை 2001 அன்று திடீரென முதிராச் சாவு அடைந்தார். தோழர் சம்பத் அவர்களின் மறைவு எந்த வகையிலும் ஈடுகட்ட முடியாத பேரிழப்பாகும்.

பெரியார் மடியில் தவழ்ந்த பெருமையுடைய இவருக்கு அறிவுலக ஆசான் அய்யா அவர்கள்தான் 'சம்பத்' என்ற பெயரைச் சூட்டியவர்.

இவரது தந்தையார் திரு. வே.நாராயணசாமி, 1941ல் பெங்களூரில் கருநாடக திராவிடர் சங்கத்தைத் தோற்றுவித்த பெருமைக்கு உரியவர் ஆவார். 1989ல் தான் மறையும் வரையிலும் அவர் அச்சங்கத்தின் தலைவராக இருந்து அரும்பணி ஆற்றி வந்தார். அவருடன் இணைந்து அந்தச் சங்கத்தின் செயலராகப் பணியாற்றிய பூ.அ. கொடையரசன் 1993 ஆம் ஆண்டு மறைவுற்றார். இவ்விருவராலும் கட்டிக் காக்கப்பட்ட கருநாடக திராவிடர் சங்கத்திற்குத் தன் தந்தையின் மறைவிற்குப் பின் தலைமைப் பொறுப்பை ஏற்ற வி.என்,சம்பத் 1989 வரை அதில் நீடித்தார்.

இதற்கிடையே 1978 ஆம் ஆண்டு வாக்கில் கர்நாடக திராவிடர் சங்கத்தின் ஓர் உறுப்பாகத் தோற்றுவிக்கப்பட்ட 'சிந்தகரச்சாவடி' என்பது கன்னட நூல் வெளியீட்டு அமைப்பாகும். திரு. வி.என். சம்பத் அவர்கள் அதன் தலைவராகப் பொறுப்பேற்று தனது சொந்தச் செலவிலேயே பெரியார் கருத்துகளை (வேமண்ணாவால் கன்னடத்தில் எழுதப்பட்டவை) 25க்கு மேற்பட்ட குறுநூல்களாகக் கன்னட மொழியில் வெளியிட்டுக் கர்நாடகமெங்கும் பரப்பிய பெருமைக்குச் சொந்தக்காரர் ஆவார். சிந்தகரச்சாவடியின் பொருளாளராகப் பணியாற்றிய திரு. பொன். இளவழகன் அவர்கள் 1994ல் இயற்கை எய்தி விட்டதால் நூற் பதிப்புப் பணி தொய்வுற்றுப் போனது. அந்த நேரத்தில்தான் 'பெரியார் பவன்' என்னும் தனது புது இல்லத்தைத் தோழர் சம்பத் கட்டினார். 1997ல் நடந்த அந்த இல்லத்தின் திறப்பு விழாவில் தோழர்கள் வே.ஆனைமுத்து மற்றும் சங்கமித்ரா ஆகியோரின் முன்னிலையில் 'பெரியார் வாழ்க்கை வரலாறு' என்னும் கன்னட நூல் ஒன்றினை வெளிக் கொணர உறுதி பூண்டவர்தான் தோழர் சம்பத். அந்த நூல் தட்டச்சு நிலையிலேயே நின்றுகொண்டிருக்கிறது. சிந்தகரச்சாவடியின் தூண்கள் இரண்டு சாய்ந்து விட்டன. இது இந்த அமைப்பிற்கு ஈடு செய்ய முடியாத பேரிழப்பு என்பதை எவரே மறுக்க முடியும்?

தோழர் சம்பத் அவர்கள் வள்ளன்மை மனம் படைத்தவர். கொள்கை பற்றிய சொல்லாடலில் அவர் மிகவும் வல்லவர். நல்ல உயரம்; உயரத்திற்கேற்ற உடல்வளம்; சிம்மக்குரல்; செம்மாந்த நோக்கு, வருவிருந்து வைகலும் ஓம்பி இனி வரப் பேகிற விருந்தினரைக் காத்திருந்து வரவேற்று உபசரிக்கும் உயர்ந்த பண்பாட்டினை வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித்து வந்தவர். பெரியார் தொண்டர்களிடம் பரிவும் பற்றுதலும் கொண்டு பொதுக்கூட்டம், மாநாடு, நூல் வெளியீடு, குடும்ப நிகழ்ச்சிகள் ஆகிய அனைத்து நடவடிக்கைகளிலும் முந்திக் கொண்டு பங்கேற்கும் பெருந்தகையாளர் சம்பத் அவர்கள் என்று சொன்னால் அது மிகையாகாது!

**வாழ்க சம்பத் அவர்களின் புகழ்!**

## மங்கலங்கிழார் தமிழ் விருது வழங்கும் விழா

24.8.2001 அன்று மாலை 3 மணியளவில் திருவள்ளூர் மாவட்டம் அத்திமாஞ்சேரிப் பேட்டை அரசு மேனிலைப் பள்ளியில் தமிழறிஞர் மங்கலங்கிழார் தமிழ் விருது வழங்கும் விழா நடைபெற்றது. பள்ளித் தலைமையாசிரியர் கெ.வெங்கடசுப்பய்யா தலைமை தாங்கினார். மங்கலங்கிழார் கல்வி அறக்கட்டளை பொறுப்பாளர் கவிஞர் தமிழேந்தி சிறப்புரையாற்றினார். ம.கி.சிவானந்தம், கோவி. இராதாகிருட்டிணன், பு.வெ. முருகேசன், புலவர் ஆறுமுகம், மே.வெங்கடேசனார், மருத்துவர் சிட்டிபாபு உள்ளிட்டோர் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். +2 மற்றும் 10ஆம் வகுப்பு அரசுப் பொதுத் தேர்வுகளில் தமிழ்ப் பாடத்தில் முதலிடம் பெற்ற மாணவர்கள் ஆ.இராசிவ்காந்தி, ந.பாஸ்கரன், செ.ரேவதி ஆகியோர்க்குப் பரிசுகளும் பாராட்டு மடல்களும் வழங்கப்பட்டன. ஆசிரியர் ச.த. கார்த்திகேயன் நன்றி கூறினார்.

படிப்பகம்

www.padippakam.com



# இரங்கல் செய்திகள்

## வி.என்.சம்பத் நீத்தார் நினைவுநாள்

தோழர் வி.என். சம்பத் அவர்களின் 'நீத்தார் நினைவு நாள்' 5, ஆகஸ்ட் 2001 அன்று அவரது இல்லமாகிய பெரியார் பவனில் (ஆர்.பி.சி. லே அவுட், பெங்களூர் - 40) பகல் 11 மணி அளவில் வி.சி. வேலாயுதம் தலைமையில் நடைபெற்றது. உறவினர்களும் நண்பர்களும் திராவிட இயக்கத் தோழர்களும் பெரிய எண்ணிக்கையில் நிகழ்வில் பங்கு கொண்டனர்.

வீ.மு.வேலுவின் தொடக்க உரைக்குப் பின், தலைவரின் ஆற்றாமை உரையும், தொடர்ந்து அருமைத் தோழர்கள் பெரியார் மிஷன் அமைப்பாளரும், வழக்குரைஞருமான சிரிதர மூர்த்தி, மேநாள் கருநாடக மாநிலக் கல்வித் துறை இயக்குநர் எஸ்.சம்பங்கி, தி.க. காப்பாளர் வி.சி.கிருஷ்ணன், தலைவர் எம். ஜானகிராமன், செயலர் எம்.ரெங்கநாதன், தொண்டர் ஆர்.செயராமன், சிந்தகரச் சாவடி பொருளாளர் இள.பழநி ஆகியோர் இரங்கலுரை ஆற்றினர். ஆர்.ராகண்ணா கன்னட மொழியாக்க இரங்கலுரையைப் படித்துத் தம் துயர உரையை நிகழ்த்தினார். மறைந்த தோழர் சம்பத்தின் இளவல் வே.நா.நீரகமணி நன்றி கூற, நிகழ்வு நிறைவுற்றது. மறைந்த தோழரின் தாயார் திருமதி வெங்கட்டம்மாள், துணைவியார் திருமதி ராசலட்சுமி, மகன் கௌதமன், மகள்கள் வித்யா ராணி, திவ்யா, உடன் பிறந்தோர் மற்றும் அவர்களது குடும்பத்தைச் சேர்ந்தோர் அனைவரது ஆற்றாமைக்கு ஆறுதலாக பண்டித நேரு ஆங்கிலப் பள்ளி பிரின்சிபால் டாக்டர் நிரஞ்சன் குமார் அவர்கள் தனித்தனியே அரவணைப்பு நல்கியது கூடியிருந்தோரின் ஆற்றாமைக்கு ஆறுதலாக அமைந்தது.

கூட்டத்தின் முடிவில் சிரிதரமூர்த்தி அவர்கள் 'சம்பத் விசார கேந்திர' என்கிற பெயரில் ஒத்த கருத்துடைய தோழர்கள் ஒருங்கிணைந்து மாதாந்திரக் கூட்டங்கள் நடத்திக் கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள வேண்டும் என்றார். கூட்டத்தினர் ஆற்றாமைக்கிடையிலும் இந்த நல்ல யோசனையைக் கைதட்டி வரவேற்று ஒப்புதல் நல்கினர்.

செய்தி: வி.இரத்தினம்
வி.சி. வேலாயுதம்

## த. பழனிசாமி மறைவு

ஆண்டிமடம் ப.நடராசன் தந்தையார் த.பழனிசாமி (ஓய்வு பெற்ற ஆசிரியர்) 10.8.2001 அன்று இரவு இயற்கை எய்தினார். ஆசிரியர் குழுவின் சார்பில் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## திருத்தணி க.ப. செயவேலனார் மறைவு

சிறந்த குழந்தைக் கவிஞர் புலவர் க.ப. செயவேலனார் 29.7.2001 அன்று திருத்தணியில் மறைவுற்றார். ஆண்டுதோறும் வெளியாகும் சிந்தனையாளன் பொங்கல் மலரில் அவர் படைப்புகள் இடம் பெறத் தவறுவதே இல்லை. திருத்தணிப் பகுதியில் தமிழ் உணர்வாளர்கள் ஒன்றுபட்டுச் செயல்பட சிறந்ததோர் பாலமாக விளங்கிய அன்னாரின் மறைவுக்கு ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறோம்.



## ஏர்வாடி தீ விபத்து குற்றவாளிகளைக் கைது செய்க!

ஏர்வாடி மனநலக் காப்பகத்தில் 25 மனநல நோயாளிகள் தீ விபத்தில் உயிரிழந்துள்ளனர். காப்பகப் பொறுப்பாளர்கள், தொடர்புடைய தர்கா நிர்வாகிகள் - ஆகியோரைத் தமிழ்நாடு அரசு கைது செய்து விசாரணை நடத்த வேண்டும்; உரிய தண்டனை தர வேண்டும்.

தமிழ்நாடு முழுவதும் உள்ள, கோவில்கள் மற்றும் தர்காக்களின் பொறுப்பிலுள்ள மனநலக் காப்பகங்களை உடனடியாகத் தமிழக அரசு எடுத்து நடத்த வேண்டும்.

மனநோய் மருத்துவத்தை ஆங்கில மருத்துவமல்லாத பாரம்பரிய மருத்துவர்கள் செய்வதற்குத் தமிழக அரசின் நிபுணர் குழு அமைத்து விதிமுறைகளை உருவாக்க வேண்டும். இந்துக் கோயில்கள், சர்ச்சுகள், தர்காக்கள் நடத்தும் மனநலக் காப்பகங்கள் இழுத்து மூடப்பட வேண்டும்.

தமிழ்நாடு அரசு இங்குள்ள மன நோயாளிகளுக்கு ஆங்கில முறையில்இலவச மருத்துவமளிக்க மாவட்டத் தலைநகரங்களில் உடனடியாகக் காப்பகங்கள் அமைக்க வேண்டும்.

சிறுபான்மையினர் வாக்கிற்காக தர்கா நிர்வாகங்களின் மனித நேயமற்ற சுரண்டலைக் கண்டிக்கத் தயங்கும் திராவிடக் கட்சிகளை வன்மையாக கண்டிக்கிறேன். இப்பிரச்சினைக்கு உரிய தீர்வுகள் கூறிய தமிழ் மாநில காங்கிரஸையும் மற்ற கட்சிகளையும் பாராட்டுகிறேன்.

8-8-2001

ந. அப்துல் ரகுமான்
ஆங்காங்

படிப்பகம்

www.padippakam.com





# தில்லி மாநகரில்
# தந்தை பெரியார் ஈ.வெ. இராமசாமி அவர்களின் 123 ஆம் பிறந்த நாள் விழா

| | | |
|---|---|---|
| விழா நாள் | : | 23.9.2001 - ஞாயிறு |
| நேரம் | : | பிற்பகல் 3 மணி முதல் இரவு 8 மணி வரை |
| இடம் | : | தில்லித் தமிழ்ச் சங்கம் - கூட்ட அரங்கம், இராம கிருஷ்ண புரம், புதுதில்லி |
| வரவேற்புரை | : | திரு. மணியன், செயலாளர், தில்லித் தமிழ்ச் சங்கம் |
| தலைமை | : | திரு. வே. ஆனைமுத்து, புரவலர் - தலைவர், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை |

**பிறந்த நாள் மலரை வெளியிட்டு உரை**

திரு. செஞ்சி . ந. இராமச்சந்திரன்
மாண்பு மிகு நிதித்துறை இணை அமைச்சர், இந்திய அரசு

**சிறப்புரையாற்றுவோர்**

திரு. விஸ்வநாத் பிரதாப் சிங்
இந்திய அரசின் முன்னாள் தலைமை அமைச்சர்

திரு. முலாயம் சிங் யாதவ், நாடாளுமன்ற உறுப்பினர்
இந்திய அரசு முன்னாள் பாதுகாப்புத் துறை அமைச்சர்

திரு. நீதிபதி அஜித்சிங் பெயின்ஸ், தலைவர், பஞ்சாப் மனித உரிமை அமைப்பு

திரு. இராம் அவதேஷ் சிங், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்
தலைவர், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை

திரு. பேராசிரியர். மு.க. சுப்பிரமணியன்
முன்னாள் முதல்வர், சி.நா.கல்லூரி, ஈரோடு

திரு. பேராசிரியர் ஹுக்கும் சிங் யாதவ்
பொதுச் செயலாளர், அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை

திரு. முனைவர் து. மூர்த்தி
விரிவுரையாளர், அலிகர் முஸ்லிம் பல்கலைக்கழகம்

**மலரின் முதல்படி பெறுபவர்**

திரு. பியாரிலால் லோதி, தலைவர், உ.பி. ஒடுக்கப்பட்டோர் பேரவை

நன்றியுரை : திரு. ச. தமிழரசு, பொதுச்செயலாளர் அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர் பேரவை

அன்பு கூர்ந்து அனைவரும் வாரீர்

**விழா அமைப்பு:**

புதுதில்லி
11.9.2001

- தில்லித்தமிழ்ச்சங்கம்
- பெரியார்தொண்டுநிறுவனம்
- அனைத்திந்திய ஒடுக்கப்பட்டோர்பேரவை
- மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி

படிப்பகம்

www.padippakam.com



## ஆசிரியருக்கு மடல்

### தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் பெ.மணியரசன் மா.பெ.பொ.க. சூளுரையை வரவேற்று மடல்

அன்பு மிக்க தோழர் அவர்கட்கு,

வணக்கம். 2001 ஆகஸ்ட் சிந்தனையாளன் இன்று அஞ்சலில் வந்தது. அடுத்த மாத இதழ் முதல் மாத இறுதியிலேயே வந்து விடுவது சிந்தனையாளன் இதழின் சிறப்பு. தங்கள் மற்றும் ஆசிரியர் குழுத் தோழர்களின் உழைப்பின் பலன் அது. ஆகஸ்ட் இதழில் தாங்கள் எழுதியுள்ள ஆசிரியவுரை, ஒவ்வொரு முனையிலும் வெளிச்சம் பாய்ச்சி அடையாளம் காட்டுவதாக, தெளிவுபடுத்துவதாக உள்ளது. தந்தை பெரியாரின் அரசியலைத் தாங்கள் துல்லியப்படுத்தி, எடை போட்டு, வரையறுத்துக் காட்டியுள்ளீர்கள். தங்களுடைய வசதிக்கேற்பப் பெரியாரைக் குறுக்கிக் கொள்ளும் சிலர்க்கு இந்த வரையறுப்பு ஆணித்தரமான மறுப்பு. பெரியாரை ஆழமாகப் புரிந்து கொள்ளாத இளைஞர்களுக்குத் தக்க வழிகாட்டி. தமிழ்த் தேசத் தன்னுரிமை என்கிற முழுமையை நோக்கித் தமிழக மக்கள் நடைபோடச் செய்வதை மா.பெ.பொ.க.வின் வெள்ளிவிழா ஆண்டுச் சூளுரையாக வெளிப்படுத்தியுள்ளீர்கள். தோழமைக் கட்சியினர்க்கும் இதையே தெரிவித்துள்ளீர்கள்.

மிக்க மகிழ்ச்சி. தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சிக்குத் தங்கள் சூளுரையில் முழு உடன்பாடு உண்டு என்பதைத் தங்களுக்கு அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தோழமையுள்ள,
பெ.மணியரசன்
தஞ்சாவூர்

31.7.2001

### உங்களின் கவலையைப் புரிந்து கொள்வார்களா?

அன்புடன் ஐயா, வணக்கம்.

சிந்தனையாளன் (ஆகஸ்டு 2001) இதழில் 'தமிழ்நாட்டிற்கு ஓர் அவலம்; நடக்கக் கூடாதது நடந்து விட்டது!'' கட்டுரையைப் படித்தேன். சிந்தனைத் தெளிவுடனும் கவலையுடனும் எழுதப்பட்டு இருந்தது அது. கடந்த காலத்தின் மேல் இன்றைய நிகழ் காலத்தைக் காட்டி எதிர்காலமே நம்முன் ஓர் அறைகூவலாக இருப்பதை உண்மைத் தமிழின - திராவிட இயக்க உணர்வுடன் எழுதியிருக்கின்றீர்கள். ஒவ்வொரு தமிழின உணர்வினனும் படித்துத் தெளிய வேண்டிய கட்டுரை அது. எதிர்காலத்தில் அவனுக்கான பொறுப்பை அதில் எச்சரிக்கையாக அறிவுறுத்தி இருக்கின்றீர்கள். தமிழ்த் தேசியம் பேசும் அத்தனை சிறிய பெரிய இயக்கத் தலைவர்கட்கும் இக்கட்டத்தில் இஃதோர் அரிச்சுவடிப் பாட விளக்கம். படித்துப் புரிந்து கொள்வார்களா? படித்துப் புரிந்து கொண்டாலும் உண்மையின் பக்கம் வருவார்களா? வரவேண்டும்.

இன்றைக்கு இருப்பவர்களில் நீங்கள் ஒருவரே தந்தை பெரியார் அவர்களின் சரியான உண்மையான எச்சம். தமிழினம் பற்றித் தாங்கள் வெளிப்படுத்தியிருக்கும் கவலையை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது.

இவண்: பாவலர் இளஞ்சித்திரன், ஓட்டேரி

## வாழ்க்கைத் துணை ஒப்பந்த விழா

### பூ. இராகவன் - அ. அன்பரசி

23.8.2001 அன்று நமங்குணம் ந.ப. அன்பழகன் - செந்தமிழ்ச் செல்வி இவர்களின் மகள் அன்பரசிக்கும், நமங்குணம் மறைந்த பூவராகசாமி - அன்னம்மாள் இவர்களின் மகன் இராகவனுக்கும் அரியலூர் ஸ்ரீமுருகன் திருமணமண்டபத்தில் வே.ஆனைமுத்து தலைமையில் திருமணம் சிறப்புற நடைபெற்றது. கிருட்டிணமூர்த்தி, இராசா சிதம்பரம், புலவர் நாத்திகநம்பி, வேணுகோபால், இராமசாமி, து.தில்லைவனம், ஞானமூர்த்தி, பெருநற்கிள்ளி, கருணாகரன், மகாதேவன் ஆகிய தோழர்கள் வாழ்த்துரை வழங்கினர். ந.ப. அன்பழகன் நன்றி கூறினார்.

## 'கொடிமலர் தோற்றம்'

ஓய்வு பெற்ற மின்வாரியப் பொறியாளர் க. வீரமுத்து - காவிரி இணையரின் செல்வன், பொறியாளர் கோக்கோதை - பொறியாளர் கீதா லட்சுமி இணையருக்கு 21.7.2001 காரி (சனி) நாளன்று, ஆவடியில் பெண் மகவு பிறந்தது. இக்குழந்தைக்குக் 'கொடிமலர்' எனப் பெயரிட்டுள்ளார்கள். இதன் மகிழ்வாக, 'சிந்தனையாளன்' ஏட்டின் வளர்ச்சிக்கு உருபா 200/- அளிக்கப்படுகிறது.

## மக்கள் நேய மருத்துவ முகாம்

தமிழக மனித உரிமைக் கழகம் ஒருங்கிணைந்து நடத்தும் மாபெரும் மக்கள் நேய மருத்துவ முகாம் 26.8.2001 அன்று காலை 8 மணியில் இருந்து இரவு 8 மணி வரை பட்டுக்கோட்டை மங்கள மாதா மக்கள் மன்றத்தில் நடைபெற்றது. இரா. காந்தாராவ் வரவேற்புரை ஆற்ற, அரங்க. குணசேகரன் அறிமுக உரை நிகழ்த்தினார். கருத்தரங்க கலந்துரையாடல் நிகழ்ச்சியும் நடைபெற்றது.

## தமிழ்த் தேசியப் புத்தகச் சந்தை

சென்னை தியாகராயநகர் மேல்நிலைப் பள்ளியில் 18.8.2001 காலை 9 மணிக்குத் தமிழ்த் தேசியப் புத்தகச் சந்தையைத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ.நெடுமாறன் அவர்கள் தொடங்கி வைத்தார். 19.8.2001 இரவு வரை புத்தகச் சந்தை விற்பனை இருந்தது.

மருத்துவர் சு.நரேந்திரன் அவர்களின்
'அறிவியல் தமிழின் தேவை' தொடர் கட்டுரை
அடுத்த இதழில் இடம்பெறும்

படிப்பகம்

www.padippakam.com

## சிந்...

| பெயர் | | |
|---|---|---|
| டாக்டர் பெ. இளங்கோவன் | | |
| ச.நாத்திக நந்தனார் | | |
| ஓர் அன்பர் | | ..00 |
| வ.அருவி, வ.அரிமா | | 10.00 |
| சீ.இளமதி, சீ.அகிலா | சென்னை | 20.00 |
| முத்து அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அழகு அன்பழகன் | சீர்காழி | 10.00 |
| அ. அறிவுக் கடல்- இராஜ்குமார் | சிதம்பரம் | 10.00 |
| க.முகிலன் | சோளிங்கபுரம் | 50.00 |
| கி.கலை | சோளிங்கபுரம் | 50.00 |
| க.குப்புசாமி | சோளிங்கபுரம் | 50.00 |
| ஜெ.அய்.ஏ.காந்தி | எறும்பி | 10.00 |
| வள்ளி விசயன் | திருக்கோவிலூர் | 20.00 |
| பகுத்தறிவன் | அரக்கோணம் | 25.00 |
| ந.அப்துல்ரகுமான் | சென்னை | 300.00 |
| சி.பி.ச. அறிவொளி | இரும்புலிக்குறிச்சி | 50.00 |
| நா.இளங்கோ | அரக்கோணம் | 100.00 |
| ந. கருணாகரன் | திருச்சி | 25.00 |
| ப.ம.அதியமான் | திட்டக்குடி | 25.00 |
| ப.ம. மதிஒளி | திட்டக்குடி | 25.00 |
| ~~ஆ.முத்தமிழ்ச் செல்வன்~~ | ~~புத்தனாம்பட்டி~~ | ~~100.00~~ |
| ~~ந.கருணாகரன்~~ | ~~பொள்ளாச்சி~~ | ~~25.00~~ |
| ~~அ.இராமசாமி~~ | " | ~~25.00~~ |
| ~~எம்.தாசிபாண்டி~~ | " | ~~25.00~~ |
| ~~ஆர்.இரத்தினமூர்த்தி~~ | " | ~~25.00~~ |
| ~~டி.சரவணன்~~ | " | ~~25.00~~ |
| ~~என். இளமுருகன்~~ | ~~திட்டக்குடி~~ | ~~20.00~~ |
| ~~கி.சேதுவராக~~ | ~~கோவை~~ | ~~20.00~~ |
| ~~ந.சேரன் - த.பவானி திருமண மகிழ்வாக~~ | ~~பரம்பைகுடி~~ | ~~100.00~~ |
| ~~அன்பழகன் அன்பு அச்சகம்~~ | ~~காஞ்சிபுரம்~~ | ~~100.00~~ |
| ~~என்.எஸ்.கே. இலட்சுமணன்~~ | ~~சென்னை~~ | ~~100.00~~ |
| ~~புலவர் வடமலை~~ | ~~பெரிய வெண்மணி~~ | ~~100.00~~ |
| ~~பாரிவள்ளல் சபதியார்~~ | ~~மண்ணுழி~~ | ~~25.00~~ |
| ~~செல்வி ஆறுமுகம்~~ | ~~கீழையூர், திருக்கோவிலூர்~~ | ~~40.00~~ |

### மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி

| | | |
|---|---|---|
| ந. அப்துல் ரகுமான் | சென்னை | 300.00 |
| கி.விடுதலை | சோளிங்கபுரம் | 50.00 |
| சுகுணா - வடிவேலு | சென்னை | 10.00 |

...மை ...யக் ...ளத் தமக்கே உ... இலக்கிய, இலக்கண அறிவு நுட்பத்தோடு ஆய்வு செய்துள்ளார். விலை ரூ.40 வெளியீடு: பாவேந்தர் பதிப்பகம், சீரகம், திருமழபாடி, அரியலூர் மாவட்டம் 621 851

### தமிழ மல்லன் பாக்கள்

புதுவையில் அரிமாப் பாவலர் தமிழமல்லன் அவர்களின் பாத்தொகுப்பு நூல். "தால் சுதாயின் நூலைப் படித்ததனால் காந்தியடிகளின் கொள்கையில் மாற்றம் ஏற்பட்டது போல் தமிழமல்லனின் பாக்களைப் படிப்பவரிடம் மாற்றம் ஏற்பட்டால் நன்று' என அவரே நூலின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ள வாறு மொழி, இன, நாட்டுணர்வைத் தூண்டும் தன்மையில் நறுந்தமிழ்த் துணுக்குகளாய்ப் பாக்கள் அமைந்துள்ளன. தனித்தமிழின் மேன்மை நூல் முழுவதும் முரசு கொட்டுகிறது. விலை ரூ.50 வெளியீடு: தனித்தமிழ் பதிப்பகம், 64, தட்டாஞ் சாவடி, புதுச்சேரி 605 009

### முழக்கம்

கவிஞர் பூவை அமுதன் அவர்களின் மரபுப் பாக்களால் அமைந்த தொகுப்பு நூல். மொழி, நாடு, மக்கள், உயர்ந்தோர், களம் கண்ட கவிதைகள் என்கிற பல்வேறு தலைப்புகளில் அமைந்த பாடுபொருள்கள் எளிமையும், இனிமையும் நிறைந்தவை. விலை. ரூ.40. வெளியீடு: கலையமுதம் பதிப்பகம், மனை எண்.142, இரண்டாம் தெரு, பாஸ்கர் காலனி, சென்னை 600 092.

### புளியங்கொட்டை முளைப்பது எந்நாள்? கடன் அடைப்பது எந்நாள்

பொங்கி வரும் வெள்ளத்தை இருகையால்
தடுத்தல்போல், புற்று நோயாம்
வெங்கொடிய பிணி ஒழிக்கச் சுக்குத்தூள்
விழுங்குதல்போல், வெறிகொண் டோங்கும்
செங்கண்மத யானையினைச் சிறுகூழாங்
கல் எறிந்து தெழித்தல் போலும்
வன்கொடிய ஆங்கிலத்தின் வன்முறைக்குத்
தமிழ்ப்பள்ளி மாற்றம் ஆமோ?

உமி குற்றிக் கைசலித்தோம்; மலைகல்லி
எலிபிடித்தோம். உணர்ச்சியின்றி
அமைகின்ற ஆட்சியிலும் உயர்கல்வி
அரங்கினிலும் ஆங்கிலப் பேய்
நமை ஆளவிட்டுவிட்டுக் கீழ்நிலையில்
சிலர் மட்டும் நடத்து கின்றோம்
தமிழ்ப்பள்ளி! புளியங்கொட்டை முளைப்பதெந்நாள்?
நமது கடன் அடைப்ப தெந்நாள்?

-ம.இலெ.தங்கப்பா.

(நன்றி: "தெளிதமிழ்" மாத ஏடு 17.8.2001)


மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக வெளியிடுபவர், ஆசிரியர்: வே.ஆனைமுத்து, 19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை - 5. அச்சுக்கோப்பு: 'நம் பிராசஸ்', சென்னை-18. அச்சிட்டோர்: பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம், சென்னை-5. தொலைபேசி: ;852 28 62

படிப்பகம்

www.padippakam.com

Licenced to post without prepayment WPP No. 344
Registrar of Newspapers of India under licence No. 24452 / 74. 'Sinthanaiyalan' TN/ Chief PMG/618/2001

# செப்டம்பர் பதினேழு



சாதித்தே
விட்டார்கள்
சதிகாரர்கள்
சாதியும்
இனமும்
வேறுவேறு
என்று
சாதித்தே
விட்டார்கள்
சதிகாரர்கள்

தீண்டாமை
பற்றிப் பேச
டர்பன் மாநாட்டில்
தடை

ஐ.நா. சபையில்
உறுப்பினர் இடமா?
அயலகத் தூதுவ
அமைச்சுப் பணியா?
அனைத்திலும்
அவாளே!

புண்ணின்
நோக்காட்டைப்
பூணூல்அறியாது
சேரிப் புலம்பலைச்
சிவப்புத் தோல்
ஏற்காது!

கறுப்பனும்
கறுப்பனுமே
இணங்க
மறுக்கிறான்
இங்கே!

கவலையில்
இது பெரிய
கவலை

வாக்கு வேட்டைக்கு
மட்டுமே
தலித் ஒற்றுமை
கள்ளவோட்டுமிங்கே
பள்ளு பறைக்கில்லை

மேலவளவு
முருகேசன் உயிரும்
கண்ட தேவியின்
ஓடாத தேரும்
இட்டு
நிரப்பவொண்ணா
இடைவெளியா?
இந்நிலை
தொடர்வது
இனிச் சரியா?

எப்படித் தீரும்
இங்கே நெருக்கடி?
மோதலை நிறுத்த
முதல்படி
சாதித் திமிருக்குத்
தரவேண்டும்
சவுக்கடி!

குளித்தாலும்
போகாத



அழுக்காய்
மூளையில் -
மூவாயிரம் ஆண்டுச்
சனாதனக் கொழுப்பு

அங்கே ஒர்
அம்பேத்கர்
இங்கே ஒரு
பெரியார்

போராளிகளாலும்
பொழுது விடியவில்லை

செப்டம்பர்
பதினேழு
சுயமரியாதைச் சுடரின்
தோற்றுவாய் நாள்

திண்ணைப் பேச்சுக்குத்
தீவைப்போம்!
ஈரோட்டுக் கிழவரின்
எண்ணங்கள் செயலாக்க
எண்ணங் கொள்வோம்!

- 'தமிழேந்தி'

19, முருகப்பா தெரு (மாடி), சேப்பாக்கம், சென்னை-600 005. தொ.பே.எண். 852 28 62

படிப்பகம்